தமிழ்த் தேசம்

# உரிமைத் தமிழ்த் தேசம்

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4தேசம்: 1 திருவள்ளுவர்ஆண்டு 2051 கார்த்திகை / நவம்பர் 2020 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா

தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be


## தேசத்தின் குரல்:

## பாஞ்சாலத் தீ பைந்தமிழ் நாட்டையும் பற்றுக!



மறப் போர் முற்றுகைகளை வரலாற்றில் பல முறை சந்தித்துள்ள தில்லி இப்போது ஓர் அறப் போர் முற்றுகையைச்

## உள்ளே...


1. தேசத்தின் குரல் -1
2. தமிழீழத் தேசிய மாவீரர் நாள்!-6
3. தமிழ்நாடு நாடாகட்டும்!- 7
4. சோசலிச 'சுமையை'த் தின்று தீர்ப்பது யார்?-11
5. தீரன் திண்ணியன் தேசத் தலைவன்-21
6. கியூபாவின் புரட்சிப்பெண்கள் (9)-28
7. அழகியலும் மார்க்சியமும்-38
8. நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில் (13)-57
9. அரசியல் வகுப்பு: பாடக்குறிப்புகள்-62
10. டாலருக்கு வந்த வாழ்வு (8)- 69
11. சூழலியல் வகுப்பு(1)-77



பதிவு எண் :R.Dis. No. 1964/2014

சந்தித்து வருகிறது .இந்திய அரசின் புதிய வேளாண் சட்டங்களை எதிர்த்து இரு திங்களுக்கு மேல் பற்பல வடிவிலும் போராடி வந்த பாஞ்சாலத்து) பஞ்சாப் மாநில (உழவர் பெருமக்கள் இந்தியத் தலைநகர் தில்லி நோக்கிப் புறப்பட்டார்கள் .அரியானா ,இராஜஸ்தான் ,மேற்கு உத்தரப்பிரதேச உழவர்களும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார்கள் .




இந்த மூன்று வேளாண் சட்டங்களையும் இயற்றிய இந்திய அரசு உழவர்களோடு பேசுவதற்கு மாறாக தில்லியின் எல்லைகளில் பெருங்குழிகள் வெட்டிப் படைகளையும் அடக்குமுறைக் கருவிகளையும் குவித்து உழவர்கள் இந்தியப் பேரரசின் தலைநகருக்குள் நுழைய விடாமல் தடுப்பதில்தான் குறியாக இருந்தது .உழவர்கள் மீது குளிர்நீர்ப் பீரங்கிகளும் கண்ணீர்ப் புகையும் தடியடியும் ஏவப்பட்டன .ஆனால் உழவர்கள் அற வலிமை கொண்டும் ஆத்திரமூட்டலுக்கு இரையாகாத உறுதி கொண்டும் ஆட்சியாளர்களின் சூழ்ச்சியை முறியடித்தனர் . வழிமறித்தவர்களே இப்போது வழிமறிக்கப்பட்டவர்களாகித் தவிக்கிறார்கள் .

தில்லி இப்போது உழவர்களின் முற்றுகைப் பிடியில் சிக்கிக் கொண்டு விட்டது . இயற்கையமைவில் நிலம்சூழ்ந்த தில்லி நகரம் இப்போது மக்கள்கடல் சூழ்ந்த நகரமாகி விட்டது .

இப்போது உள்துறை அமைச்சர் அமித்ஷா உழவர்களை தில்லிக்குள் வரச் சொல்கிறார் . போராட்டம் நடத்துவதற்குத் திடல் ஒதுக்கிக் கொடுக்கிறார் .அது திடல் இல்லை ,திறந்தவெளிச் சிறை என்பது உழவர்களுக்குப் புரிந்து விட்டது .அவர்கள் உறுதியாக மறுத்து விட்டார்கள் . பேச்சுவார்த்தைகளில் உழவர்களுக்குப் பாடம் நடத்த முயன்ற அதிகாரிகளுக்கு உழவர் தலைவர்கள் பாடம் நடத்தியுள்ளார்கள்.

உழவர்களை இந்திய அரசு நெடுங்காலமாகவே வஞ்சித்து வருகிறது கடந்த எழுபதாண்டு காலத்தில் அரசு அவர்களுக்குத் தந்த எந்த வாக்குறுதியையும் காப்பற்றவில்லை .குறிப்பாக இப்போதைய நரேந்திர மோதி அரசு வாயாலேயே வடைசுடுவதை அவர்கள் நன்கு உணர்ந்து கொண்டு விட்டார்கள் .

புதிய வேளாண் சட்டங்களின் செயல்பாட்டால் சிறும அடிவிலை) MSP) என்ற ஒன்றே இல்லாமற்போய் விடும் என்று உழவர்கள் எடுத்துக்காட்டுகின்றார்கள் .அரசுக் கொள்முதல் , விளைபொருளுக்குக் கட்டுப்படியான விலை ,நியாய விலைக் கடைகள் .உணவுப் பாதுகாப்பு ... எல்லாமே பழங்கதையாகிப் போகும் என்று உழவர்கள் அச்சப்படுகின்றார்கள் .

இந்த அரசு பெருந்தொற்றுக் காலத்தைப் பயன்படுத்திக் கருத்துக் கேட்போ உரையாடலோ இல்லாமல் இந்த மூன்று வேளாண் சட்டங்களையும் அவசரச் சட்டங்களாகப் பிறப்பித்தது . நாடாளுமன்றத்திலும் பொருள்பொதிந்த விவாதம் ஏதுமின்றி முரட்டுத்தனமாக இவை சட்டமாக்கப்பட்டன .

குடியுரிமைப் பறிப்புச் சட்டங்களும் ,கொடுங்கோன்மைச் சட்டங்களும் ,சூழல்நலனுக்கு எதிரான சட்டங்களும் இதே முரட்டடி வழியில்தான் கொண்டுவரப்பட்டன .தேசியக் கல்விக் கொள்கை என்ற கல்விமறுப்புக் கொள்கையும் இதே வழியில்தான் வந்தது என்ன செய்தாலும் எதிர்த்துப் போராட மக்களால் முடியாது எனபதுதான் மோதி அரசின் கணக்கு .ஆனால் வயிற்றுக்குச் சோறிடும் உழவனை வஞ்சிக்க வேளாண் சட்டங்கள் என்ற பெயரில் உழவுத் தொழிலைப்

பெருங்குழுமங்களிடம் தாரை வார்க்க அரசு முனைந்த போது இவ்வளவு பெரும் எதிர்ப்பு வரும் என்று ஆளும் கும்பல் எதிர்பார்த்ததில்லை .

பாஞ்சாலத்து உழவர்கள் கிளர்ந்தெழுந்தார்கள் .அரியானா உழவர்கள் அந்த அணிவகுப்பில் சேர்ந்து கொண்டார்கள் .இராஜஸ்தான் ,மேற்கு உத்தரப் பிரதேசம் ஆகிய பகுதி உழவர்களும் களங்கண்டார்கள் .தமிழ்நாடு உட்பட இந்தியாவின் மற்றப் பகுதிகளிலும் போராட்டங்கள் நடந்தன .இவை யாவற்றுக்கும் கொடுமுடியாகத்தான் தில்லி முற்றுகை நடந்து வருகிறது
தில்லிதான் தன் மோசடிச் சட்டங்களால் உழவர் வாழ்வை முதலில் முற்றுகையிட்டது . உழவர்கள் எதிர் முற்றுகையே இட்டுள்ளார்கள் .எனவேதான் தில்லி மீதான உழவர் முற்றுகைக்கு ஆதரவாக இந்தியாவெங்கும் பலதரப்பட மக்களும் போராடி வருகின்றார்கள் .

'மன்கிபாத்'தில்" பாமர "உழவர்களுக்கு மோதி சொல்லும் அறிவுரைகளைக் கேட்டு உழவர் வீட்டு ஏர்கலப்பையும் சிரிக்கிறது .பேச்சுவார்த்தைக்கு அழைத்து மா வல்லுநர்கள் தரும் படவிளக்கங்கள் உழவர்களின் நியாயமான அச்சங்களை வலுவாக்கவே செய்கின்றன .இந்தச் சட்டங்களை விட்டால் ,அங்காடி ஆற்றல்களிடம் சிக்கித் தங்கள் உழவும் வாழ்வும் அழிந்து விடும் என்பதை அவர்கள் ஆழமாக உணர்ந்துள்ளார்கள் .

போராட்டத்துக்குக் காரணமான வேளாண் சட்டங்கள் பற்றி 2020 செப்டெம்பர் இதழ் - தேசத்தின் குரலில்" வேலியுடைக்கும் வேளாண் சட்டங்கள் "என்ற தலைப்பில் நாம் எழுதியிருந்ததை நினைவுபடுத்த விரும்புகிறோம் .இந்தச் சட்டங்கள் மீது நாம் எழுதியது ,மற்றவர்கள் எழுதியது , வேளாண் சீர்திருத்தங்கள் என்ற பெயரில் அவற்றுக்கு முழுமையாகவோ பகுதியாகவோ ஆதரவளித்து வேறு சிலர் எழுதியது ...இவை எல்லாவற்றையும் விட தில்லியின் எல்லையில் ஏர்முனையால் உழவன் எழுதியதே இறுதித் தீர்ப்பாக இருக்க முடியும் .அரசு இந்த வேளாண் சட்டங்களை விலக்கிக் கொள்ள வேண்டும் ,அல்லது ஆட்சியிலிருந்து விலகிக் கொள்ள

வேண்டும் .வேறு வழியில்லை .

மோதி கும்பல் வருந்துமா ?திருந்துமா ?போராட்டத்துக்குரிய நியாயங்களை ஏற்காமல் ,இது எதிர்க்கட்சிகளின் வேலை என்றன ஆர்எஸ்எஸ் ஊதுகுழல்கள் .பிறகு இது காலிஸ்தான் பிரிவினைவாதிகளின் தூண்டுதல் என்றார்கள் .காசுமீர் மக்கள் போராடினால் பாகிஸ்தான் ! பஞ்சாப் மக்கள் போராடினால் காலிஸ்தான் !பஞ்சாப் பாசக தலைவர்கள் சிலரே இந்த அவதூறினை மறுத்துள்ளனர்.

போராட்டத்தை வழிநடத்தும் ஒருங்கிணைப்புக் குழுவில் இடதுசார்பு உழவர் அமைப்புகளும் தற்சார்பான விவசாய சங்கங்களும் முகன்மையாக இடம்பெற்றுள்ளன .இது ஒரு பெருந்திரள் போராட்டம் .இந்த உழவர் போராட்டம் தொழிலாளர்களின் உரிமைக் கோரிக்கைகளை ஆதரிப்பதும் .தொழிலாளர்கள் தமது பொது வேலைநிறுத்தத்தில் உழவர் கோரிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்ததும் நம்பிக்கையூட்டும் செய்திகள் .
யாருக்காக இந்த வேளாண் சட்டங்கள்?இந்த வினாவிற்குரிய விடையும் உழவர்களுக்குத் தெளிவாகத் தெரிந்திருப்பதால்தான் ,அவர்கள் அம்பானி ,அதானி வகையறாக்களுக்கு எதிராகவும் போராடிக் கொண்டிருக்கின்றார்கள் .

ஆர்எஸ்எஸ் வகையறாவின் மதம்சார் பிளவு முயற்சிகள் இந்த உழவர் எழுச்சியின் முன்னே மண் கவ்வி விட்டன .இராமர் கோயில் ,வடமொழி ஆராதனை ,ஊர்ப் பெயர் மாற்றம் , வரலாற்றைத் திருத்துதல் ,மதமாற்றப் பூச்சாண்டி ,லவ்ஜிகாத் புரளி ,பயங்கரவாத மிரட்டல் எதுவும் உழுகுடியிடம் எடுபடவில்லை .

பாஞ்சாலம் மூட்டிய தீ பாசிச எதிர்ப்புப் போராட்டப் பாதைக்கு ஒளியூட்டி நிற்கிறது .இந்தத் தீ பரவும் வகை செய்தல் வேண்டும் .உழவர் போராட்டத்தையும் தொழிலாளர் போராட்டத்தையும் தமிழ்நாட்டில் நாம் முழுமையாக முன்னெடுப்போம் !பாஞ்சாலம் முதல் பைந்தமிழ் நாடு வரை போராட்டத் தீ பற்றிப் படரட்டும் !

## தமிழீழத் தேசிய மாவீரர் நாள்!

தமிழீழத் தாயகத்தின் விடுதலைக்காக சமர்க்களம் கண்டு விதையுண்ட மாவீரர்களுக்குச் செவ்வணக்கம்!

தமிழீழ மக்களின் விடுமை வாழ்வுக்கும் பாதுகாப்புக்கும் தமிழீழத் தனியரசு ஒன்றே வழி என்ற மக்கள் கட்டளையைத் தலைமேற்கொண்டு, விடுதலைக் குறிக்கோளில் உறுதியான நம்பிக்கையுடன் வரலாறாகிப் போன பல்லாயிரம் மாவீரர்களை நெஞ்சிலேந்துவோம்!

உணவும் நீருமின்றி உயிர்வாழ முடியாது என்பது போல் விடுதலையின்றியும் உயிர்வாழ முடியாது என்ற தமிழீழ மக்களின் வரலாற்று வேணவாவை மெய்ப்படச் செய்திட தம்முயிர் தந்த மாவீரர்களை வணங்குவோம்!

ஈழம் என்ற சின்னஞ்சிறு தேசத்தை பன்னாட்டுலக அரங்கில் பேசுபொருளாக்கியது மாவீரர்களின் ஈகம்! சிங்களப் பேரினவாத்தத்துக்கும் இந்தியப் பேரரசியத்துக்கும் அனைத்துலக நாட்டாண்மைகளுக்கும் அறைகூவலானது மாவீரர்களின் வீரம்!

மாவீரர்களை வணங்குவதில் தமிழீழ மக்களுடனும் உலகத் தமிழர்களுடனும் விடுதலையை நேசிக்கும் அனைவருடனும் இணைந்து கொள்கிறோம்!

புவிக் கோளத்தின் கண்டங்களெங்கும் நாடுகள் தோறும் விடுதலைக்காகவும் நீதிக்காகவும் மாற்றத்துக்காகவும் முன்னேற்றத்துக்காகவும் போராடும் அனைத்து மக்களுடனும் நம் மாவீரர்கள் பெயரால் தோழமை கொள்வோம்! குர்து தேசமும் காசுமீரமும் பாலத்தீனமும் தமிழீழம் போலவே நம் மனத்துக்கு நெருக்கமானவை! அரசுகளற்ற தேசங்களின் அணிவகுப்பு புதிய உலகு சமைக்கப் போகும் மெய்ந்நடப்பு நோக்கி முன்னேறுவோம்!

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

# தமிழ்நாடு நாடாகட்டும்!

**தியாகு**

இந்திய ஒன்றியத்தில் அடங்கிய 29 மாநிலங்கள் 7 ,ஒன்றிய ஆட்சிப் புலங்களில் நாடு என்ற பெயர் கொண்ட ஒரே மாநிலம் தமிழ்நாடு மட்டுமே .பெயரில் என்ன இருக்கிறது ?என்று எளிதில் கேட்கலாம் .மல்லிகைக்கு என்ன பெயர் சூட்டினாலும் அது மணம் வீசும் என்பது உண்மைதான் ,ஆனால் யாரும் மல்லிகையை வேறு பெயரால் அழைப்பதில்லை .தமிழ்நாடு என்பது தமிழ்மொழியை அடியொற்றிய பெயர் .

பொது மொழி கொண்ட ஒரு குமுகாயம் புலம் ,பண்பாடு ,பொருளியல் ஆகிய இழைகளால் இணைந்து வரலாற்றில் வளர்ந்து நிலைக்கும் போது தேசம் ஆகிறது என்பது குமுக அறிவியல் .மாந்தக் குலம் முன்னேறிச் சென்று உரிமையும் நிகர்மையும் உடன்பிறந்தமையும் தழைக்க மக்கள் கூட்டங்கள் தேசங்களாக அமைந்து ஒவ்வொரு தேசமும் அரசுரிமை அல்லது இறைமை பெறுவது வரலாற்றின் கட்டளை ஆகிறது .

பிரெஞ்சுப் புரட்சி தொடங்கி பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதற்பாதியிலும் ஐரோப்பாவில் தொழிற்புரட்சியின் பகைப்புலத்தில் அடுக்கடுக்கான குடியாட்சியப் புரட்சிகள் நிகழ்ந்து முடியாட்சியமும் கிழாரியமும் போப்பாளுமையும் சமயக் குருக்களின் மேலாண்மையும் தூக்கி வீசபட்ட போது , மொழிவழித் தேசங்கள் அரசுகளாக உருப்பெற்றன .ஐரோப்பிய வரலாற்றில் இந்தச் செயல்வழி தேச அரசுகளின் உருவாக்கம்) nation-state formation) என அழைக்கப்படுகிறது .இந்தச் செயல்வழி இல்லாமல் குடியாட்சியம் நிறைவு பெறாது .

கிழாரியத்துக்கும் முடியாட்சியத்துக்கும் எதிரான போராட்டத்தில் போலவே அயலாரின் வன்குடியேற்ற ஆளுமைக்கு எதிரான போராட்டத்திலும் மொழிவழித் தேசங்கள் உருப்பெறும் தேவை எழுகிறது .பேரரசியத்துக்கு எதிரான போராட்டத்தில் மக்கள் திரளக் குடியாட்சியம் தேவை ,இதையே தேசிய இயக்கங்களின் குடியாட்சிய உள்ளடக்கம் என்று தோழர் இலெனின் குறிப்பிட்டார் .அந்தக் குடியாட்சியத்தின் மலர்ச்சிக்கு மொழிவழித் தேசங்களாக மக்கள் ஒன்றுபட்டு உணர்வும் அறிவும் பெற வேண்டும் .வரலாற்று வழி வந்த மொழிவழித் தேசங்களின் மறுமலர்ச்சிக்குரிய தேவை எழுகிறது .இந்தியத் தேசியப் பாவலரான

பாரதியாருக்கு" செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்தேன் வந்து "பாய்ந்ததாம் காதினிலே ! இந்திய சுதேசி இயக்கத்தின் பகுதியாகக் கப்பலோட்டிய வ.உ .சிதம்பரனாரை யாரும் கப்பலோட்டிய இந்தியர் என அழைக்கவில்லை .கப்பலோட்டிய தமிழனாகத்தான் அவர் புகழ் பெற்றார் ,

இந்தியாவின் புதுமக் கால வரலாற்றில் மொழிவழித் தேசங்களின் விடுமைக்கான தேவையை முதலிலேயே கண்டு சொன்னவர் காந்தியார் .இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கும் அடித்தட்டு மக்களின் அணிதிரட்டலுக்குமான தேவையைப் போலவே மொழிவழித் தேசிய இனங்களின் ஓர்மைக்கும் விடுமைக்குமான தேவையையும் அவர் தென்னாப்பிரிக்காவில் நிற வேற்றுமைக்கு எதிரான போராட்டத்தில் கற்றுக்கொண்டார் .தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பும் போதே மொழிவழிக் குமுகாயங்களின் விடுமை பற்றிப் பேசினார் .இந்தியாவுக்கு எவ்வளவு விடுமை தேவையோ அவ்வளவு விடுமை மொழிவழிக் குமுகாயங்களுக்கும் தேவை என்றார் .இந்திய தேசியக் காங்கிரசை மொழிவழியாகப் பகுத்தமைக்க வேண்டும் என்ற கட்டுத்திட்டத்தின் அடிப்படையில்தான் காங்கிரசுக்குத் தலைமையேற்க இணங்கினார்.

ஒரே மொழி பேசும் மக்களைப் போராட்டங்களில் அணிதிரட்டுவது எளிது என்பதைக் காந்தியார் உணர்ந்திருந்தார்1920 .ஆம் ஆண்டு இந்தியத் தேசிய காங்கிரசின் நாகபுரி மாநாட்டில் காந்தியார் தலைமையில் ஒத்துழையாமை இயக்கம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது .அதே நாகபுரி மாநாட்டில்தான் காங்கிரஸ் அமைப்பை மொழிவழியாகப் பகுத்தமைக்கவும் தீர்மானிக்கப்பட்டது . இந்த இரண்டு தீர்மானங்களுக்கும் உயிர்த் தொடர்பு பொருள்பொதிந்த ஒன்று .

நாகபுரி மாநாட்டு முடிவுப்படிதான் சென்னை மாகாண காங்கிரஸ் கலைக்கப்பட்டு தமிழ்நாடு காங்கிரஸ் ,ஆந்திர காங்கிரஸ் ,கர்நாடக காங்கிரஸ் ,கேரள காங்கிரஸ் யாவும் பிறந்தன ,தந்தை பெரியார் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்தார் என்று படிக்கிறோமே , அரசின் பார்வையில் சென்னை மாகாணமாக இருந்த போதே ,தேசிய இயக்கப் பார்வையில் தமிழ்நாடு பிறந்து விட்டது .புதுமக் கால அரசியல் வரலாற்றில் தமிழ்நாடு என்ற பெயர் நூறாண்டு முன்பு மீட்கப்பட்ட வரலாறு இதுவே ,

நாகபுரி மாநாடு பற்றிப் பிற்காலத்தில் எழுதிய அறிஞர் அண்ணா மொழிவழி அமைப்பு முறையின் சிறப்பை விளக்கி அயலாட்சியாளர்கள் அதற்கு எதிராக நின்ற வரலாற்றை

எடுத்துரைத்தார் .

பிரித்தானியரின் பிரித்தாளும் சூழ்ச்சி பற்றி நமக்கு நிறைய சொல்லப்பட்டுள்ளது .Divide and rule என்பார்களே ,அது முதலில் வங்கத்திலேதான் கூர்பார்க்கபட்டது ,கர்சான் பிரபு1905 ஆம் ஆண்டு வங்கத்தை இரண்டாகப் பிரித்தார் .சமூகச் சீர்திருத்தம் ஆனாலும் அயலார் ஆட்சிக்கு எதிர்ப்பானாலும் இந்திய விடுமைப் போராட்ட வரலாற்றில் வங்க மக்கள் முன்னுக்கு நின்ற போது வங்கத்தை சமய அடிப்படையில் இரண்டாகப் பிரித்தது ,இந்த வங்கப் பிரிவினை' வங்க பங்கம் 'என்றே அழைக்கப்பட்டது .

1947 அதிகாரக் கைமாற்றம் வரை மொழிவழி மாநிலச் சீரமைப்பின் தேவை பற்றி நீட்டி முழக்கிக் கொண்டிருந்த காங்கிரஸ் அதன் பிறகு பின்னடிக்கவே முயன்றது .நேரு தலைமையில் அமைக்கப்பட்ட மொழிவழி மாநிலச் சீரமைப்புக் குழு மொழிவழி மாநில அமைப்பைத் தவிர்க்கவே முயன்றது .

ஐதராபாத் சமத்தானத்தின் தெலுங்கு மொழிபேசும் பகுதியில் பொதுமையர் தலைமையில் நடந்த ஆய்தப் போராட்டத்தில் விசாலாந்திரத்தில் மக்கள் ராஜ்யம் என்ற முழக்கம் எழுப்பப்பட்டது .ஆந்திர மாநில அமைப்புக்காக பொட்டி சிறிராமுலு பட்டினிப் போராட்டத்தில் உயிரீகம் செய்தார் ,இந்தப் பின்னணியில்தான்1953 இல் மொழிவழி ஆந்திரம் பிறந்தது . அப்போதே தமிழ்நாடும் பிறந்திருக்க வேண்டும் .ஆனால் காங்கிரசாட்சி இழுத்தடித்து மட்டுமல்ல , தட்சிணப் பிரதேசம் என்று திட்டம் கொண்டுவர முயன்றார் பண்டித நேரு .தமிழகத் தலைவர்கள் யாரும் அதை ஏற்கவில்லை .

ஒருவழியாக 1956 நவம்பர் முதல் நாள் தமிழ்நாடு அமைந்த போதிலும் எல்லையில் பெரும்பரப்பை இழந்தோம் .இன்னும் கூட எல்லைச் சிக்கல் தீர வில்லை என்பதோடு ,இருக்கிற எல்லைகளுக்கும் இந்தியாவில் பாதுகாப்பில்லை .பெரிய கொடுமை என்ன என்றால் தமிழ்நாடு மதராஸ் மாகாணமாகவே இருந்து வந்தது .மொழிவழி மாநிலத்துக்காகவும் தமிழ்நாடு என்று பெயரிடுவதற்காகவும் விருதுநகர் சங்கரலிங்கனார் பட்டினிப் போரில் உயிர் விட்டார் .

1968ஆம் ஆண்டு நம் மாநிலத்துக்குத் தமிழ்நாடு என்று பெயரிடவே கூட இந்தியாவின் ஒப்புதல் தேவைப்பட்டது என்பதை மறக்க முடியாது!

தமிழ்நாட்டின் எல்லைகளுக்கு இந்தியாவில் பாதுகாப்பில்லை எனப்தைத்தான் கச்சத்தீவு இழப்பு நமக்கு வலியுடன் நினைவூட்டுகிறது .தமிழ்நாடு என்ற பெயர் தேவைதான் ,ஆனால் பெயர் மட்டும் போதாது .இறைமை இல்லாத நாடு நாடே ஆகாது .

தமிழ்நாட்டைக் காக்க வேண்டும் .தமிழ்நாட்டை இறைமை கொண்ட நாடாக்கவும் போராட வேண்டும் !

மொழிவழி மாநில அமைப்பின் பகைவர்கள் கையில் நாடு சிக்கியுள்ளது என்பதை மறந்து விடக் கூடாது ,எம் எஸ் கோல்வால்கர்1961 இல் தேசிய ஒருமைப்பாட்டு ஆணையத்துக்கு அனுப்பிய கடிதத்தில்.எழுதினார்:

”இன்றைய கூட்டாட்சி வடிவம் பிரிவினைவாத உணர்வுகளுக்கு வித்திடுவதுடன் அதற்கு ஊட்டமளிக்கவும் செய்கிறது .ஒரே தேசம் எனும் கருத்தாக்கத்தை அங்கீகரிக்க மறுப்பதுடன் அதைச் சிதைக்கவும் செய்கிறது .அது முற்றிலுமாக வேரறுக்கப்பட வேண்டும் .அரசியலமைப்புச் சட்டம் சீரமைக்கப்பட்டு ஒற்றை ஆட்சி நிறுவப்பட வேண்டும்.

“மையப்படுத்தப்பட்டதாக அரசு இருக்க வேண்டும் மாநிலங்கள் என்பவை நிர்வாகரீதியான பிரதேசங்களாக இருக்க வேண்டும் .நமது ஒருங்கிணைந்த ஒற்றுமைக்கு ஊறுவிளைவிக்கக் கூடிய துண்டாடக் கூடிய ,பிராந்தியம் சார்ந்த ,குறுங்குழுவாத மொழி அடிப்படையிலான அல்லது வேறு எவ்விதமான பெருமித உணர்வும் சுவடே இல்லாமல் அழிக்கப்பட்டு ,ஒரே நிலம் ,ஒரே தேசம் ,ஒரே நாடளுமன்றம் ,ஒரே நிர்வாகி என்பது பறைசாற்றப்பட வேண்டும் .இந்தியாவுக்கு மையப்படுத்தப்பட்ட அரசு நிர்வாகமே தேவை .நாட்டை இதற்காக 50 நிர்வாகப் பிரிவுகளாகக் கூட பிரித்து நிர்வகிக்கலாம்“.

கிடைக்கு நரி காவல் !நாம்தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்!

# சோசலிச ‘சுமையை’த் தின்று தீர்ப்பது யார்?:

**சமந்தா**

காங்கிரஸ் ஆட்சியிலிருந்தே தனியார்மயம் ஆரம்பித்த போதிலும், தனியார்மயத்துக்கென்ற பிரத்யேகமாக ஒரு அமைச்சகத்தையே (Ministry of Disinvestment) உருவாக்கிய அவப்பெயர் வாஜ்பாய் அரசையே சேரும். அதன் பிறகுதான் துரிதகதியில் பகுதி பகுதியாகத் தனியார்மயப்படுத்தும் போக்கு தீவிரமடைந்தது. பின்னர் அது தனியார்மயத் துறையாக்கப்பட்டு அதன் பெயர் அதற்கு முற்றிலும் மாறான பொருளில் முதலீடு மற்றும் பொதுச் சொத்து மேலாண்மைத் துறை ‘திபம்’ (DIPAM) என்று மாற்றப்பட்டது. பொதுத்துறை முதலீட்டு மேலாண்மை அமைப்பான திபம் செய்வதென்னவோ தனியார்மயம் மட்டும்தான், மீண்டும் அதன் பெயரை தனியார்மயத் துறை என்று பெயரிடுவதுதான் பொருத்தமாக இருக்கும். தனியார்மயப்படுத்துவதே பாஜகவை பொறுத்த வரை சிறந்த மேலாண்மையாகக் கருதப்படுகிறது. ஆக்கப்பூர்வமான வளர்ச்சியை ஏற்படுத்துவதில் எந்தப் புத்தாக்க முயற்சியும் காண முடியவில்லை, ஆனால் தனியார்மயப்படுத்திப் பொதுச்சொத்துக்களை அழிப்பதற்குத்தான் விதவிதமான புத்தாக்க முயற்சிகளை மேற்கொள்கிறது பாஜக அரசு. திட்டக் குழுவை நீக்கி அதற்கு மாற்றாகக் கொண்டுவரப்பட்ட நவீன தாராளமயத்தின் ஊதுகுழலான நிதி அயோக் இத்தகைய அழிவுவேலைகளுக்கான திட்டமிடலையே செய்து வருகிறது.

1991லிருந்து இது வரை 4,88,827.95 கோடி மதிப்பிற்குப் பொதுத்துறை நிறுவனங்கள் தனியார்மயப்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் தனியார்மயத்தில் 68.7 சதவீதம் நரேந்திர மோதி அரசின் மூலம்தான் செய்யப்பட்டுள்ளது. வாஜ்பாய் அரசையும் கணக்கில் கொண்டால் மொத்தத்தில் 75% தனியார்மயம் பாஜக ஆட்சியில்தான் செய்யப்பட்டுள்ளது. பொதுச் சொத்துக்களில் 75 சதவீதத்தை அழித்துத் தீர்த்து விட்டு சோசலிசச் சுமை பாரமாக இருப்பதாகக் குறைபட்டுக் கொள்கிறது பாஜக அரசு. பொதுத்துறை நிறுவனங்களை சோசலிசச் சுமைகளாகக் காட்டி, அரசை சுமைதாங்கி போல் சித்தரிப்பது பாஜக அரசுக்கு வழக்கமாகி விட்டது. ஆனால் அவற்றின் பங்குகளை விற்றுத் தனியார் துறைக்குத் தீனி போடுவது மட்டும் ருசிக்காமல் இல்லை. பொதுத்துறை நிறுவனங்களின் விரிவாக்கத் திறனையும், புத்தாக்க முயற்சிகளையும் பறிக்கும் விதமாக அவற்றின் நிதிகளை ஒட்டச் சுரண்டி விட்டுத் தனியார் நிறுவனங்களின் கடன்களையெல்லாம் அவற்றின் தலையில் கட்டிய பிறகு பொதுத்துறை நிறுவனங்களால்தான்

நட்டம் ஏற்படுவதாகக் கணக்குக் காட்டி, அவை பெருஞ்சுமையேற்படுத்துவதாகக் கூறி அவற்றைத் தின்றுத் தீர்ப்பதும் மத்தியில் ஆளும் கட்சிகளுக்கு வாடிக்கையாகி விட்டது.

2019இல் நிதி அயோக் 48 பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை தனியார்மயப்படுத்த வேண்டும் என்றும், 28 பொதுத்துறை நிறுவனங்களை முற்றிலுமாக விற்க வேண்டும் என்றும் பரிந்துரைத்தது. தற்போது அடுத்த சுற்றில் விற்க வேண்டிய / தனியார்மயப்படுத்த வேண்டிய பொதுத்துறை நிறுவனங்களை அடையாளமிட்டுப் பட்டியலிடும் ஆக்கப்பூர்வமான பணியை நிதி அயோக் மேற்கொண்டுள்ளது. இத்தகைய ஆக்கப்பூர்வமான பணிகளை மேற்கொள்வதே நிதி அயோக்கின் வாடிக்கையாகி விட்டது.

2014 மே மாதத்தில் பங்குச் சந்தைகளில் பட்டியிலிடப்பட்ட நிறுவனங்களின் மொத்தச் சந்தை மதிப்பில் 22.8 சதவீதமாக இருந்த பொதுத்துறை நிறுவனங்களின் மதிப்பு, மோதி ஆட்சிக்கு வந்த பிறகு 2020இல் 7.7 சதவீதமாக வீழ்ந்துள்ளது. 2020-21இல் தனியார்மயத்தின் மூலம் ரூ. 2.1 லட்சம் கோடி திரட்ட மத்திய அரசு இலக்கு நிர்ணயித்தது. பாதுகாப்புத்துறை, வங்கித்துறை, காப்பீட்டுத்துறை, உரத்துறை, பெட்ரோலியத் துறைகளில் மட்டும் பெயருக்கு நான்கு பொதுத்துறை நிறுவனங்களை வைத்துக் கொண்டு மற்ற அனைத்தையுமே விற்கப் போவதாக முடிவெடுத்துள்ளது மத்திய ஆட்சியாளர்கள் எந்த அடிப்படையில் அவற்றை முக்கியமற்ற துறைகள் என்று முடிவு செய்தார்கள்?

பாஜக அரசு பத்துக்கும் மேற்பட்ட பொதுத்துறை நிறுவனங்களிடம், அவற்றிலுள்ள அரசின் பங்குகளை வாங்குமாறும் அதன் மூலம் அரசுக்கு நிதியளிக்கும் படியும் கேட்டுள்ளது. பொதுத்துறை நிறுவனங்களின் முதலீடுகளை அதிகரிக்க வேண்டும் என்று சொல்லி விட்டு, அவற்றைத் தனியார்மயப்படுத்துவதும், பிறகு அவற்றைச் சுரண்டும் விதமாக அரசுப் பங்குகளை வாங்கச் சொல்வதும், முரண்பாடுகளின் உச்சம், இவர்கள் தேவைப்பட்டால் சுரண்டுவதற்கு சோசலிசச் சுமை தான் தேவைப்படுகிறது. இப்பொழுது வளம் உருவாக்குபவர்களையே கேட்கலாமே, ஏன் முடியவில்லை? வட்டியில்லாமல் ஒற்றை ரூபாய் அவர்களிடம் பெற முடியுமா?

தற்போது பொதுத்துறை வங்கிகளைத் தனியார்மயப்படுத்துவதற்கான ஏற்பாடாகப்

பொதுத்துறை வங்கிகளுக்கு மறுமுதலீடு அளிக்க இயலாது என நிதியமைச்சர் கைவிரித்து விட்டார்.

2020-2025இல் 111 இலட்சம் கோடி மதிப்பில் தேசிய உள்கட்டமைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதாக நிதியமைச்சர் அறிவித்தார். இதில் 21% தனியார் துறையிலிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. அந்த உள்கட்டமைப்புத் திட்டத்திற்கு நிதி பெறுவதற்கான ஒரு புதிய வழியாக சொத்து மறுசுழற்சி / பணமாக்குதல் என்ற திட்டத்தை வெளியிட்டுள்ளது பாஜக அரசு. வளர்ச்சிக்காகச் சொத்துகளை மறுசுழற்சி செய்கிறோம் என்ற பெயரில் பொதுச் சொத்துகளை விற்று 90,000 கோடி திரட்டத் திட்டமிட்டுள்ளது. சாலைகள், நிலம், கட்டிடங்கள் துறைமுகங்கள், ரயில்வே, ரயில் நிலையங்கள், குழாய் வழிகள், பி.எஸ்.என்.எல். மற்றும் எம்.டி.என்.எல் நிறுவனங்களுக்குச் சொந்தமான கோபுரங்கள் போன்ற தொலைத் தொடர்புச் சொத்துகள், துறைமுகச் சொத்துகள், எனத் துண்டு துக்காணி விடாமல் எல்லாப் பொதுச் சொத்துகளையும் விற்பதன் மூலமும், ஒப்பந்த வாடகைக் குத்தகைக்கு விடுவதன் மூலமும் 90,0000 கோடி நிதி திரட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

1961 துறைமுகச் சட்டத்தின் படி துறைமுகத்தின் நிலங்களை விற்க முடியாத படி பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதை மாற்றீடு செய்யும் விதமாக மத்திய அரசால் கொண்டுவரப்படவுள்ள புதிய துறைமுகச் சட்டத்தில் துறைமுக இடங்களை விற்கும் விதமாக விதிகள் மாற்றப்பட்டுள்ளன. அதிலுள்ள பொதுச் சொத்துக்களும், அதன் மூலம் பெற்றுவந்த அரசு வேலைவாய்ப்புகளும் முற்றிலும் பறிபோகும் விதமாகத் தனியாருக்குத் தாரை வார்க்கப்படவுள்ளன. 73,000 கோடிக்கு நிதித் தொகுப்பு கொடுக்கிறோம் என்ற பெயரில் விடுமுறைப் பயணச் சலுகை (LTC), அரசு ஊழியர்களுக்குப் பண்டிகை கால முன்பணம் (ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும்) ஆகியவற்றை மட்டுமே அளித்துள்ளது பாஜக அரசு. தொலைக்காட்சி வாங்கினால் 'ரிமோட்' இலவசம் என்பது போல்தானுள்ளது அரசு அறிவித்துள்ள விடுப்பு, பயணச் சலுகை, அதன் மூலம் வரிவிலக்கு பெற வேண்டுமானால் வரிவிலக்குத் தொகையை விடப் பல மடங்கிற்கு, 12% ஜி.எஸ்.டி. வரிகொண்ட பொருள்களில் செலவழித்தால் மட்டுமே இந்தச் சலுகையை பெற முடியும். வழக்கம் போல் எளிய மக்களுக்கு ஒன்றும் தரப்படவில்லை. இதை நிதித் தொகுப்பு என்பதும் இதன் மூலம் நாட்டின் வேண்டலை அதிகரிக்க முடியும் என்று நம்புவதும் அதீதமான குருட்டு எதிர்பார்ப்பே.

மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டிய ஜி.எஸ்.டி நிவாரணத் தொகையில் 73,000 கோடியை இரண்டு வருடத்திற்குப் பிறகே அளிக்க முடியும் எனக் கூறியுள்ளது மத்திய அரசு. மாநிலங்கள் பெறக் கூடிய 0.5% கூடுதல் கடனுக்கு வட்டிச் சேவை அளிக்கவும் மத்திய அரசு முன்வரவில்லை. கடன் சந்தையில் அரசு கடன் பெற்றால் அதன் மூலம் தனியார் நிறுவனங்கள் கடன் பெறுவதற்கான வாய்ப்புகள் தடுக்கப்படுகிறது என்ற ஒரு முதலாளித்துவக் கோட்பாடு நவீன தாராளமய ஆளுகையில் வலிந்து கடைபிடிக்கப்படுகிறது. இதை 'நெருக்கித் தள்ளுதல்' (crowding out) என்கிறார்கள். இத்தனை நாட்களாக மத்திய அரசு கடன் பெற்று மாநிலங்களுக்கு ஜி.எஸ்.டி நிவாரணம் அளிக்க விடாமல் தடுத்ததும் இதே கோட்பாடுதான். ஆனால் உண்மையில் இந்தக் கோட்பாட்டினால் 'க்ரவுடிங் அவுட்' செய்யப்படுபவை மத்திய, மாநில அரசுகளே. தனியார் நிறுவனங்கள் மலிவுக் கடன் பெற வேண்டுமென்பதற்காக அரசு நிறுவனங்களுக்கு மலிவுக் கடன் மறுக்கப்படுவது "நெருக்கித் தள்ளுதல்" இல்லையா? சிறு குறு நிறுவனங்களுக்கு நிதி கிடைக்காமல் தடுத்து பெருமளவில் கடன் சேவைகளை பெற்றுக் கொள்ளும் பெரு நிறுவனங்கள் நெருக்கித் தள்ளுதலில்' ஈடுபடவில்லையா. வங்கிகளில் நலிந்த பிரிவினருக்கும் தொழில்களுக்கும் முன்னுரிமை பிரிவுக் கடன் அளிப்போம் என்று வாக்களித்து விட்டு அதில் அனைத்து வங்கியல்லாத நிதி நிறுவனங்களையும் வீட்டுக் கடன் நிதி நிறுவனங்கள் உட்பட சேர்த்திருப்பது, சலுகை தருகிறோம் என்ற விதத்தில் செய்யப்படும் 'நெருக்கித் தள்ளுதல்' தானே! இட ஒதுக்கீடு கொடுத்து விட்டு, அதற்குள்ளே இட ஒதுக்கீட்டுக்கும் வாய்ப்புகளை பெறுவதற்கும் தடையாக இருப்பவர்களை இடைச் செருகுவது போலத்தான் இதுவும்.

சிறு, குறு மத்திய நிறுவனங்களில் 5 சதவீதத்தினருக்கு மட்டுமே நிறுவனக் கடன் கிடைத்துள்ளது. பெரும்பாலானோர் நிதியுதவி பெற முடியாமல் தவிக்கின்றனர். நிதித்துறை சாரா நிறுவனங்களின் கடன்-மதிப்பும் அதிகரித்துள்ளது. காதி மற்றும் கிராமத் தொழில்களை அடிப்படையாகக் கொண்ட சிறுகுறு நடுத்தர நிறுவனங்கள் விற்பனையையும், ஏற்றுமதியையும் அதிகரிக்க வழிகாட்டுமாறு வால்மார்ட் பெருநிறுவனத்திடம் நிதின் கட்காரி கோரிக்கை விடுத்துள்ளார். திமிங்கலங்கள் சின்ன மீன்களைப் பாதுகாக்குமா? விழுங்காமல் விட்டு வைக்குமா! இந்தியத் திமிங்லம் அம்பானி சிறு குறு நடுத்தர நிறுவனங்களை வலுப்படுத்தற்காக அவற்றுடன் பங்குறவு கொள்ள முன்வந்துள்ளது திகிலூட்டுகிறது.

எளிய மக்களுக்கு வங்கிச் சேவை அளித்து வந்த அஞ்சலகங்களிலும் சேமிப்புக் கணக்குகளில் குறைந்தபட்சத் தொகை ரூ.500 வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் இல்லையென்றால் அபராதம் விதிக்கப்படும் என்றும் அஞ்சல்துறை அறிவித்துள்ளதால் வாடிக்கையாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். 2 கோடி ரூபாய் வரை கடன்களுக்கான ஒத்திவைப்புச் சலுகை பெற்றவர்களுக்குக் கூட்டு வட்டி தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால் இச்சலுகை பயிர்க் கடனுக்கோ, டிராக்டர் கடனுக்கோ அளிக்கப்படாது என விவசாயிகளையும் விவசாயத் துறையையும் வஞ்சித்துள்ளது மத்திய அரசு.

பஞ்சாப், ராஜஸ்தான் மாநில அரசுகள் மத்திய அரசின் விவசாய விரோத சட்டங்களுக்கு எதிராக விவசாயச் சட்டங்களை நிறைவேற்றியிருப்பது வரவேற்கத்தக்கது, பஞ்சாப் அரசு குறைந்தபட்ச விலையில் கொள்முதல் செய்வதைக் கட்டாயமாக்கியுள்ளது. மற்ற மாநிலங்களும் விவசாய நலன்களைப் பாதுகாக்கும் முறையில் சட்டங்களை நிறைவேற்ற வேண்டும். கேரள அரசை முன்னுதாரணமாகக் கொண்டு மற்ற மாநிலங்களும் காய்கறிகளுக்கும் குறைந்தபட்ச விலையை நிர்ணயிக்க வேண்டும். ஆனால் தமிழ்நாட்டில் எடப்பாடி பழனிச்சாமியோ தான் ஒரு விவசாயியாக இருந்ததால் விவசாய நலன்களுக்கு இந்தச் சட்டம் எதிரானது அல்ல எனத் தனக்கு நன்றாகத் தெரியும் என ஆதரித்துள்ளார். இதிலிருந்தே தெரிகிறது அவர் எப்படிப்பட்ட விவசாயியாக இருந்துள்ளார் என்று.

உலக வறுமைக் குறியீட்டுத் தரத்தில் 107 நாடுகளில் இந்தியா 94ஆவது இடத்தில் உள்ளது. இந்தியாவில் 37.4% குழந்தைகள் வளர்ச்சி குன்றியவர்களாகவும், 17.3% குழந்தைகள் எடை குறைந்தவர்களாகவும் உள்ளனர். இந்தியாவின் உணவுப் பாதுகாப்பின்மையையே இது சுட்டிக்காட்டுகிறது. தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விவசாயச் சட்டங்களைத் திரும்பப் பெறா விட்டால் இந்நிலை மேலும் மோசமாகும் அபாயம் உள்ளது.

தற்போது கிராமப்புறங்களிலும் வேலையின்மை அதிகரித்துள்ளது. ஓய்வுபெற்ற அரசு அலுவலர்கள், கல்வியாளர்கள் மேற்கொண்ட ஆய்வில் உ.பி., பீகார், ஜார்கண்ட், ஒடிசா, மேற்கு வங்காளம், சத்திஸ்கார் ஆகிய 6 மாநிலங்களில் கிராமத்திற்குத் திரும்பிய புலம்பெயர் தொழிலாளர்காளில் 94 சதவீதத்தினரின் வருமானம் குறைந்துள்ளதால் அதில் 70 சதவீதத்தினர் மீண்டும் நகரத்திற்கே திரும்ப உள்ளதாக தெரிய வந்துள்ளது.

187 உறுப்பு நாடுகளைக் கொண்ட சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் (ஐ.எல்.ஓ) நிர்வாக அமைப்பின் தலைமையை 35 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா பெற்றுள்ளது. அமைப்பின் கொள்கைகள், திட்டங்கள், நிகழ்ச்சி நிரல், வரவு செலவுத் திட்டத்தைத் தீர்மானித்து, தலைமை இயக்குநரைத் தேர்ந்தெடுப்பது 'ஐ.எல்.ஓ'வின் உச்ச நிர்வாக அமைப்பாகும். குறைந்தபட்சம் இதற்காகவேனும் மக்கள் விரோத தொழிலாளர், விவசாய சட்டங்களை நிறைவேற்றா விட்டால், உலக அரங்கில் இந்தியாவுக்குப் பெருத்த அவமானம் ஏற்படும்.

பணவீக்கம்:

உணவுப் பொருட்களின் விலை, குறிப்பாகக் காய்கறிகளின் விலை மிகவும் அதிகரித்துள்ளது. செப்டம்பர் மாதத்தில் நுகர்வோர் குறியீடு அடிப்படையிலான சில்லறைப் பணவீக்கத்தின் அளவு 7.34 சதவீதமாகவும், உணவுப் பொருட்களின் விலைவாசி உயர்வு 10.68 சதவீதமாகவும் இருந்தது. காய்கறிகளின் விலைவாசி 20.73 சதவீதமும், பருப்பு வகைகளின் விலைவாசி 14.67 சதவீதமும் அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டில் பணவீக்கம் 7.78% சதவீதமாக உள்ளது.

ஆகஸ்டில் உற்பத்தி நிலை:

புள்ளியியல் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தொழில்துறை உற்பத்திக் குறியீட்டு அறிக்கையின் படி முதன்மைத் துறைகளின் உற்பத்தி 10.4 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. அதில் சுரங்கத் துறையில் 9.8 சதவீதமும், செய்பொருளாக்கத் துறையில் 8.6 சதவீதமும், மின்சாரத் துறையில் 1.8 சதவீதமும் வீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. புகையிலை, அடிப்படை உலோகங்கள், இதர வாகனங்கள் தவிர மற்ற அனைத்துப் பொருட்களின் உற்பத்தியும் எதிர்மறையாகப் பதிவாகியுள்ளது.

பயன்பாட்டு அடிப்படையிலான வகைப்பாட்டில் உடனடி நுகர்வுப் பொருட்கள் (3.3%), மூலதனப் பொருட்கள் (15.4%), முதன்மை பொருட்கள் (11.1%), இடைநிலைப் பொருட்கள் (6.8 %), கட்டுமானப் பொருட்கள் (2.3 %), நீடித்த நுகர்வுப் பொருட்கள் (10.3 %) ஆகியவற்றின் உற்பத்தியும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

செப்டம்பரில் உற்பத்தி நிலை:

தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டு அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட

அறிக்கையின் படி, முதன்மைத் தொழில்துறைகளின் உற்பத்தி செப்டம்பரில் 5.1 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. உள்கட்டுமானத் துறைகளின் உற்பத்தி 0.8 சதவீதம் குறைந்துள்ளது.

கிராமப்புறங்களில் மருத்துவ சுகாதார வசதிகளுக்கான உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்காக, ஆயுஷ்மான் சர்க்கார் என்ற திட்டத்தின் மூலம் தேசிய கூட்டுறவு மேம்பாட்டு அமைப்புகளின் மூலம் மிகவும் தாராளமாக 10,000 கோடி அளிக்கப்படும் என பாஜக அரசு அறிவித்துள்ளது.. 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி இந்தியாவில் 640,867 கிராமங்கள் உள்ளன. 10,000 கோடியை 640,867 கிராமங்களுக்கும் பங்கிட்டால் ஒரு கிராமத்திற்கான சுகாதார மேம்பாட்டுக்காகச் செய்யப்பட்ட முதலீடு வெறும் 15,000 ரூபாய் மட்டுமே. 500 ரூபாயில் தனிநபர்களையும். 15,000 ரூபாயில் ஒரு கிராமத்தையும் மீட்சி அடையச் சொல்கிறது பாஜக அரசு. உலகளவில் உடல்நலம், சுகாதாரத்திற்கான நிதி ஒதுக்கீடுகளில் கடைசி நான்காவது (155/158) இடத்தில் இந்தியா உள்ளது என ஆக்ஸ்ஃபாம் அமைப்பு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியத் தர நிர்ணய அமைப்பை (BIS) நுகர்வோர் விவகாரங்கள் துறையிலிருந்து வர்த்தக, தொழில்துறை அமைச்சகத்துடன் இணைக்க உள்ளதாகச் செய்தி வந்துள்ளது. அவ்வாறு மாற்றப்படுமானால் தர நிர்ணய மதிப்பீடுகள் நுகர்வோரை அடிப்படையாகக் கொண்டதாக இல்லாமல் நிறுவனங்களுக்குச் சாதகமான வகையில் தளர்த்தப்பட்டு நுகர்வோர் நலன்கள் பாதிக்கப்படும். இந்தியத் தர நிர்ணய அமைப்பை நுகர்வோர் விவகார அமைச்சகத்துடன் இணைந்திருந்தால்தான் நுகர்வோர் புகார்களை முறையாக நிவர்த்தி செய்ய முடியும் என்று நுகர்வோர் விவகாரங்கள் துறையும் இது குறித்து வாதிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியா உலகின் ஆற்றல் மையமாக இருக்கும் என பெட்ரோலியத் துறை அமைச்சர் கூறியுள்ளார். இந்தியா ஆற்றல் உற்பத்தி மையமாக இருந்தால் கூட பெருமைக்குரிய விசயமாகக் கருதலாம். ஆனால் ஆற்றலின் நுகர்வு மையமாக மட்டும் இருப்பதில் என்ன பெருமை உள்ளது? நிலக்கரி சார்ந்த 14 பொதுத்துறை நிறுவனங்களின் மூலதனச் செலவினங்களை 2021இல் இருமடங்கு உயர்த்தி 2 இலட்சம் கோடியாகவும், 2020இன் இலக்கு 1 இலட்சம் கோடியாகவும், 2022இன் இலக்கு 3 இலட்சம் கோடியாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. படிம ஆற்றல் துறைகளுக்கான முதலீடுகளைக் குறைக்காமல் இரு மடங்காகவும், மும்மடங்காகவும் உயர்த்துவது சூழலியல் அடிப்படையில் அரசின் பொறுப்பின்மையையே வெளிப்படுத்துகிறது.

இந்தியா உலகச் சந்தைகளில் நுழைந்து முதன்மையான ஏற்றுமதி செய்யும் நாடாக உயர வேண்டும் என நிதி அயோக்கின் முதன்மை நிர்வாக அலுவலர் அமிதாப் காந்த் தெரிவித்துள்ளார். தற்சார்பு இந்தியா போன்ற கொள்கைகள் கடந்த காலத்தில் பலனளிக்கவில்லை என்றும், உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாக்க வேண்டும் எனும் நோக்கில் கொண்டுவரப்பட்ட ஆத்மநிர்பார் பாரத் (தற்சார்பு இந்தியா) வெளிநாட்டு வர்த்தகத்தில் சிக்கலை ஏற்படுத்திவிடக் கூடாது என்றும் ரிசர்வ் வங்கியின் முன்னாள் கவர்னர் ரகுராம் ராஜன் தெரிவித்துள்ளார். சர்வதேச வர்த்தகம் கோவிட்-19க்கு முன்பே குறைந்திருக்கும் போது ஏற்றுமதிக்காக உள்நாட்டுத் தொழில்களைப் பாதுகாப்பதை தடுக்கச் சொல்வது தவறான பரிந்துரை. ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக வளர்ந்த சீனாவே தற்போதைய பொருளாதார நிலைக்குப் பொருத்தமாக உள்நாட்டுத் தேவைகளை அதிகரிக்கும் விதமான கொள்கைகளை செயல்படுத்தி வருகிறது. ஆனால் இந்தியாவில் இந்தப் பொருத்தப்பாடு கருதப்படாமல் தொழில் துறை உற்பத்தியையும் மேம்படுத்தாமல் இந்தியாவின் உள்நாட்டுத் தேவைகளை ஊக்கப்படுத்தும் நடவடிக்கைகள், நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்கும் என்றும் இந்தியாவின் பெரிய உள்நாட்டுச் சந்தையைப் பற்றிக் கவலைப்படாமல் இந்தியா ஏற்றுமதியின் மீது கவனம் செலுத்த வேண்டும் என்றும், சர்வதேச வர்த்தகத்தைப் பாதுகாக்க இந்தியாவை அர்ப்பணிக்க வேண்டும் என்பது போல் ஏற்றுமதி சார்ந்த கொள்கையையே எக்காலத்திற்கும் உயர்த்திப் பிடிக்கும் இவர்களுக்கு சர்வதேச முதலாளித்துவ வர்த்தகத்தின் பாதுகாவலர்கள் என விருதளித்துப் பாராட்டுமாறு உலக வர்த்தக அமைப்புகளுக்குப் பரிந்துரைதான் செய்ய வேண்டும். புள்ளியியல் நிபுணர் பிரனாப் சென் 10 லட்சம் கோடி நிதிச் சலுகை அளித்தால் மட்டுமே இந்தியப் பொருளாதாரம் 2019-20ஆம் ஆண்டின் நிலையை அடையும், இல்லையென்றால், 10.8% குறுக்கமடையும் எனத் தெரிவித்துள்ளார்.

முதல் 100 இந்தியப் பணக்காரர்களின் மொத்தச் சொத்து மதிப்பு 14 சதவீதம் அதிகரித்து ரூ.37 இலட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. இந்த ஆண்டின் மொத்தச் சொத்து வளர்ச்சியில் முகேஷ் அம்பானி மட்டுமே 50 சதவீதத்துக்கு மேல் பங்கு வகிக்கிறார். 2025ல் புதிதாக 100 பெரும் பணக்காரர்கள் உருவாவார்கள் என இண்டஸ் தொழில்முனைவோரின் உலக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சுகாதார / பொருளாதார இரட்டை நெருக்கடியானது பெருமுதலாளிகளின் மூலதனத் திரட்டலை ஊக்குவித்துள்ளது தெரிகிறது.

கீனிசிய பொருளாதாரவியலாளர், ஸ்டிகிலிட்ஸ் செல்வந்தர்களிடம் வரிவிதிப்பது பொருளாதாரத்தை ஊக்குவிக்கும். என்றும் எதை செய்யக் கூடாதோ அதற்கான மாதிரியாக இந்தியா இருந்து வருகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

உலகளவில் வேலை செய்வோரில் பாதிக்கு மேற்பட்டோர் அடுத்த 12 மாதங்களில் வேலை இழக்கும் நிலையில் உள்ளதாக ஒரு சர்வதேச ஆய்வு கூறுகிறது. 1930க்கு பிறகு மிகப்பெரும் பொருளாதார மந்த நிலையை உலகம் சந்திக்க உள்ளதாக உலகவங்கி எச்சரித்துள்ளது. வளரும் நாடுகள் கடன் நெருக்கடியால் பாதிக்கப்பட்டு வருமான குறைவு ஏற்படும், இது சமூக ஏற்றத்தாழ்வை மேலும் அதிகரிக்கும் என்றும் சர்வதேச பண நிதியம் தெரிவித்துள்ளது. ஆனால் இவர்கள் பரிந்துரைகளைத் தவிர பெரிதாய் என்ன நிவாரணம் அளித்துள்ளார்கள்?

ஜி-20 அளிக்கும் கடன் நிவாரண திட்டம் வளரும் நாடுகள் 2020ல் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் தொகையில் 1.66 சதவீதத்திற்கு மட்டுமே பொருந்தும்.ஏனென்றால் இத்திட்டம் அரசுகளுக்கிடையிலான கடன் சேவைகளுக்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டுள்ளது. இதில் தனியார் மற்றும் பலதரப்பு கடன் வழங்குநர்கள் பங்கேற்கவில்லை. ஜி-20 அளிக்கும் கடன் நிவாரண திட்டத்தில் தனியார் நிறுவனங்களையும் பங்கேற்கச் செய்ய ஏன் சர்வதேச பண நிதியத்திற்கோ, உலக பொருளாதார அமைப்புகளுக்கோ, உலக வங்கிக்கோ முடியவில்லை. இவ்வளவு ஆண்டுகளாக அரசின் நிதி ஒதுக்கீடுகளை/செலவினங்களை எதிர்த்து சிக்கன நடவடிக்கைகளை திணித்து வந்த இந்த அமைப்புகளின் தலைவர்கள். சந்தை இயங்க வேண்டும் என்பதற்காக சமூக சொத்துக்களின் மூலம்(சோசலிச சுமைகளை திண்பதன் மூலம்) நிதி ஒதுக்கீடுகளை அதிகரிக்குமாறு கூக்குரல் விடுக்கிறார்கள். பொருளாதார பாட நூல்களில் முதலாளித்துவ சந்தை தானாகவே சமநிலையை அடையும் திறன் வாய்ந்த்தாக மெச்சிப் போற்றப்படுகிறது. இப்பொழுது ஏன் அந்த சந்தையால் அரசின் உதவியில்லாமல் சமநிலையை அடையமுடியவில்லை. பொருளாதாரம் நெருக்கடியில் இருக்கும் போது நட்டத்தை ஏற்க மட்டும் அரசு செயல்பட்டு தனியார் நிறுவனங்களை பாதுகாக்கவேண்டும். நெருக்கடி சரியானவுடன்


மீண்டும் அரசின் வாயைக் கட்டிவிடுவார்கள். மீண்டும் ஒரு பிரெட்டன் வுட் தருணம் ஏற்பட்டுள்ளது என சர்வதேச பண நிதியத்தின் நிர்வாக இயக்குனர் கிரிஸ்டினா தெரிவித்துள்ளார், இரண்டாம் உலகப்போருக்கு பின் பொருளாதார நெருக்கடிக்களை தவிர்ப்பதற்காக எவ்வாறு பொருளாதார ஒத்துழைப்பு தேவைப்பட்டதோ அதே போல் இன்றும் தேவைப்படுகிறது. என்று கூறியுள்ளார்.ஆனால் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சி பெற இப்பொருளாதார அமைப்பு ரீதியாகக் குறைந்தபட்சம் ஏதேனும் ஒரு சீர்திருத்தத்தையாவது முன்மொழிந்தாரா என்றால் இல்லை.

இந்தப் பொருளாதார நெருக்கடியிலும், சமூக அக்கறை என்பது துளியும் இல்லாமல், பெருமுதலாளிகள் இலாபம் பெற உதவும் ஏல முறைகளை உருவாக்கியவர்களுக்கே பொருளாதாரத் துறையில் நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. உலக நாடுகள் கோவிட்-19க்கான தடுப்பூசிகளை, மருந்துகளை, பிற சிகிச்சைகளை விரைவாக, மலிவாகப் பெறும் வகையில் அறிவுச் சொத்துரிமை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதற்காக உலக வர்த்தக அமைப்பில் ஆப்பிரிக்காவும் இந்தியாவும் இணைந்து செய்த முன்மொழிவை வளர்ந்த நாடுகள் தடுக்கின்றன. 12 இலட்சம் பேர் கொள்ளை நோயில் இறந்த பிறகும் இதற்கான பேச்சுவார்த்தையை அடுத்த ஆண்டிற்குத் தள்ளி வைத்துள்ளார்கள் என்றால், இந்த பேரிடரிலும் உயிர்களைப் பொருட்டாகக் கருதாது இலாபத்தையே கருதும் முதலாளித்துவத்தின் மூலம் ஒருபோதும் மனித இனம் மீட்சி பெற முடியாது என்ற பேருண்மை விளங்கும்.

போப்பே முதலாளித்துவத்தின் தோல்வியை ஒப்புக் கொண்டுள்ளார். போப் ஃபிரான்சிஸ் “முதலாளித்துவச் சந்தையின் மாயக் கொள்கைகள் தோல்வியடைந்து விட்டன என்பதை கொரோனா கொள்ளை நோய் நிரூபித்துள்ளது; அனைவரின் கருத்துக்கும் ஒத்துழைப்புக்கும் இடம் தரும்படியான, போரை அறவே விலக்கும் படியான புதுவித அரசியலே இன்றைய உலகிற்குத் தேவை” என்று கூறியுள்ளார். ஆனால் சர்வதேசப் பொருளாதார அமைப்புகள் அமைப்பு மாற்றத்தைப் பற்றி வாய் திறக்காது வெறும் வார்த்தைகளாலும் பிரார்த்தனைகளாலும் மட்டுமே நிவாரணம் அளித்து வருகிறார்கள்.

# தீரன் திண்ணியன் தேசத் தலைவன்

## தியாகு



*“களம்புகல் ஓம்புமின், தெவ்விர்! போர் எதிர்ந்து,*

*எம்முளும் உளன்ஒரு பொருநன்; வைகல்*

*எண் தேர் செய்யும் தச்சன்*

*திங்கள் வலித்த கால்அன் னோனே.”*

(புறநானூறு 87)

“நாள் ஒன்றுக்கு எட்டுத் தேர் செய்யும் தச்சன் ஒரு மாத காலம் முயன்று உழைத்துச் செய்த தேர்ச் சக்கரத்தின் ஆரக்கால் போன்ற போர்வீரன் எம்மிடம் உள்ளான். சண்டைக்கு முண்டியடித்து வராதீர், பகைவரே!”

பகையரசின் அகந்தையை அறுத்திட இவ்விதம் எச்சரித்தாள் ஔவை. தமிழ் என்றால் வீரம் என்று பெருமிதம் கொள்ளும் வண்ணம் இத்தகைய இலக்கியச் சான்றுகள் எத்தனை எத்தனை! தமிழீழ மக்களின் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் - ஔவை சொன்னவாறான ஒரு போர்வீரன் அல்லன், அவ்வாறான பல்லாயிரம் வீரர்களுக்குத் தலைவீரன்! கொடும்பகைக்கு முகங்கொடுத்து விடுதலைக்காகப் போரிடும் தேசிய இனத்தின் தலைவன் வீரனாய்,

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

பெருவீரனாய், வீரமுதல்வனாய் இருந்தாக வேண்டும். அதற்கும் மேலே எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்ணியனாகவும் இருத்தல் வேண்டும்.
எழுபதுகளின் பிற்பகுதியிலும் எண்பதுகளின் முற்பகுதிகளிலும் - அப்போது சிறையில் அடைபட்டிருந்த எனக்கும் தோழர்களுக்கும் - பிரபாகரன் அறிமுகமாகி அறியப்பட்டவரனது வீரனாகவும் புலிப்படையின் வீரத் தலைவனாகவுமே!

தமிழகத்தில் கருவிப் போராட்டவழி புரட்சி நடத்தும் கருத்தில் துணிந்து செயல்பட்டு இளம்வயதில் சிறைபட்டிருந்த எங்களுக்குத் தமிழீழத்தில் ஓர் இளைஞன், இளந்தலைவன் வெற்றிகரமாக விடுதலைப் போர் தொடுத்து வீரம் விளைத்து வரும் செய்திகள் பெரிதும் ஈர்ப்பாயின.
மறுபுறம் தமிழீழ மக்கள் மீது சிங்களப் பேரினவாத அரசு நடத்திய இன ஒடுக்குமுறையும் அடக்குமுறையும் பற்றிய செய்திகள் வெளியில் போலவே சிறைக்குள்ளேயும் கொந்தளிப்பு உண்டாக்கின. இந்தக் கொடிய ஒடுக்குமுறைக்கும் அடக்குமுறைக்கும் எதிராக பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகள் நடத்தி வந்த வீரஞ்செறிந்த போராட்டத்தில் நாங்கள் கொண்டிருந்த ஈடுபாடும் வளர்ந்தது.

வந்தது ’83. இன அடக்குமுறை இன அழிப்பாகி, அரச பயங்கரவாதம் கொலைத் தண்டவமாடிற்று. கருப்பு - யூலையில் வெளிக்கடைச் சிறையில் நடந்த கொடுவதைகளும் கோரக் கொலைகளும் நாகரிக உலகை அதிரச் செய்தன. தமிழகத்தைக் கொதிக்கச் செய்தன. கொதிப்பின் உச்சநிலை சிறைகளிலேதான். இங்கே சிறைத் தமிழர்களைப் பொறுத்த ஆத்திரத்தோடு ஆற்றாமையும் சேர்ந்து கொண்டது - சட்டத்தால் தலையிடப்பட்டு அடைபட்டுக் கிடக்கிறவனால் சுவர் தாண்டிக் கடல் கடந்து கை நீட்டிக் கண்ணீரைத் துடைக்க முடியுமா?
தசையெலும்பைப் பூட்டி வைக்கலாம். தளும்பும் மனவுணர்ச்சிகளைக் கூடவா பூட்டி வைக்க முடியும்? மதுரைச் சிறையில் சிங்கள அரசதிபருக்குக் கொடும்பாவி கட்டிக் கொளுத்தினார்கள். திருசிராப்பள்ளிச் சிறையில் சிறைபட்ட அனைவரும் திரண்டு மௌன ஊர்வலம் நடத்தி மையத் திடலில் பொதுக்கூட்டமும் நடத்தினோம். எல்லாச் சிறைகளிலும் ஒரு நாள் உணவு மறுத்து அந்த உணவின் மதிப்பைத் தமிழக முதல்வரின் தமிழீழ ஏதிலியர் உதவிநிதிக்கு அனுப்பி வைத்தோம். அதிகார வர்க்கம் வறட்டு விதிமுறைகளைக் காட்டி இதற்கெல்லாம் தடையிட்ட போது எதிர்த்துப் போராடினோம். 1983 ஆண்டிறுதியில் தமிழக அளவில் எல்லா மையச்

சிறைகளும் சேர்ந்து போராடிய போது, முதல் கோரிக்கையே இலங்கைத் தமிழர்களுக்கு உதவும் உரிமை வேண்டும் என்பதுதான்.

தமிழீழ விடுதலைக் குறிக்கோளை ஆதரிப்பவர்களாகவும், புலிப்படையோடு ஒருமைப்பாடு கொண்டவர்களாகவும், தம்பியை நேசிப்பவர்களாகவும் நாங்கள் மாறிப் போனதில் ஒரு முரண்பாடு இருக்கவே செய்தது - எங்களின் நிலைப்பாடு நாங்கள் சார்ந்திருந்த மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சிக்கு அடியோடு ஒவ்வாதது. இந்தியாவில் தேசிய இனச் சிக்கல் குறித்தும், தமிழ்த் தேசிய இனத்தின் தன்தீர்வுரிமை (சுயநிர்ணய உரிமை) குறித்தும் கட்சித் தலைமையோடு எங்களுக்கு மாறுபாடுகள் இருந்தாலும், தமிழீழப் போராட்டம்தான் எங்கள் புரிதலைக் கூர்மையாக்கி முடிவை விரைவுபடுத்தியது. தமிழீழப் போராட்டத்தின் வரலாற்று நியாத்தைக் காண விடாமல் மறைக்க சிவப்புத் திரைகளுக்கும் கூட உரிமையில்லை என்ற முடிவுக்கு வந்தோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்து ஆழ்ந்தகன்ற விவாதங்கள் நடைபெற்றன. எங்களுக்குள்ளே மட்டுமன்றி, தமிழீழம் தொடர்பான கோரிக்கைகளுக்காகவும் வேறு கோரிக்கைகளுக்காகவும் அறப்போராட்டம் நடத்திச் சிறைக்கு வந்த வேறு பல கட்சித் தலைவர்களோடும் கூட விவாதித்தோம். விடுதையாகி வெளியே வந்த பிறகும் விவாதித்தோம். இதனால் தமிழீழ விடுதலை ஆதரவு நிலைப்பாடு உறுதிபட்டதோடு, தம்பி மீதான மதிப்பும் உயர்ந்தது. வீரத்துக்காக வியந்து வணங்கும் நிலை மாறி, விடுதலை அரசியல் பற்றிய தெளிவு வளர்ந்தது.

விடுதலை அரசியலின் நீட்சியே விடுதலைப் போர். விடுதலை அரசியல் என்பது வரலாற்று நோக்கில் விடுதலை தேவைப்படும் நிலையிலுள்ள வெகுமக்களை அறிவும் உணர்வும் ஊட்டி அணிதிரட்டிப் போராடச் செய்வதும், நட்பைச் சேர்த்துக் கொள்வதும், பகையைத் தனிமைப்படுத்துவதுமான முயற்சிகளைக் குறிக்கும். இம்முயற்சிகளைத் தொடரக் கருவியெடுக்கும் கட்டாயம் நேரிடும் போது விடுதலை அரசியல் விடுதலைப் போராக வடிவெடுக்கும்.

“*வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்*
*துணைவலியும் தூக்கிச் செயல்.*” (திருக்குறள் 471)

அரசியலுக்கும் அதே போல் போருக்கும் வழிகாட்டும்படியான இந்த இலக்கணத்துக்கு

இலக்கியமாக அன்று முதல் இன்று வரை பிரபாகரனின் வழிநடத்தல் விளங்கி வருகிறது எனலாம்.

இந்தத் தலைவன் வெறும் வீரனல்லன் என்பதை 1987 நிகழ்சிகள் மெய்ப்பித்தன. அப்பம் பிரித்த குரங்கின் வேலையைச் செய்ய முற்பட்டது இந்திய அரசு. இராசீவ் காந்தி - செயவர்த்தனா உடன்படிக்கையின் பேரால் இந்தியப் படை யாழ்ப்பாணத்தில் கனத்த கால் பதித்தது. ஈழ விடுதலைப் போராட்டத்தைச் சூழ்ந்தது ஒரு புதிய நெருக்கடி - இந்தியா நண்பனா? பகைவனா? தமிழீழப் போராட்டம் தொடர்பான இந்திய அரசின் அணுகுமுறைக்கு இரு பக்கங்கள் உண்டு. இந்திய மக்களின் நலனையும், தமிழக மக்களின் உணர்வையும் பிரதிபலிப்பதாக இருக்கும் வரை இந்திய அரசு தமிழீழ மக்களின் நண்பனாய் இருக்க முடியும். ஆனால் தேசிய இனங்களை ஒடுக்கும் இந்திய ஆளும் சக்திகளின் நலனையும், தெற்காசியா மீதான மேலாதிக்க நோக்கத்தையும் பிரதிபலிக்கிற அளவில் இந்திய அரசு தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கெடுக்கவே முற்படும். அடுத்தும் கெடுக்கலாம். எதிர்த்தும் கெடுக்கலாம்.

காலங்காலமாய் இந்தியாவை நண்பனாகவே பார்த்துப் பழகிய தமிழீழ மக்கள் இப்போது 1987இலும் இந்தியப் படைகளின் வருகையைத் தங்கள் மீட்சிக்குத் துணை என்றே பார்ப்பது போலிருந்தது. இந்திய அரசின் உள்நோக்கத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்ட பிரபாகரனின் தலைமை மக்களின் நாடித் துடிப்பை அறிந்து செயல்பட்டது. சுதுமலை அம்மன் திடலில் பிரபாகரன் ஆற்றிய உரை விடுதலை அரசியலில் அவரது தெளிவான தொலைநோக்கைக் காட்டியது.

கருவிமேல் காதலில்லை. மக்களின் பாதுகாப்புக்காகவே கருவி என்பதால் கருவியைப் பாதுகாப்பதற்காக மக்களை இழக்க வேண்டியதில்லை. கருவியைக் கையளிக்கிறோம் என்றால் எமது மக்களின் பாதுகாப்பைக் கையளிக்கிறோம் என்று பொருள். முதிர்ச்சியின் முத்திரை தாங்கிய இந்த அணுகுமுறை பழுத்த அரசியல் நோக்கர்களையே வியந்து நோக்கச் செய்தது. சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் இவனே எனப் போற்றினோம்.

இந்தியப் படையின் செயல்பாடு... இது மீட்க வந்த படையா? மிதிக்க வந்த படையா? என்று மக்களைச் சிந்திக்க வைத்தது. புலேந்திரன், குமரப்பா உள்ளிட்ட பன்னிருவர் சிங்களப் படையால் சிறைபிடிக்கப்பட்டு நஞ்சுண்டு மாண்ட போது இந்தியா வேடிக்கை பார்த்த அவலம் தமிழீழ மக்களை அதிர்ச்சியடையச் செய்தது. உடன்படிக்கையைச் செயலாக்குவதில் ஒப்புக்கொன்ற

சிற்சிலவற்றைக்கூட நடைமுறைப்படுத்தாமல் இந்திய அரசு இழுத்தடித்தை அம்பலமாக்கும் வகையில் புலிகளின் அழைப்பை ஏற்று தமிழீழ மக்கள் அறப்போராட்டம் நடத்தினார்கள். கொல்ல வந்தவரைக் கொஞ்ச வந்தவராகப் பார்க்கச் செய்த பனிப்படலம் விரைந்து விலகலாயிற்று. இந்த அறப்போராட்டத்தின் உச்சம்தான் திலீபனின் பட்டினிப் போர். அது இறுதியாகவும் உறுதியாகவும் தில்லிக் கழுகின் புறாச் சிறகைக் கழற்றிப் போட்டது.

திலீபனின் ஈகம் உலக வரலாற்றிலேயே தனித்துவமானது. இந்தத் தனித்துவமான தியாக மறவனை வளர்த்தெடுத்த தலைமையின் மகத்துவத்தை என்னென்பது! இறந்தும் வென்ற திலீபனின் போராட்டம் இந்தியாவின் அரசியல் தோல்வியைக் குறித்தது. அந்த அரசியல் தோல்வியை இராணுவத் தோல்வியாக மாற்றத்தான் ஒன்றரை ஆண்டுக்கு மேல் பிரபாகரன் தலைமையில் புலிப்படை வீரப் போர் புரிந்தது. மண்ணையும் மக்களையும் சார்ந்து நின்று போர் புரிந்தால் எவ்வளவு பெரிய வல்லடிப் படையையும் முறியடிக்க முடியும் என்ற வரலாற்றுப் படிப்பினையை வியத்நாமுக்குப் பிறகு உலகுக்குணர்த்தியது தமிழீழம்.

திலீபனின் ஈகம் ஏற்படுத்திய தாக்கம் கருதியும், தமிழீழப் போராட்டத்தைக் கொள்கைவழி நின்று ஆதரிக்கும் நோக்கம் கருதியும் 1990 செப்டெம்பரில் என்னை அமைப்பாளராகக் கொண்டு தமிழகத்தில் திலீபன் மன்றம் நிறுவப்பட்டது. அதன் மூன்று நிலைப்பாடுகள்:

தமிழீழ விடுதலை ஒரு வரலாற்றுத் தேவை.

இராசீவ் - செயவர்த்தனா உடன்படிக்கை ஈழத்தமிழர் நலனுக்குப் பகை.

தமிழீழ விடுதலைப் போரில் விடுதலைப் புலிகளை ஆதரிப்போம்!

அரசும் காவல் துறையும் செய்த கெடுபிடிக்கும் நெருக்கடிக்கும் இடையில் திலீபன் மன்றம் தனக்குரிய பங்கினை ஆற்றிவந்தது.

திலீபன் மன்றமும் விடுதலைக் குயில்களும் தமிழ் தமிழர் இயக்கமாக இணைந்த பிறகும் மேற்கூறிய நிலைப்பாடுகளில் எவ்வித மாற்றமும் இல்லை. தடைச் சட்டம்கள், அடக்குமுறை நெருக்கடிகள், அதிகாரக் கெடுபிடிகள் யாவற்றுக்குமிடையே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து நிற்கிறோம். பிரபாகரனின் தலைமை மீது உறுதியான நம்பிக்கை வைத்துள்ளோம். எந்நிலையிலும் இதில் எமக்கு ஊசலாட்டமில்லை.

இது வெறும் வீரவணக்கமோ நாயக வழிபாடோ அல்ல என்பதைத் தெளிவுபடுத்தியாக

வேண்டும். வரலாற்றை உருவாக்குபவர்கள் வெகுமக்களே.எவ்வளவு பெரிய தலைவனாயினும் வீரனாயினும் வரலாற்றின் கருவியே என்பதில் இயமில்லை.தமிழீழ விடுதலைப் போர் வரலாறு கண்டெடுத்த தலைசிறந்த கருவி பிரபாகரனே.வரலாற்றால் கண்டெடுக்கப்பட்ட வரலாற்றை வடிப்பவராகத் திகழ்வதால் அவரே வரலாற்று நாயகன்.

தேசியத் தலைவர் என்பது அலங்காரப் பட்டமன்று.அது கடினமான பெரும் பொறுப்பு.இந்தப் பொறுப்பபை உணர்ந்து இன்னல்களையும் இடர்மிகுந்த திருப்பங்களையும் கடந்து தன் மக்களை வழிநடத்தி வருவது பிரபாகரனின் தலைமைச் சிறப்பே.

தமிழகத்தில் தமிழ்த் தேசியப் புரட்சிக்காக உழைத்துவரும் எம்மைப் போன்றோர் பிரபாகரனின் போராட்ட வரலாற்றிலிருந்து நிறையக் கற்கவும் கடைப்பிடிக்கவும் வேண்டியதிருப்பதாகக் கருதுகிறோம். ஒரு சிலவற்றை ஈண்டு குறிப்பிடலாம்.

ஒரு மக்களினத்தை ஒன்றுபடச் செய்து பகைவனுக்கும் எதிராக அணிதிரட்ட வேண்டுமானால் அவ்வினத்திற்குள்ளான முரண்பாடுகளையும் பூசி மெழுகுவதன்று வழி. அவற்றுக்கு முறையாகத் தீர்வு காண வேண்டும். பிரபாகரனின் தலைமை சிங்களப் பேரினவாதத்தையும்,அதற்கு துணைவந்த பிறரையும் எதிர்த்துப் போராடும் போதே, தமிழீழ மக்களின் ஓர்மையைச் சிதைத்து ஒற்றுமையைக் கெடுக்கும் சாதியத்தையும் ஆணாதிக்கத்தையும் எதிர்த்துப் போரடியுள்ளது. இந்தப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் கண்டுள்ளது. தமிழீழ மக்களின் வெல்லற்கரிய வலிமைக்கு இந்தப் புரட்சிய ஒற்றுமையே அடித்தளமாகும். தமிழ்த் தேசியத்துக்கான போராட்டம்,சாதியொழிப்பு அல்லது சமூகநீதிக்கான போராட்டம் இவ்விரண்டின் இடையுறவையும் புரிந்து உள்வாங்கிக் கொள்ள தமிழீழம் நமக்குதவும்.

பிரபாகரன் மிக சிறந்த படைத் தளபதி என்பதை மாற்றாரும் மறுக்க மாட்டார். ஆனால் வெறும் படைத் தளபதியல்லர், மக்கள் விடுதலைப் போரின் தலைவர் அவர் என்பதை அவரின் போருத்திகளே காட்டும். ஆள் வலிமை, அறிவியல்-தொழில்நுட்ப வலிமை, ஆயுத வலிமை என்று அனைத்து வகை வலிமையோடும் அடக்கி ஒடுக்கும் ஆதிக்கத்தை எதிர்த்து மக்களாதரவை மட்டுமே சார்ந்து போராடுவதற்கான உத்தியாக உலக வரலாற்றில் கெரில்லாப் போர் முறை வளர்த்தெடுக்கப்பட்டது. நெல்லியடியில் மில்லர் தொடக்கி வைத்த தற்கொடைப்

போர் முறை கெரில்லாப் போர்முறையின் உச்சக்கட்ட வளர்ச்சியாகும்.

ஒரு சிறுபான்மைத் தேசிய இனம் தன்னந்தனியாக நின்று பேரினவாத அரசையும் அதற்குத் துணையாக வரும் வல்லாதிக்க ஆற்றல்களையும் எதிர்த்துப் போராடுவது எளிதன்று. தன் தரப்புக்கு ஆகக்குறைந்த இழப்போடு பகைத் தரப்பை ஆகப் பெருமளவுக்கு நொறுக்கிச் சிதறடிக்கும் தற்கொடைப் போர்முறையே இந்தக் கடினமான பயணத்தில் திறமிகு தடைநீக்கி என்பதை தமிழீழப் போராட்ட வரலாறு பெயப்பிக்கிறது. எந்தப் படையாலும் கரும்புலிகளின் உயிராயுதத்திற்கு எதிர்நிற்க முடியாது. இதுவே தற்கொடைப் போர்முறை. இந்தப் போர்குறையை வகுத்து வழிநடத்துவதில் பிரபாகரனின் போர்த்திறன் மட்டுமல்ல, விடுதலை அரசியலின் வித்தக நோக்கும் முன்னிற்கிறது.

விடுதலைப் போராளிகள் அமைதியையே விரும்புகின்றனர் - அது இடுகாட்டு அமைதியாய் இருந்து விடக் கூடாது என்ற எச்சரிக்கையோடு! உரிமைகளோடு சேர்ந்து வரும் மெய்யமைதிக்காகவே அவர்கள் போராடுகிறார்கள். விடுதலைப் போராளி தன் இரு கைகளையும் உயர்த்திக் காட்டுகிறார். ஒரு கை அமைதிக்காக! ஒரு கை போருக்காக! எந்தக் கை வேண்டுமென்று பகைவரே முடிவு செய்யட்டும். அமைதி என்றால் அமைதி! போர் என்றால் போர்! எது வேண்டும் சொல் பகையே! இதுவே விடுதலைப் போராளியின் அணுகுமுறை.

பிரபாகரன் சண்டைப் பிரியர், சமாதானத்தின் பகைவர் என்றெல்லாம் பாக்கு நீரிணையின் அப்பக்கமும் இப்பக்கமும் வறட்டுத் தவளைகள் போல் கத்திக் கொண்டிருந்தவர்கள் எங்கே? பிரபாகரனின் இப்போதைய அமைதி முயற்சி மெய்யான சண்டைப் பிரியர்களைக் காட்டிக் கொடுத்து விட்டது.

தமிழீத் தாயகத்திற்கான போராட்டம் போர்வழி நடந்தது. இப்போது அமைதி வழி தொடர்கிறது. எப்படியும் அது முன்னேறிச் செல்கிறது. வீரனாகவும், அதற்கும் மேலே விடுதலைப் போர் வித்தகனாகவும் மக்களைக் கைப்பிடித்து அழைத்துச் செல்லும் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் வழிகாட்டுதலில் இறுதி வெற்றி உறுதி. அது ஒரு தேசத்தின் வெற்றி. விடுதலை நாடும் அனைவரின் வெற்றியும் கூட!

ஒளிக் கதிர்களுக்கு எல்லைகள் உண்டோ?

[தலைவர் பிராபகரன் 50ஆம் பிறந்த நாள் மலருக்காக எழுதிய கட்டுரை]

சமந்தா

## கியூபாவின் புரட்சிப்பெண்கள் (9)

# தான்யா

**அர்ஜெண்டினாவில்:**

தான்யாவின் இயற்பெயர் தமாரா புங்கே. அவர் 1937 நவம்பர் 19ஆம் நாள் அர்ஜெண்டினாவில் பியூனஸ் அயர்ஸில் பிறந்தார். தானியாவின் தந்தை எரிக் ஓட்டோ



ஹென்ரிச் பங்கே ஒரு ஜெர்மானியர். அவரது தாய் நாடியா பைடர் போலந்து நாட்டைச் சேர்ந்த யூதர். அவரது தந்தை, எரிச் பங்கே, 1928இல் ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். அவர்கள் இருவருமே ஆசிரியப் பணியில் ஈடுபட்டனர், கம்யூனிஸ்டுகளாகவும் செயல்பட்டனர்.

ஜெர்மனியின் மூன்றாம் ரெய்ச்சின் (நாடாளுமன்றம்) தலைவரான அடோல்ஃப் ஹிட்லர்



யூதர்களையும் இடதுசாரிகளையும் அழிக்கத் தீர்மானித்த போது, நாஜி துன்புறுத்தலில் இருந்து தப்புவதற்காக 1935இல் அவர்கள் ஜெர்மனியிலிருந்து வெளியேற வேண்டியிருந்தது. அவர்கள் முதலில் சோவியத் ஒன்றியத்தில் வசிக்கவே விரும்பிய போதும் அதற்கான ஆவணங்களைப் பெறுவதற்கு நேரம் இல்லாததால், தமாராவின் தாய் நாடியா தன் மகன் ஓலா்ப் பிறந்த சிறிது நேரத்திலேயே, பிறந்த குழந்தையுடன் போலந்து பாஸ்போர்ட்டில், முதலில் வார்சாவுக்குத் தப்பி, பின்னர் சுவிட்சர்லாந்து, லக்சம்பர்க், பிரான்ஸ் வழியாக இறுதியில் அர்ஜெண்டினாவை அடைந்தார். தம்பதிகள் இருவரும் அர்ஜெண்டினாவில் மீண்டும் ஒன்றிணைந்தனர். அர்ஜெண்டின கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர்களாகி அவர்கள் தலைமறைவு வேலைகளை மேற்கொண்டனர், ஸ்பானிஷ் மொழியைக் கற்று அர்ஜெண்டினாவின் குடிமக்களாகினர். ஜெர்மன் தவிர, அவரது தாயார் ரஷ்ய மொழி பேசினார், அவரது தந்தை மொழிகளுடன் கூடுதலாக ஜிம்னாஸ்டிக்ஸ் வகுப்புகளும் எடுத்தார். தமாரா இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, 1937இல் பிறந்தார். தமாராவும், அவரது அண்ணன் ஓலா்பும் சிறு வயதிலிருந்தே அரசியல் செறிந்த சூழலில் வளர்ந்தனர். பியூனஸ் அயர்ஸில் உள்ள அவர்களது வீடு அரசியல் கூட்டங்களுக்கும், அகதிகளுக்கு உதவுவதற்கும், வெளியீடுகளை மறைப்பதற்கும், அவ்வப்போது ஆயுதங்கள் சேமிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டது. தமாரா சிறு வயதிலிருந்தே நீந்தினார், குதிரை சவாரி செய்தார், சிறந்த விளையாட்டு வீரராகத் திகழ்ந்தார். தென் அமெரிக்காவின் நாட்டுப்புற இசையில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார்.

**ஜெர்மனியில்:**

1952இல், தமாராவுக்கு 14 வயதாக இருந்த போது, அவரது பெற்றோர் கிழக்கு ஜெர்மனியில் சோசலிச அரசு ஆட்சியமைத்த பின் ஜெர்மனிக்குத் திரும்பினர். அவர்கள் போலந்தின் எல்லையில் உள்ள ஸ்டாலின்ஸ்டாட் (இப்போது ஐசென்ஹாட்டன்ஸ்டாட்) நகரில் குடியேறினர். அங்குதான், தமாரா ஐரோப்பா முழுவதிலும் பாசிசம் ஏற்படுத்திய வலி வேதனைகளை அறிந்து கொண்டார், தமாரா பதின்பருவத்தில்தான் ஜெர்மன் மொழியைக் கற்கத் தொடங்கினார். பாசிசத்திற்கு எதிரான போராட்டத்தில் பங்கேற்க அவர் சுதந்தர ஜெர்மன் இளைஞர்களின் அமைப்பில் சேர்ந்தார். உலக ஜனநாயக இளைஞர் கூட்டமைப்பிலும் சேர்ந்தார்,

தமாரா ஹம்போல்ட் பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிவியல் துறையில் பயின்றார். விளையாட்டு வீரராகப் போட்டிகளில் பல பதக்கங்களை வென்றார். 18 வயதிலேயே அவர் ஜெர்மனியின் ஒருங்கிணைந்த சோசலிஸ்ட் கட்சியின் அணிகளில் பணியாற்றத் தொடங்கினார். ஆனாலும் தமாரா அர்ஜெண்டினாவையோ இலத்தீன் அமெரிக்காவையோ மறக்கவேயில்லை. அவர் அக்கார்டியனையும், கிதாரையும் வாசித்தவாறே அர்ஜெண்டின மிலோங்காஸ், டேங்கோஸ் மரபுப் பாடல்களைப் பாடினார். இலத்தீன் அமெரிக்கர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார்.



தான்யாவின் பன்மொழித் திறனாலும் (அவர் சரளமாக ரஷ்யன், பிரஞ்சு, ஆங்கிலம், ஸ்பானிஷ், ஜெர்மன் மொழிகள் பேசினார்), இலத்தீன் அமெரிக்கப் பின்னணியாலும் அவர் சுதந்திர ஜெர்மன் இளைஞர்களின் சர்வதேசத் துறையின் மொழிபெயர்ப்பாளரானார். வியன்னா, பிராக், மாஸ்கோ மற்றும் கியூபாவின் ஹவானாவில் நடந்த இளைஞர் மற்றும் மாணவர்களின் உலக விழாவில் கலந்து கொண்டார். 1959 கியூபப் புரட்சியின் வெற்றியைத் தொடர்ந்து, கியூபாவிலிருந்து வரும் பார்வையாளர்களுக்கு மொழிபெயர்க்கும் சேவையை மேற்கொண்டார்.

1960இல் சே குவேரா பணி நிமித்தமாக ஜெர்மன் ஜனநாயகக் குடியரசின் லீப்ஜிக்கிற்கு ஒரு கியூப வர்த்தகக் குழுவுடன் வருகை தந்த போது தான்யா அவரது மொழிபெயர்ப்பாளராக

இருந்தார்.

**<u>கியூபாவில்:</u>**

1961ஆம் ஆண்டில், தமாரா பங்கே ஒரு மொழிபெயர்ப்பாளராக கியூபாவுக்கு வந்தார். அவர் முதலில் தன்னார்வப் பணிகளில் ஈடுபட்டார். கியூப எழுத்தறிவு இயக்கத்தில் பங்கேற்றார். அவர் கல்வி அமைச்சகத்திலும் கியூப மக்களின் நட்பமைப்பிலும், கியூப பெண்கள் கூட்டமைப்பிலும் பணியாற்றினார். தமாரா கியூபாவில் குடியேற முடிவு செய்து இலத்தீன் அமெரிக்காவின் முதல் சோசலிசப் புரட்சியைப் பாதுகாப்பதில் பங்களிக்க விரும்பினார். ஹவானா பல்கலைக்கழகத்தில் பத்திரிகைத் துறையில் சேர்ந்து பயின்றார்.

தமாரா வெளிநாட்டுக்குச் செல்வதைப் பற்றி அறிந்த ஜெர்மானிய சோசலிச ஒற்றுமைக் கட்சியின் முக்கிய அதிகாரி அவரிடம் "நாங்கள் உங்களை நன்கு அறிவோம்; நாங்கள் உங்களை முழுமையாக நம்புகிறோம், நீங்கள் எங்கு சென்றாலும், அது ஒரு சோசலிச நாடாகவோ அல்லது முதலாளித்துவ நாடாகவோ இருந்தாலும், நீங்கள் புரட்சிகர இயக்கத்தில் தொழிலாள வர்க்க அணியில் போராட்டத்தைத் தொடருவீர்கள்" என்று கூறியதாக அவரது தாயார் நினைவு கூர்ந்துள்ளார்.

1962இல் புரட்சி ஏகாதிபத்தியச் சக்திகளால் மரண அச்சுறுத்தலுக்கு உள்ளான போது. தான்யா தனது பெற்றோருக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு கூறியுள்ளார்:

"ஆம், இது உண்மையில் மிகவும் கடுமையான சூழ்நிலை தான் ... ஆனாலும் புரட்சிகரப் போராட்டம் மிகவும் கடினமாக இருக்கும் இந்த இடர்மிக்க சூழலுக்கு நடுவில் இருப்பதை விட அழகானது எதுவும் இல்லை என்பதை மீண்டும் உங்களுக்கு என்னால் சொல்ல முடியும். கியூபப் புரட்சியைப் பாதுகாப்பதற்காக கியூபாவில் இருக்க எத்தனை பேர் விரும்பியிருப்பார்கள்! அவ்வாறு செய்யும் நல்வாய்ப்பைப் நான் பெற்றுள்ளேன். இதற்குத்தான் நான் இலத்தீன் அமெரிக்காவுக்குத் திரும்பினேன் நான் எல்லா வசதிகளுடன் நன்றாய் வாழ விரும்பியிருந்தால், பெர்லினிலேயே தங்கியிருப்பேன் அங்குதான் எனக்கு எல்லாம் கிடைத்ததே! இலத்தீன் அமெரிக்கப் புரட்சி படிப்படியாக ஒரு உயர் நிலையை நோக்கி முன்னேறி வருகிறது, அதில் பங்கேற்கும் நல்வாய்ப்பைப் பெற்றேன்! ... தாய்நாடு அல்லது இறப்பு! நாம் வெல்வோம்!"

தமாராவின் திறமையை அறிந்த சே குவேரா அமெரிக்க ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலை பெறும் விதமாக இலத்தீன் அமெரிக்கா முழுவதும் விடுதலைப் புரட்சி ஏற்படுத்தி "இரண்டு, மூன்று எனப் பல வியட்நாம்களை" உருவாக்குவதையே இலக்காகக் கொண்டு

பொலிவியாவில் தொடங்கவிருக்கும் ஃபேண்டஸ்மா திட்டத்திற்கு அவரையும் தேர்ந்தெடுத்தார்.

பொலிவியாவிற்கான சே குவேராவின் திட்டத்தின் முதன்மை அமைப்பாளராக உலிசஸ் எஸ்ட்ராடா இருந்தார். 1963இல், சே குவேராவுக்கு முன்பே பொலிவியாவிற்கு அனுப்பவிருந்த முக்கிய இரகசிய முகவராக தான்யாவைப் பயிற்றுவித்தார் உலிசஸ் எஸ்ட்ராடா. புலனாய்வுப் பணிகளுக்காக தான்யா கடுமையான பயிற்சியில் ஈடுபட்டார். தலைமறைவாக வாழவும், ஆபத்திற்குரிய சிக்கலான பணிகளை நிறைவேற்றவும், இரகசியமாகத் தகவல்களைச் சேகரிக்கவும், துன்பங்களை அமைதியாகச் சகித்துக் கொள்ளவும் தன்னைத் தயார்படுத்திக் கொண்டார். ஆயுதப் பயிற்சி பெற்றார். வானொலி மூலம் எவ்வாறு இரகசியத் தகவல் தொடர்பு கொள்வது என்பதையும் கற்றுக் கொண்டார். இந்தக் காலகட்டத்தில்தான் தமாரா தான்யாவாகப் பிறந்தார். நாஜிக்களை எதிர்த்துப் போராடிய சோவியத் ரஷ்யாவின் வீரமகள் தான்யாவின் நினைவில் அப்பெயரையே தன் புனைபெயராகச் சூட்டிக் கொண்டார் தமாரா. உளவு நடவடிக்கை விதிமீறலாக இருந்த போதும், தான்யாவாலும், உலிசஸ் எஸ்ட்ராடாவாலும் ஒருவரை ஒருவர் நேசிக்காமல் இருக்க இயலவில்லை. அவர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகளுக்கு அது தடையாகவும் இருக்கவில்லை.

1964 மார்ச்சில் சே குவேரா தொழில்துறை அமைச்சகத்தின் அலுவலகத்தில் பொலிவியத் திட்டத்தில் நிறைவேற்ற வேண்டிய இரகசியப் பணிகளை தான்யாவிடம் விவரித்தார். இலத்தீன் அமெரிக்கக் கண்டம் முழுவதும் புரட்சியை ஏற்படுவதை இலக்காக கொண்ட கெரில்லா இயக்கத்தின் நகர்ப்புற வலையமைப்பை தான்யாவே உருவாக்க வேண்டியிருந்தது. எவ்வளவு கடினமான சூழ்நிலை வந்தாலும் அங்குள்ள இடதுசாரி அரசியல் அமைப்புகளுடன் ஒன்றிணைத்துக் கொள்ளக் கூடாது என்றும் உண்மையான அடையாளத்தை ஒருபோதும் வெளிப்படுத்தக் கூடாது என்றும் சே குவேரா தான்யாவை எச்சரித்தார்.

கியூப அரசிற்காக (1961-1967) பணியாற்றிய ஆண்டுகளில், தான்யா பல்வேறு மாறுவேடங்களை ஏற்றார். மார்ட்டா இரியார்ட்டே என்ற செக் பெண்ணாக மாறினார். விட்டோரியா பான்சினி என்ற இத்தாலியப் பெண்ணாகவும் மாறினார். 1964 ஏப்ரல் 9இல், ஹெய்டி பைடர் கோன்சலஸ் என்ற பெயரிலான கடவுச்சீட்டுடன் தான்யா மேற்கு ஐரோப்பாவுக்குச் சென்றார். கியூப உள்துறைத் தொழில்நுட்பத் துணை அமைச்சகத்தின் மற்றொரு முகவரான ஜோஸ் கோமேஸ் அபாத் தான்யாவுக்கு பிராக் நகரில் பயிற்சியளித்தார்.

1964ஆம் ஆண்டு ஏப்ரல் 11இல் பிராக் நகரிலிருந்த போது தனது தாய்க்கு அனுப்பிய கடிதத்தில் தன் புரட்சிப் பணியின் வெற்றி பற்றிய அசைக்க முடியாத நம்பிக்கையையும், உலிசஸ் எஸ்ட்ராடாவுடனான காதலையும், தன் கனவுகளையும் பின்வருமாறு எழுதியுள்ளார். "சரி, இப்போது இன்னொரு விஷயம்: நான் திரும்பி வருவதற்கு முன்பு அவர்கள் என் சின்னக் கறுப்பரை திருடவில்லை என்றால், திருமணம் செய்து கொள்ளப் போகிறேன். அவர் எப்படி இருப்பார்: ஒல்லியாக, உயரமாக, மிகவும் கறுப்பாக, மிகவும் பாசமுள்ள கியூபர், நீங்கள் ஒப்புக் கொள்வீர்களா ??? ஆ, நான் மிக முக்கியமான விஷயத்தை மறந்து விட்டேன்: அவர் மிகவும் புரட்சிகரமானவர், அவரும் மிகவும் புரட்சிகரமான பெண்ணையே விரும்புபவர்."

அரசியல் ஆர்வமில்லாதவராக, கம்யூனிச எதிர்ப்பாளரைப் போல் இருக்கும் விதமாக தன் மொழியையும், பழக்கங்களையும் மாற்றிக் கொண்ட தான்யா, லாரா குட்டிரெஸ் பாயரின் என்ற புதிய அடையாளத்துடன் பொலிவியாவுக்குப் புறப்பட்டார்.

**<u>பொலிவியாவில் (1964-67):</u>**

தான்யாவை நேரடியாக ஆயுதப் போராட்டங்களில் ஈடுபடுத்துவது சே குவேராவின் திட்டம் அல்ல. பொலிவிய அரசின் ஆளும் வர்க்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி உளவு வேலை செய்வது, அவர்களைப் பற்றிய தகவல்களைத் தெரிவிப்பது, கெரில்லாப் போராளிகளைத் தலைமறைவாக, பாதுகாப்பாக இருப்பதற்கான சூழ்நிலைகளை உறுதி செய்து ஆயுதப் போராட்டங்களுக்கான தயாரிப்பு மற்றும் அமைப்பாக்க வேலைகளை தான்யாவிடம் ஒப்படைத்தார்.

அக்டோபர் 1964இல் பொலிவியத் திட்டத்தின் உளவாளியாக லாரா குட்டிரெஸ் பாயர் என்ற பெயரில் ஒரு இனவியலாளராக பொலிவியாவின் லா பாஸை அடைந்தார். பொலிவிய ஆளும் வர்க்கங்களுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களைப் பற்றியும் இராணுவத்தின் வலிமை பற்றியும் தகவல்களைத் தெரிவிக்க வேண்டும் என்றும், பொலிவியா முழுவதும், குறிப்பாக கிராமப்புறங்களில் பயணம் செய்து சமூக, அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகளை ஆழமாக ஆய்வு செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டார்.

இனவியலாளரும், தொல்லிசையியலாளருமான ஜூலியா எலெனா ஃபோர்டனுடன் நட்புக் கொண்ட தான்யா அவரது ஆய்வுக் குழுவில் இணைந்து பணியாற்றினார், இது கல்வி அமைச்சகத்தின் நாட்டுப்புறவியல் துறையுடன் இணைக்கப்பட்டிருந்தது. அர்ஜெண்டினாவைச் சேர்ந்த ஒரு வலதுசாரியாகவும் நாட்டுப்புறக் கலை நிபுணராகவும் நடித்து, பொலிவியாவின்

கல்வி மற்றும் அதிகார வட்டங்களின் நட்பைப் பெற்றார். பொலிவியாவின் ஜனாதிபதி ரெனே பேரியெண்டோஸின் நட்பையும் பெற்றார். இவ்வாறு அரசியல் உயரடுக்கைப் பற்றியும், அதன் ஆயுதப் படைகளின் வலிமை பற்றியும் தகவல் சேகரித்தார். இராணுவத்துடனான அமெரிக்க உறவுகள் மற்றும் முக்கிய ஆயுதப் பிரிவுகளின் இருப்பிடம் பற்றிய தகவல்களையும் பெற்றார்.

தான்யா நாட்டுப்புறக் கலையை ஆர்வத்துடன் பயின்றார். பொலிவிய மலைப் பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்யும் போது நாட்டுப்புற பாடல்களை சேகரித்தார். பொலிவிய இசையின் அரிய தொகுப்புகளில் ஒன்றை உருவாக்கியுள்ளார். அர்ஜெண்டினாவின் சால்டா நகரில் நடைபெற்ற விழாவில் பொலிவியக் கல்வி அமைச்சகத்தின் நாட்டுப்புறவியல் துறை சார்பில் கலந்து கொண்டார்.

தான்யா அங்குள்ள குழந்தைகளுக்கு ஜெர்மன் மொழியைப் பயிற்றுவித்தார், இதன் மூலம் அவர்களின் வீடுகளுக்குச் செல்லவும், உறவினர்களுடன் உரையாடுவதற்குமான வாய்ப்பைப் பெற்றார்.

தான்யா தனது குடியிருப்பில் சுவரின் பின்னால் ஒரு பெட்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வானொலியின் மூலம், பெண்களுக்கு ஆலோசனை என்ற நிகழ்ச்சியின் மூலமாக வானொலி ஒலிபரப்பாளராகப் பணியாற்றிக் கொண்டே, இடையிடையே குறியீடுகளின் மூலம் ஃபிடல் காஸ்ட்ரோவுக்கும், சே குவேராவுக்கும் இரகசியத் தகவல்கள் அனுப்பியுள்ளார்.

1965இல், தான்யாவின் சிறந்த சேவைகளுக்காக கியூப கம்யூனிஸ்ட் கட்சி அவரை கட்சியின் உறுப்பினராக்கிய போது பெருமகிழ்ச்சி அடைந்தார். 1966இல் தான்யா பொலிவியக் குடியுரிமையும், கடவுச் சீட்டும் பெறுவதற்காக ஒரு முக்கியமான சுரங்கப் பொறியாளரின் மகனும், மின்சாரப் பொறியியல் மாணவருமான மரியோ மார்டினெஸைத் திருமணம் செய்து கொண்டார்.

1966 ஜூலையில், தான்யா கெரில்லாப் போராளிகளின் வருகைக்கான தயாரிப்பு வேலைகளைத் தொடங்கினார்: அவர் கிடங்குகளாக பயன்படுத்தக் கூடிய பாதுகாப்பான வீடுகளை வாடகைக்கு எடுத்தார். சே பொலிவியாவுக்கு வந்த போது, மொரிசியோவையும், ஜோசாமியையும் கெரில்லா முகாமில் சந்திக்க அர்ஜெண்டினாவுக்குச் செல்லுமாறு தான்யாவுக்கு உத்தரவிட்டார். அர்ஜெண்டினாவில் கெரில்லா வலையமைப்பை ஏற்படுத்தும் முயற்சியில் சே ஈடுபட்டார்.

பொலிவிய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சி தோல்வியுற்றது. பொலிவிய கம்யூனிஸ்ட் கட்சி போராட்டத்திற்குத் தலைமையேற்க விரும்பியது, சே அதை

மறுத்து விட்டார்.

1967 மார்ச்சில் கெரில்லாப் போராளிகளுக்கும் பொலிவிய இராணுவப் படைகளுக்கும் முதல் ஆயுத மோதல் ஏற்பட்டது. கெரில்லா போராளிகள் எதிரிகளை வென்று ஆயுதங்களையும், எதிரிகளின் செயல்பாட்டுத் திட்டங்களையும் கைப்பற்றினர்.

மார்ச்சில், அர்ஜெண்டினாவில் அனைத்துத் தடைகளையும் கடந்து, தனது பணியை முடித்த, தான்யா தனது வாகனத்தில் பிரஞ்சு நாட்டைச் சேர்ந்த ரெஜிஸ் டெப்ரே மற்றும் அர்ஜெண்டின சிரோ புஸ்டோஸ் ஆகியோருடன் கெரில்லாப் போராளிகளின் இடத்துக்கு ஓட்டிச் சென்றுள்ளார். சே அங்கு இல்லை. அவருக்காகக் காத்திருந்த போது, விசென்டே ரோகாபாடோ டெர்ராசாஸ் மற்றும் பாஸ்டர் பரேரா குயின்டனா ஆகிய பொலிவியப் போராளிகள் அங்கிருந்து தப்பித்து வெளியேறினர், அவர்கள் ஆயுதங்களை விற்க முயன்ற போது அவர்களின் மூலம் பொலிவியா இராணுவமும் உளவுத்துறையும் கெரில்லா முகாமில் தான்யா இருப்பதையும், அவர் ஒரு வாகனத்தில் பயணம் செய்து காமிரிக்கு வந்ததையும் தெரிந்து கொண்டனர். அந்த வாகனத்தில் தவறுதலாக விடப்பட்டிருந்த அவரது ஆவணங்களிலிருந்து லாரா குட்டிரெஸ் பாயர் என்ற பெயரில் உள்ள தான்யா ஒரு கெரில்லாப் போராளி என்பதைக் கண்டுபிடித்து விட்டனர்.

அதன் பிறகு தான்யா நகர்ப்புறத்தில் இருப்பது உயிருக்கு ஆபத்து என்பதால் அவர் கெரில்லா போராளிகளின் ஆயுதப் படைக்கு வந்து சேர்ந்தார். அவருக்கு சீருடையும், எம் -1 துப்பாக்கியும் தரப்பட்டது. சே குவேரா, தான்யாவை ஜோவாகின் (ஜுவான் விட்டாலியோ அக்குனா நீஸ் தலைமையிலான ஆயுதப் படையில் தான்யாவை இணைத்தார்.

தான்யாவும் ஆயுதப் போராளியாக ஆனதால் வெளி உலகுடன் தொடர்பில்லாமல், போராளிகள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். தான்யா உணவு விநியோகம் செய்யும் பொறுப்பை ஏற்றார், வானொலி ஒலிபரப்புகளை கண்காணித்து தகவல் அளித்தார். கரடுமுரடான நிலப்பரப்பில், பாறைகளில் கயிறுகளை கட்டி நடக்க வேண்டியிருந்தது. தான்யா காலில் கடுமையான புண்களுடன் நடந்து சென்றார். அவருக்கு கடும் காய்ச்சல் ஏற்பட்டது. மற்ற போராளிகளும் சிகோ ஒட்டுண்ணியின் தாக்குதலால் பாதிக்கப்பட்டிருந்தனர்.அதனால் சே குவேரா நோயுற்ற போராளிகளைக் கொண்ட குழுவை மலைகளுக்கு வெளியே அனுப்ப முடிவு செய்தார். சே போராட்டப் படைகளை இரண்டாக பிரித்தார்.

ஜோவாகின் தலைமையின் கீழ், கெரில்லா மறுசீரமைப்புப் படையை ரியோ கிராண்டே ஆற்றுப் பகுதிக்கு அனுப்பி வைத்தார். நாளடைவில் இரண்டு படைகளும் அறவே தொடர்பிழந்தன.

**மரணம்:**

ஆகஸ்ட் மாத இறுதியில், ஜோவாகின் தலைமையில் படையினர் அப்பகுதியைச் சேர்ந்த விவசாயி ஹொனராடோ ரோஜாஸ் வீட்டை அடைந்தனர். ரோஜாஸ், அவர்களுக்கு வாடோ டி யேசோவுக்குக் குறுக்கு வழியில் செல்ல வழிகாட்டுவதாக ஒப்புக் கொண்டார். அவர்கள் அதே வீட்டில் தூங்கினர்.

ஆகஸ்ட் 31 அன்று, ஒப்புக்கொண்ட நேரத்தில், கெரில்லாப் போராளிகளை துரோகி ரோஜாஸ், வாடோவுக்கு வழிகாட்டுவது போல் அவர்களைக் காட்டிக் கொடுத்தார். அவர்கள் நடந்து கொண்டே இருந்தனர், சூரியன் மறைவதற்கு முன்பு, ரோஜாஸ் அவர்களிடம் கைகுலுக்கி விடை பெற்றார். ஆற்றின் இரு மருங்கும், சுடுவதற்குத் தயாராகத் துப்பாக்கிகளுடன் பொலிவிய ராணுவத்தின் ரோந்துப் படையினர் சூழ்ந்திருந்தனர். இடுப்பு வரை தண்ணீர் சூழ நின்றிருந்த தான்யா தன் துப்பாக்கியின் விசையை அழுத்த முயலும் போது ஒரு தோட்டா அவர் நுரையீரலைக் கிழித்துச் சென்றது. அவர் நீரோட்டத்தால் அடித்து செல்லப்பட்டார். அவருடன் இருந்த 7 கெரில்லாப் போராளிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர். செப்டம்பர் 6ல் அவரது உடல் பொலிவிய இராணுவத்தால் மீட்கப்பட்டது. அவரது சடலம் மற்ற கெரில்லா போராளிகளுடன் அடையாளமிடப்படாத கல்லறையில் அடக்கம் செய்ய முடிவு செய்யப்பட்டது. ஒவ்வொரு ஆகஸ்ட் 31ஆம் தேதியும், அவரது உடல் கண்டெடுக்கப்பட்ட இடம் பூக்களால் நிறைகிறது. கெரில்லா தான்யா, ரியோ கிராண்டேவின் காட்டுப் பூவாக இலத்தீன் அமெரிக்கா எங்கும் விடுதலை வேட்கைக்குப் புத்துயிர் ஊட்டுகிறார்.

அவரது மரணம் வானொலியில் அறிவிக்கப்பட்ட போது, அருகில் காடுகளிலிருந்த சே குவேரா இச்செய்தியை முதலில் நம்ப மறுத்து விட்டார்; தன்னை மனச் சோர்வடையச் செய்வதற்காக இராணுவம் செய்யும் பிரசாரம் என்று சந்தேகித்தார். ஃபிடல் காஸ்ட்ரோ தான்யாவின் மறைவை அறிந்ததும், "கெரில்லா தான்யா கியூபப் புரட்சியின் நாயகர்" என்று அறிவித்தார்.

**தான்யாவின் நினைவில்:**

1995இல், ஓய்வுபெற்ற பொலிவிய இராணுவ அதிகாரி ஜெனரல் மரியோ வர்காஸ் சலினா, சே குவேராவின் வாழ்வை ஆய்வு செய்த வரலாற்றாசிரியரான ஜான் லீ ஆண்டர்சனிடம்

கெரில்லாப் போராளிகள் அடக்கம் செய்யப்பட்ட இடங்களைத் தெரிவித்துள்ளார். ஜான் லீ ஆண்டர்சன் மூலம் 1997இல் சே குவேராவின் உடல் மீதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதன் பிறகு, தான்யா பங்கேயின் உடல் மீதங்கள் 1998 அக்டோபர் 13 அன்று வலேக்ராண்டே இராணுவத் தளத்தின் அடையாளமிடப்படாத கல்லறையில் கண்டுபிடிக்கப்பட்டு கியூபாவுக்குக் கொண்டு சேர்க்கப்பட்டது. சே குவேராவும் பொலிவியாவில் இறந்த போராளிகளும் அடக்கம் செய்யப்பட்ட சாண்டா கிளாரா கல்லறையில் தான்யா அடக்கம் செய்யப்பட்டார்.

1974ஆம் ஆண்டில் சிம்பியோனீஸ் விடுதலை இராணுவத்தை சேர்ந்த பாட்டி ஹியர்ஸ்ட் "தான்யா" என்று தன் பெயரைப் மாற்றிக் கொண்டார்.

1974இல் சோவியத் வானியலாளர் லியுட்மிலா ஜுராவ்லியோவாவால் கண்டுபிடிக்கப்பட்ட சிறு கிரகத்திற்கு ”2283 தான்யா பங்கே” எனப் பெயரிடப்பட்டது.

வெனிசுலா நாட்டுப்புறப் பாடகர், பாடலாசிரியர் அலி பிரைமரா தான்யாவின் அர்ப்பணிப்பை நினைவுபடுத்தும் வகையில். தான்யா என்ற பாடலை எழுதினார்.

லூய்கி நோனோவின் 1972 இசை / நாடகப் படைப்பான அல் கிரான் சோல் கரிகோ டி அமோரின் முதல் பகுதியிலும் தான்யா பங்கே இடைவிடாது தோன்றுகிறார்.

ஹெய்டி ஸ்பெகோக்னா தான்யாவைப் பற்றிய ஒரு ஆவணப் படத்தை 1991இல் வெளியிட்டார்.

ஜெர்மனி ஒன்றுபடுவதற்கு முன்பு, கிழக்கு ஜெர்மனியில் தான்யாவின் பெயரில் 200 இளைஞர் கழகங்கள் செயல்பட்டன..

“ஒரு நாள் என் பெயர் மறக்கப்படுமா,

என்னைப் பற்றிய எதுவுமே இப்பூமியில் இருக்காதா?”

தான்யா பங்கே 1966ல் எழுதிய கடைசிக் கவிதையின் வரிகள் இவை.

இல்லை, வீரத் தான்யா! சர்வதேசியவாதியாய் அர்ஜெண்டினாவில் தொடங்கி, ஜெர்மனி, கியூபா, பொலிவியா என எங்கும் புரட்சியை விதைத்த உங்களை மறக்க முடியுமா தான்யா? உங்கள் நினைவாக உலகெங்கும் தான்யாக்கள் பிறந்து கொண்டுதானிருக்கிறார்கள், தான்யாக்கள் போராடிக் கொண்டுதானிருக்கிறார்கள்.... தான்யாக்கள் என்றென்றும் பிறப்பார்கள், போராடுவார்கள்... (தொடரும்)

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

# அழகியலும் மார்க்சியமும்

**தியாகு**

## *மார்க்சிய அழகியலும் கலைச் சமூகவியலும்*

அழகியலும் மார்க்சியமும் என்பது குறித்தும், அவற்றுக்கிடையிலான உறவு குறித்தும் பேசுவது சமூக வாழ்விலும் உணர்விலும் அனைத்துத் தளங்களிலும் நிலவும் கொள்கைகளை அந்தந்தத் துறைக்கும் பொருத்திப் பார்ப்பது மட்டுமே அன்று .ஒரு மார்க்சியர், மார்க்சியர் என்ற முறையில், கலை குறித்துச் சொல்ல வேண்டியதை ஒரு கலைப் படைப்பில் மறைந்துள்ள கருத்தியலைப் பிழிந்து கொடுப்பதற்கான முன்மொழிதலாகச் சுருக்கி விட முடியாது; அதன் அழகியல் மதிப்பையும் கருத்தியல் உள்ளடக்கத்தையும் நிகர்ப்படுத்தும் முயற்சியாகச் சுருக்கி விட முடியவே முடியாது. கலையை அதன் சமூகக் கட்டுண்டமையாகச் சுருக்கி விடுவது பரந்த அளவிலான படைப்பியல் நிகழ்வாய்ப்புகளைத் திறந்து விடவோ மூடி விடவோ செய்வது உண்மைதான் என்றாலும் அப்படிச் சுருக்கி விட முடியாது. முடியும் என்றால், வேலை ஒப்பளவில் எளிதாகி விடும். மார்க்சிய அழகியல் என்பதே கலைச் சமூகவியலாகச் சுருக்கப்பட்டு விடும்; சமூகவியலர்கள், கலைஞர்கள் இருசாராருமே அவ்வளவாகக் கவலைப்பட வேண்டியிருக்காது. குறிப்பாகச் சொன்னால், மார்க்சியத்தின் பங்குப் பணி நம் வாழ்வுக்கு மேலதிகச் செழுமையும் ஆழமும் ஊட்டுவதை விடவும் அதனை வறுமைப்படுத்தி அதன் பரிமாணங்களைச் சுருக்குவதே எனத் தவறாக நம்புகிறவர்கள் கவலைப்படவே தேவையில்லை.

கலை பற்றிய சமூகவியல் நோக்குநிலை எவ்வாறு எல்லைகளுக்குட்பட்டது என்பதையும் சரி, அழகியலின் அடிப்படைச் சிக்கல் எத்தன்மையது என்பதையும் சரி, இரண்டையுமே மார்க்ஸ் அறிந்திருந்தார். இச்சிக்கலைத் தீர்க்க அவர் முயற்சியும் செய்தார் – -என் பார்வையில் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. மார்க்ஸ் முன்னிறுத்திய படி, இச்சிக்கல், தொல்சீர் கிரேக்கக் கலையை எடுத்துக்காட்டாகக் கொண்டால், அச்சமூகத்தின் விழுமியங்களாலும் உணர்ச்சிகளாலும் ஆவல்களாலும் ஊட்டம் பெற்ற அந்தக் கலைப் படைப்புகள் எவ்வாறு நமக்கு – -அழகின் சட்ட விதிகளாகவும் கூட -– மதிப்புக் கொண்டவை என்பதைத் தீர்வு செய்வது பற்றியதே தவிர, அக்கலைக்கும் அக்காலத்திய சமூகத்துக்குமான உறவுக்கு எவ்வாறு விளக்கமளிப்பது என்பது பற்றியதன்று, தொல்சீர் கலையின் பேரொளியில் மயங்கிய மார்க்சிடம் அதன் மதிப்புகளை அறுதிகளாகக் கருதும் போக்கு காணப்பட்டது என்ற உண்மையை இக்கணம் கண்டுகொள்ள

வேண்டாம். எனின் கலைப் படைப்புகளின் நிலைபேற்றுக்கு விளக்கமளிப்பதில் உள்ள இடர்ப்பாட்டினை அவர் சுட்டிக்காட்டியது சரியானது. கலைப் படைப்புகள் (இங்கு நாம் மெய்யான கலைப் படைப்புகளைச் சொல்கிறோம்) தம்மீதான கட்டுண்டமையைக் கடந்து நிற்க வல்லவையாக இருப்பதற்கு விளக்கமளிப்பது கடினம். இந்த வல்லமையால் அவை குறிப்பானதும் பொதுவானதும் என்ற, நிலையற்றதும் நிலையானதும் என்ற ஒருவிதமான முரணிலையின் அவதாரமாகி விடுகின்றன எனலாம். அழகியற்சமூகவியலுக்கு எதிராய் -- அதாவது கலையில் உருப்பெற்ற கருத்தியலுக்கேற்பக் கலையை மதிப்பிடுவது, கலையைத் தோற்றுவித்த சமூக நிலமைகளாகவே கலையைச் சுருக்கிப் பார்ப்பது எனும் போக்கிற்கு எதிராய் -- முதன்முதலாக நம்மை எச்சரித்தவர் மார்க்ஸ். அவர் அப்படிச் செய்யாமல் இருந்திருக்க முடியாது. உண்மையில் ஒரு துறைக்கும் மறு துறைக்கும் இடையே முழுமையான நிகர்நிலை ஏதும் இல்லை. கலை என்பது தன்னாட்சியுள்ள துறை (இந்தத் தன்னாட்சியும் சார்புநிலைப்பட்டதே என்பதைப் பிறகு பார்ப்போம்), அதனை மதம், பொருளியல் அல்லது அரசியல் போன்ற வேறு துறையாகச் சுருக்கும் எல்லா முயற்சிகளும் கலைக்கே உரிய பண்பு வேறுபாட்டைத் துடைத்தழிப்பதாக முடியும். துல்லியமாகச் சொன்னால் இந்தப் பண்பு வேறுபாடுதான், மார்க்ஸ் பார்வையில், கிரேக்கக் கலை அதன் சமூகக் கட்டுண்டமைக்கு அடங்காமல் தப்பிக்க உதவியது.

ஆக, கலை என்பது தன் சமூகக் கட்டுண்டமையின் குறிப்பான தன்மையைக் கடந்து நிற்குமளவுக்குத் தன்னாட்சியுள்ளது -- தன்னாட்சியுள்ள, பண்புவகையில் தனிவேறான எல்லாத் துறைகளையும் போலத்தான் அதுவும். இவ்வாறு கடந்து நிற்கும் நிலை அடிப்படையில் கலையின் அடிவயிற்றிலேயே தங்கியிருப்பது, இது சமூகவியல் சுருக்கப்பாடுகள் அனைத்துக்கும் நேர் எதிரானது. ஆதலால், மார்க்சினது அழகியல் கோட்பாட்டின் குறிக்கோள் கலையை அதன் சமூகக் கட்டுண்டமையின் நோக்குநிலையிலிருந்து — அதாவது கருத்தியல் உள்ளடக்கத்தில் வெளிப்படும் இந்தக் கட்டுண்டமையின் நோக்குநிலையிலிருந்து -- விளக்குவது தவிர வேறன்று என்றால், அது ஒரு கலைச் சமூகவியல் என்பதற்கு மேல் போகவே போகாது.

இது ஓர் அடிப்படை மார்க்சியக் கொள்கையை, அதாவது உணர்வுநிலையை சமூக வாழ்நிலை தீர்மானிக்கிறது என்பதை மறுப்பதாகாது. கலை என்பது இவ்வகையில் மனிதனின் பிறவகை ஆன்மிகச் செயற்பாடுகளோடு ஒப்புநோக்கின் சிறப்புரிமை பெற்ற நிலையில் இருப்பதன்று. காட்டாக, மறுமலர்ச்சிக் காலத்தியக் கலை ஒரு திட்டவட்டமான சமூக வரலாற்றுச்

சூழலில் பொதிந்துள்ளது. மனிதன் பற்றியதொரு குறிப்பான கருத்தாக்கமும், மெய்ந்நடப்பையும் நிகழ்வுகளையும் பற்றியதொரு குறிப்பான கண்ணோட்டமும் இச்சூழலுக்கே உரியவை. நடுமக்கால வடிவங்களின் நீட்சியாக உயிர்த்துடிப்புள்ள உண்மையான படைப்புக் கலையை உண்டாக்க மறுமலர்ச்சியால் முடியவில்லை. ஏனென்றால் மனிதன் பற்றியதொரு புதிய கண்ணோட்டம் — முதலிய மாந்தநேயம் — ஏற்கெனவே நடுமக்காலத்தின் இறைமையவாத, திருச்ச்சபைப் பிரபுத்துவக் கண்ணோட்டத்தை அகற்றி விட்டிருந்தது. மறுமலர்ச்சிக் கலை என்பது நடுமக்கால வடிவங்களுக்கு ஒரு புதிய கருத்தியல், உணர்வியல் உள்ளடக்கம் தர முயலவில்லை. அது ஒரு சமகாலக் கலையைப் படைக்கும் முயற்சியில் வெற்றி கண்டது. இந்த சமகாலக் கலை மனிதன் பற்றிய புதிய மனிதநேயக் கண்ணோட்டத்துடன் இசைவுறுவதில் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் வழி நாடியது. ஆதலால், நடுமக்கால ஓவிய வெளி தொடர்பற்ற வெளிகளின் கூட்டுத்தொகையாக இருந்ததற்கு மாறாக ஓவியந்தீட்டலில் ஒற்றை நோக்குநிலையின் — அதாவது வெளி என்பதை மறைந்துசெல்லும் புள்ளியைச் சுற்றி ஒழுங்கமைந்ததாகக் காணும் பார்வையின் — வளர்ச்சியானது வெறும் வடிவ அளவிலான புதுமையாக மட்டும் இருக்கவில்லை. உலகம் முன்போல் இப்போது தெய்வக் கண்கொண்டு காணப்படவில்லை; அதற்குப் பதிலாக, வெளிக்குத் தொடர்ச்சித் தன்மை வழங்கும் வகையில், ஒரு மாந்தக் கண் வடிவங்களையும் பின்புலத்தையும் ஒழுங்கு செய்தது. இரு நிலைகளிலும் ஓவியந்தீட்டுவது மனிதனே என்பதில் ஐயமில்லை. ஆனால் முதலாவதில் ஆண்டவரின் அடக்க ஒடுக்கமான தொண்டனாகவும், இரண்டாவதில் அண்டத்தின் நடுவமாகவும் அச்சாணியாகவும் அவன் இதைச் செய்கிறான்.

ஒற்றை நோக்குநிலையானது மறுமலர்ச்சிக்கால ஓவியர் இயற்கையைத் தமது அளவை கொண்டு, அதாவது மறுமலர்ச்சிக்குரிய மாந்தக் கண்ணின் அளவை கொண்டு சித்திரிக்க உதவியது. ஆகவே அவர் மெய்யான, இயற்கை-மாந்த அல்லது மாந்தமயப்பட்ட வெளியை ஓவியமாக்கினார். இதே போல் மறுமலர்ச்சிக் கலைஞர்களும் ஆன்மிகப் பிறவியாக மனிதனுக்குள்ள மதிப்பை வலியுறுத்தி, அவனது மெய்யுருவும் புலனாசையுமான தன்மையை அறுதியிட்டுரைத்தனர். நடுமக்காலத் துறவியல் உலகியல் வாழ்க்கையின்பங்களை எதிர்த்தது. இப்படி மனிதரின் புலனாசைத் தன்மை மறுவாழ்வு பெறுவதை ஒரு மறுமலர்ச்சிக்கால ஓவியர் நடுமக்கால மரபியல், அடுக்கியல், வடிவியல் கொண்டு எவ்வாறு வெளிப்படுத்தக் கூடும்? இயற்கைக்கு அப்பாற்பட்டது மெய்யானதன் மீதும், ஆன்மிகம் மெய்யுருவின் மீதும் முதன்மை

பெற்றிருப்பதை வெளிப்படுத்துவதற்கென்றே வளர்த்தெடுக்கப்பட்டவை ஆயிற்றே இந்த வடிவங்கள்!

*சமூகக் கட்டுண்டமையும் கலையின் தன்னாட்சியும்*

சமூகக் கட்டுண்டமை என்பது ஒரு கலைப்படைப்பின் தன்மையை முழுமையாக முன்னுறுதி செய்வதில்லை என்றாலும், குறிப்பிட்ட கலைப் படைப்புகளுக்கு என்பதை விடவும் அவற்றை ஆளும் அழகியல் போக்குக்கு நிகழ்வாய்ப்புள்ள தொடுவானத்தைத் திறந்து விடுகிறது என்பதை மறுமலர்ச்சிக் கலையின் எடுத்துக்காட்டு நம்மைக் காணச் செய்கிறது. சமூகக் கட்டுண்டமை என்பது கலையியல் நிகழ்வாய்ப்புகளின் வகைமையை வற்றச்செய்து விடுவதில்லை என்றாலும், அதனைக் கண்டுகொள்ளாமலிருக்க முடியாது; கலை குறித்து ஒரு கண்டிப்பான சமூகவியல் கருத்தாக்கத்தை மறுதலிப்பதன் வாயிலாக, கலைச் செயற்பாட்டைத் தன்னாட்சியும் தனித்துவமும் கொண்ட நிகழ்வாகப் பொழித்துரைக்க வழிதிறக்கிறோம். கலை என்பது ஒரு தன்னாட்சித் துறை; ஆனால் கலைத் துறையின் தன்னாட்சி அதன் சமூகக் கட்டுண்டமையினாலும், சமூகக் கட்டுண்டமையிலும், சமூகக் கட்டுண்டமையின் ஊடாகவும்தான் நிலவுகிறது.

இந்த அழகியல்... சமூகவியலாகச் சுருக்கப்பட்ட அழகியலிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது? இரண்டுமே சமூகக் கட்டுண்டமையின் முக்கியத்துவத்தை அறிந்தேற்கின்றன. ஆனால் சமூகவியல் வகைப்பட்ட அழகியல் தன்னாட்சியையும் கட்டுண்டமையையும் இயங்குமறுப்பியல் முறையில் பிரித்து வேறுபடுத்துகிறது என்னும் அதே போது, நாம் கலையின் கட்டுண்டமையை நமது தொடக்கப் புள்ளியாகப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம், தன்னாட்சி, கட்டுண்டமை இரண்டையும் அவற்றின் இயங்கியல் ஒருமையில் வைத்துக் கலை குறித்து நம் கண்ணோட்டத்தைச் செழுமைப்படுத்திக் கொள்கிறோம். கலைச் சமூகவியலருக்கு எது இலக்கோ அது நமக்குத் தொடக்கப்புள்ளி ஆகிறது.

கலையின் சமூகக் கட்டுண்டமை தொடர்பில் அதன் தன்னாட்சியின் பொருள் இவ்விரு கூறுகளும் ஒன்றையொன்று விலக்குந் தன்மையவை என்பதன்று. அவற்றின் இயங்கியல் ஒருமையே வேறுபாட்டின் இதயம் என்பதை அடிக்கோடிட்டுச் சொன்னவர் எங்கெல்ஸ். அவர் தமது வாழ்வின் இறுதி ஆண்டுகளில் சமூகக் கட்டுண்டமைக்கும் மேற்கட்டுமானத்துக்குமான

உறவுமுறையை நெகிழ்வற்ற முன்னுறுதி நோக்கில் புரிந்து கொள்ளும் கருத்தமைவைக் குற்றாய்வு செய்ய வேண்டியிருப்பதை உணர்ந்தார். சமூகப் பொருளியல் நிலைமைகள் நேராகச் செயல் புரிவதில்லை, சிக்கலான வலைப்பின்னலாக அமைந்த இடைப்படிகள் ஊடாகவே செயல் புரிகின்றன என்பது அக்காலத்திய எங்கெல்ஸ் மடல்களில் காணப்படும் செய்தி. இந்த வலைப்பின்னலின் சிக்கலும், ஆகவே ஆன்ம விளைபொருளின் தன்னாட்சி அல்லது சார்புநிலையின் படித்தரமும் அதன் தன்மைக்கேற்ப மாறுபடுகிறது. காட்டாக, மெய்யியலைக் காட்டிலும், இன்னுங்கூட ஒரு கலைப் படைப்பைக் காட்டிலும், அரசியல் கோட்பாடு என்பது உறுதியான வர்க்க நலன்களைக் கூடுதலாக சார்ந்துள்ளது. கலைஞரின் தனித்துவமான, உருத்திட்டமான, உயிரோட்டமான அனுபவத்தின் ஊடாக இடைப்படிகளின் முழு வலைப்பின்னலையும் வடிகட்டியாக வேண்டும் என்ற காரணத்தாலேயே கலைப் படைப்பின் தன்னாட்சித் தரம் உயர்ந்து நிற்கிறது; அவரது படைப்பாற்றலின் தனித்துவத்தை உருவிலியில் வைத்துப் புரிந்து கொள்ளாமல், ஒரு சமூகப் பிராணியின் தனித்துவமாகவே கருத வேண்டும்.

*கலை வளர்ச்சியின் இரட்டை ஏரணம்*

உறுதியான, வரலாற்று வழிப்பட்ட, குறிப்பான சூழலில் அமைந்த மெய்யான மனிதப் பிறவிகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம் என்பதால், கலையியல் வெளிப்படலின் ஏந்துகள் இடையறாமல் செழுமைப்படுத்தப்படுகின்றன. இது வடிவங்களின் படைப்பைத் தன்னளவிலான ஒரு நோக்கம் ஆக்குவதன் பாற்பட்டதன்று. ஏனெனில் தூய வெளிப்படல் என்ற ஒன்றே இல்லை. உறுதிப்பட்ட ஒரு மனித உலகின் வெளிப்படல் மட்டுமே உண்டு.

வெளிப்படலின் ஒரு புதிய வடிவத்துக்கான தேடல் அல்லது ஒரு நிலைபெற்ற வடிவத்தை மேம்படுத்தல் என்பது கையில் கிடைத்த ஏந்துகளால் வெளிப்படச் செய்ய முடியாத ஒன்றை வெளிப்படச் செய்ய வேண்டியிருப்பதால் சுமத்தப்படும் தேவையின் பாற்பட்டதாகிறது. கலை என்பது வெளிப்படலின் புதிய ஏந்துகளை இடையறாமல் கண்டுபடைக்க வேண்டும் என்பதன் பொருள்: கலையனைத்தும் இயல்பிலேயே புதுமையாக்கம்தான், உயர்பெரும் கலையனைத்தும் எந்த அளவுக்குப் பாரம்பரியத்துடன் முறித்துக் கொள்ளும் திறனுடையாது என்பதாலேயே அளவிடப்படுகிறது என்பதாகும். புதியது, படைப்புத்திறனுடையது, ஆதலால் உண்மையாகவே புரட்சிகரமானது என்றால் அது தனிவேறாக முறித்துக் கொள்வதாகும், ஒரு நிலைமறுப்பு ஆகும்; ஆனால் பிற துறைகளில் போலவே, அறுதியான, அதிதீவிர நிலைமறுப்பன்று. இயங்கியல்

நோக்கில் ஒவ்வொரு நிலைமறுப்பும் கடந்த காலத்திலிருந்து மதிப்புக்குரியதை மீட்டெடுத்து, உட்செரித்து, உள்வாங்கிக் கொள்கிறது. இதன் பொருள்: வரலாற்று வழியில் கலைப்படைப்பு அடைந்துள்ள தளத்திலிருந்தே படைப்பனைத்தும் புறப்பட்டெழுகிறது என்பதுமாகும்.

நாம் வேறு துறைகளில், குறிப்பாக அறிவியல் தொழில்நுட்பத் துறையில் முன்னேற்றம் எனப் பேசும் அதே பொருளில் கலைத் துறையில் பேச முடியாது. உயர்பெரும் கலையனைத்தும் வெளிப்படலுக்கும் தொடர்பாடலுக்குமான நம் ஏந்துகளைச் செழுமைப்படுத்தும் போதே, மாந்த உலகை, மெய்ந்நடப்பை அறிந்து கொள்ளவும் வெளிப்படச் செய்யவும் நமக்குள்ள திறனையும் செழுமைப்படுத்துகிறது என்பது தெளிவு. எனவேதான் கலையனைத்தும் தனக்கென்று அக வரலாறுடையது என்றும், இதனைக் கண்டுகொள்ளாது விட்டால் கலை வறுமைப்படும் என்றும் சொல்கிறோம். ஒருவரால் கனவியக் கவிதை எழுத இயலும் எனலாம், ஆனால் கனவியக் கவிதை என்று எதுவும் இருந்ததில்லை என்பது போல் கவிதை எழுத வாய்ப்பில்லை. உண்மையான நடப்பிய ஓவியங்களைப் படைக்க முடியும் எனும் போதே –- நடப்பியம் என்ற பெயரில் உள்ளபடியே நடப்புக்கு மறுப்பாக, கலைக்கே மறுப்பாக இருந்துள்ள போக்குகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் பொருட்டு உண்மையான என்ற சொல்லுக்கு அடிக்கோடிட வேண்டும் –- இன்று நடப்பியராக இருக்கும் பொருட்டு பதிவோவியம் முதல் உருவிலி ஓவியம் வரை மிகப் பல்வேறான கலைப்போக்குகளின் பங்களிப்புகள் அனைத்தையும் உட்செரித்தாக வேண்டும்.

எங்கெல்ஸ் தம் பிற்காலத்திய மடல்களில் எழுதுவது போல், சமூகப் பொருளியல் காரணிகள் நடப்பிலுள்ள கருத்தியல், ஆன்மிக மூலப்பொருள்களை வார்க்கின்றனவே தவிர, நேராக மேற்கட்டுமானத்தின் மீது செயல் புரிவதில்லை. கலையின் வரலாற்றைத் தொடர்ச்சியற்ற தருணங்களின் தொடரென்று -- ஒவ்வொரு தருணமும் தன் காலத்திய சமூகத்துடன் மட்டுமே இணைப்புக்கொண்ட ஒரு தொடரென்று –- கருதுவதற்கில்லை. இதேபோல் வரலாற்று அல்லது சமூக மாற்றங்களுக்குத் தொடர்பில்லாத ஓர் அக அல்லது உள்ளார்ந்த ஏரணம் கொண்டும் அதை விளக்கி விட முடியாது. தொல்சீர்மையிலிருந்து –- குறிப்பாக அதன் புதுத் தொல்சீர்மை வடிவத்திலிருந்து –- மீப்புனைவியக் கொள்கைக்கான மாற்றத்தை வெறும் கலையியல் மாற்றம் அல்லது குறிப்பிட்ட சில மறைவான போக்குக்களின் வளர்ச்சி என்று விளக்குதல் கூடுமா? இதை விடவும் கூட ஏராளமானவை அதற்குள்ளன. மீப்புனைவியம்தான் முதலியச் சமூகத்தின் மரத்துப்போன, ஆள்சாரா ஏரணத்திற்கும் அதன் அன்றாட வாழ்வின் மந்தப்போக்குக்கும் எதிரான

கிளர்ச்சியின் முதல் முழுநிறை வெளிப்பாடாக அமைந்தது என்பதை யாரால் புறந்தள்ள முடியும்? மீப்புனைவியத்துக்கு முற்பட்ட ரூசோ தொடங்கி, வாழ்க்கையின் உருத்திட்டத் தன்மையையும் உயிர்த்துடிப்பையும் தனித்தன்மையையும் கலையின் துணைகொண்டு காக்கவும் காப்பாற்றவுமான ஒரு முயற்சியாகவும் அது திகழ்ந்தது அல்லவா? மீப்புனைவியக் கலைஞர் இந்தப் புதிய போக்கிற்கு வடிவம் தரப் புதிய வெளியீட்டு ஏந்துகளைப் படைக்க வேண்டியிருந்தது. ஆனால் அவரது படைப்பு வெற்றிடத்தில் பிறக்கவில்லை; அது தன் கடந்த காலத்தின் முழு எடையையும் ஏந்தியே வந்தது.

இதைக் கணக்கில் கொண்டால், கருத்துமுதற்கொள்கைக் கண்ணோட்டத்திலிருந்து கலை வரலாற்றை அக ஏரணத்தின் வளர்ச்சியாகச் சித்திரிக்கச் செய்திடும் முயற்சி அவ்வரலாற்றை முழுக்க முழுக்க ஒரு புற ஏரணத்தின் விளைவாக மட்டும் ஆய்வு செய்வதைப் போலவே ஒருபக்கச் சார்பானது. உண்மையில், புற ஏரணம் அக ஏரணத்தின் ஊடாக மட்டுமே செயல்படுகிறது, அக ஏரணம் புற ஏரணத்தின் ஊடாக மட்டுமே வெளிப்படுகிறது. ஆனால் கலையியல் வளர்ச்சியின் அக ஏரணம் கலையின் சார்புநிலைத் தன்னாட்சியை உறுதிசெய்யும் போக்குடையதாகும்; இந்தத் தன்னாட்சியோ அக ஏரணத்துக்கும் புற எரணத்துக்கும் இடையே, அதாவது சமூக வரலாற்றியல் வளர்ச்சிக்கும் கலையியல் வளர்ச்சிக்கும் இடையே, சரிநுட்பப் பொருத்தம் ஏதுமில்லாதது ஏன் என்பதற்கு விளக்கமாகிறது. இதைத்தான் மார்க்ஸ் *அரசியற்பொருளியல் குற்றாய்வுக்கு அறிமுகம்* என்ற தமது நூலின் கடைசிப் பக்கங்களில் பகுத்தாய்ந்தார்.

கலையும் சமூகமும் சமச்சீரற்ற முறையில் வளர்ந்து செல்வது பற்றிய இந்தக் கோட்பாட்டுடன் உணர்வளவில் நாம் உடன்படுவோமானால், குறிப்பிட்ட எந்தச் சமூகத்திலும் கலைக்குள்ள எதிர்கால நல்வாய்ப்புகளை நம்மால் முன்கூட்டி உறுதிசெய்ய முடியவே முடியாது. ஆனால் குமுகியம் போன்ற உயர்ந்த சமூக ஒழுங்கமைப்பு கலைப்படைப்புக்கு ஏராளமான நிகழ்வாய்ப்புகளைத் திறந்து விடுகிறது. கலையின் பால் முதலியத்துக்குள்ள பகைமை பற்றிய மார்க்சின் ஆய்வுரையை ஒப்புமைவழிப் பயன்படுத்தி, குமுகியம் கொள்கையளவில் கலைக்கு நன்மை பயப்பது என்று கூட நாம் சொல்லலாம். ஆனால், கலைக்குப் பகையான முதலியம் நாமறிந்த உயர்பெரும் கலைப் படைப்புகளைக் கொண்டிருப்பது போலவே, குமுகியம் அதுவாகவே முதலாளியம் படைத்ததை விட உயர்வான கலைக்கு உத்திரவாதம் ஆகாது; ஏராளமான காரணிகள் -- அகவய, புறவய இருவகைக் காரணிகளுமே -- இதில் தாக்கம் கொள்கின்றன.

சுருங்கச் சொல்லின், பண்புவழிப்பட்ட கண்ணோட்டத்தில், கலை, சமூகம் இவற்றின் சமச்சீரற்ற வளர்ச்சி பற்றிய விதி, கலை அதன் எல்லைகளை இடையறாமல் கடந்து செல்ல வேண்டிய தேவையைத்தான் எப்போதும் முன்னிறுத்துகிறது; கலைஞர்கள் சமூக முழுவதன் சாதனைகளின் நிழலில் மனநிறைவோடு நிலைகொள்ள விடாமல் தடுக்கிறது.

*கலை என்னும் படைப்புழைப்பு*

கலையின்பால் முதலியத்தின் பகை குறித்து மார்க்ஸ் பேசிய போது, அல்லது இந்த அடிப்படையில் ஒரு குமுகியச் சமூகத்தில் அந்தப் பகைமை ஒழிந்து போவதாக நாம் சொல்லும் போது, குறிப்பான ஒரு சமூகத்தில் கலையின் மெய்யான, புறவயத் தகுநிலையைச் சொல்கிறோமே தவிர அகவயக் காரணிகளால் — காட்டாக, கலையியல் பொருட்பாடுகள் குறித்து ஓர் அரசின் குறிப்பான அதிகாரவழிக் கொள்கையால் — உறுதி செய்யப்படும் மெய்ந்நிகழ்வைச் சொல்லவில்லை. மார்க்ஸ் இந்தச் சிக்கல்களை அலசி ஆராய வேண்டிய தேவை இருப்பதாக உணர்ந்தமைக்குக் காரணம் வெறும் அழகியல் பார்வைகள் மட்டுமல்ல, முதலியத்துக்கும் மனிதன் எனும் படைப்புத் திறனுள்ள பிராணிக்கும் இடைப்பட்ட தீவிர முரண்பாட்டை வெளிக்காட்ட வேண்டிய தேவையும்தான். இப்படிச் செய்ததன் வாயிலாக அவர் கலைப் படைப்பின், அதாவது மாந்தப் படைப்பின் தனிவேறான பண்பை, மூலத் தன்மையை எடுத்துக் காட்டினார். அழகியல் தொடர்பான இந்த உயிர்ச் சிக்கல்களை மார்க்ஸ் பொருளியல் தொடர்பான ஒரு கட்டுரையில் எடுத்துப் பேசினார். மார்க்சிய அழகியலைத் தேடும் சிலர் மார்க்ஸ் எழுதவே எழுதாத இறுதிவடிவான அமைப்புசார் அழகியலைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் தடம் புரண்டு விடுகிறார்கள். மார்க்சிய அழகியலை, அல்லது சரியாகச் சொன்னால், மார்க்சின் கருத்துகளில் ஒரு மார்க்சிய அழகியலுக்குத் தோற்றுவாயாக அல்லது அடித்தளமாகப் பயன்படக் கூடியவற்றை *1844ஆம் ஆண்டுப் பொருளியல் மெய்யியல் சுவடிகள்* என்பதிலிருந்து அல்லது 1857-1858இல் அவர் எழுதிய *அரசியற்பொருளியல் குற்றாய்வுக்கு ஒரு பங்களிப்பு* நூலிலிருந்து சேகரித்தாக வேண்டும்.

“முதலியப் பொருளாக்கம் குறிப்பிட்ட சில பொருளாக்கக் கிளைகளுக்கு, குறிப்பாகக் கலைக்கும் கவிதைக்கும் பகையாக உள்ளது” என்று மார்க்ஸ் கூறிய போது அவர் முதலியத்துக்கும் கலைக்கும் இடையே முரண்பாடு கண்டமைக்கு என்ன காரணம்? கலைக்கும் கலைத் துறைக்கும் உள்ள குறிப்பான தன்மையன்று, மனிதன் உருத்திட்டமான, புலனுணர்வு சார்ந்த இலக்குப்பொருளில் தன் அடிப்படைத் திறன்களைத் மெய்ப்படுத்திக் கொள்ளும் உயர்ந்த உழைப்பு வடிவமே காரணம். மனிதன் மாந்த உலகைப் படைக்கும் அளவுக்கு மாந்தனாகிறான்.

கலை என்பது மாந்தத் தன்மையை வளர்த்துக் கொள்ளும் இந்தச் செயல்வழியின் மீயுயர் வெளிப்பாடுகளில் ஒன்று. உயர்ந்த உழைப்பு வடிவம் என்ற முறையில் கலை என்பது சாதாரண உழைப்பிலேயே இடம்பெற்றுள்ள வெளிப்படலுக்கும் பொருள்மயப்படலுக்குமான திறனை வியத்தகு உயர் தளத்துக்கு உயர்த்துகிறது என்பதையும் நாமறிவோம்.

கலைக்கும் முதலியத்துக்குமான முரண்பாடு பொருளியலுக்கும் மனிதனுக்கும் இடையிலான எதிர்நிலையை அதன் ஏரண முடிவுக்கு எடுத்துச் செல்கிறது; இது முதலியப் பொருளாக்கத்துக்கே உரித்தான எதிர்நிலையாகும்) பொருளாக்கத்துக்காகவே பொருளாக்கம், மனிதனுக்காகப் பொருளாக்கம் அன்று). முதலியப் பொருளியலும் அதன் இருத்தலை நியாயப்படுத்தும் பொருளியல் கோட்பாடுகளும்... இலக்குப்பொருள் என்ற முறையில் மட்டும் மனிதனில் அக்கறை கொண்டுள்ளன, வணிகச் சரக்குகள் என்ற முறையில் மட்டும் உழைப்பின் ஆக்கப் பொருட்களில் அக்கறை கொண்டுள்ளனவே தவிர, மாந்தப் பிராணிகளின் பொருள்வடிவாக்கங்கள் என்ற அவற்றின் பணியில் அக்கறை கொள்வதில்லை.

இந்த முரண்பாடு முதலியத்துக்கும் ஆதிக்கக் கருத்தியலுக்கு அறைகூவல் விடும் கலைக்குமான முரண்பாடு அன்று, இது முதலியத்துக்கும் கலை என்ற கலைக்குமான முரண்பாடு. முதலாளர் வர்க்கம் ஏறுமுகமாய் இருந்த காலத்தில் சமூக வழியிலும் வரலாற்று வழியிலும் புரட்சிகர ஆற்றலாக இருந்த போது இந்த முரண்பாடு எழவில்லை. முதலியப் பொருளாக்கத்தின் ஆதிக்கத்தில், வாழ்க்கை ஆள்சாராததும் சரக்குமயமானதும் ஆகும் போது .அது வளர்கிறது. அப்போதுதான் கலைஞர்கள் முதலிய உறவுகளின் உண்மைத் தன்மையை இன்னும் உணராத நிலையில் அவற்றோடு இனியும் தம்மை இனங்கண்டு கொள்ளது போகிறார்கள். இந்தக் கலகம் மீப்புனைவியத்தோடு தொடங்கி, இன்று வரை ஏதோ ஒரு வடிவில் தொடர்ந்து வருகிறது. கலைஞர் இருமுனைப் போராட்டம் நடத்தியாக வேண்டும்; ஒரு புறம் அவர் மனிதத்தன்மையற்ற மெய்ந்நடப்பைப் போற்ற மறுக்கிறார், இந்த மறுப்பை வெளிப்படுத்தக் கலை வடிவங்கள் தேடுகிறார். மறுபுறம், படைக்கச் சொல்லும் அகத் தேவைக்கு விடையிறுக்கும் தனது பணியை நிறுத்திக் கொண்டு, அதற்குப் பதிலாகச் சந்தைக் கடையின் விதிகளால் சுமத்தப்படும் புறத் தேவையை நிறைவு செய்ய மறுக்கிறார். முதலியத்துக்கும் படைப்புக்குமான முரண்பாட்டின் பொறிமுறையை மார்க்ஸ் வெளிப்படுத்தினார். இந்தப் பொறிமுறையைக் கண்டுபிடிக்காமல் அல்லது புரிந்து கொள்ளாமல் கலைஞர்கள் புதுமைக் காலத்தில் கடினமான போராட்டம்

நடத்தினார்கள். இந்தப் போராட்டத்திலும் வீரர்கள் வெளிப்பட்டார்கள்: வான் கோ, மொடிக்லியானி போன்றவர்கள். முதலியப் பொருளாக்கத்தின் விதிகளால் ஆளப்படும் உலகில் படைக்க வேண்டுமென்ற தங்கள் அகத் தேவையை நிறைவு செய்து கொள்வதில் விடாமுயற்சி செய்த இந்தக் கலைஞர்கள் தமது குலைக்கவொண்ணா ஆர்வத்தால் வீரர்கள் ஆனார்கள்.

வேலை செய்வதற்கான அடிப்படை என்பது மனிதனின் படைப்புத் தன்மையில், தன் சாரத்தைத் உருத்திட்டமான-புலனாசைக்குரிய பொருள்வடிவில் மெய்ப்படச் செய்யும் அவனுடைய தேவையிலும் திறனிலும் தங்கியிருப்பதாக *பொருளியல் மெய்யியல் சுவடிகளில்* மார்க்ஸ் சுட்டிக்காட்டினார். உழைப்பு விடுபட்டதாக இருக்குமளவுக்கு அது கலையின் சாயலுக்கு நெருக்கமாக உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். முதலியச் சமூகத்தில் கலையை உழைப்புக்குத் தன்வயமாக்கும் போக்கு காணப்படுகிறது. ஆனால் இந்த உழைப்புக்குப் படைப்பாற்றல் என்று பொருளில்லை.

எவ்வாறாயினும், கலைக்கும் உழைப்புக்குமான ஒப்புமை ஒன்றையொன்று இனங்காட்டுவதைக் குறிக்காது. தடையற்றதாக இருக்கும் போதே கூட உழைப்பு என்பது பயன்-மதிப்பாக வெளிப்படும் உறுதிப்பட்ட பொருள்வகை மாந்தத் தேவைகளை நிறைவு செய்கிறது. கலை என்பதோ வெளிப்படல், உறுதிப்படல் எனும் பொதுவான மாந்தத் தேவையை நிறைவு செய்கிறது.

முதலியம் கலையைக் கூலியுழைப்பாகக் கருதி நடத்த முயல்கிறது; மனிதனின் சாரத் திறன்களை வெளிபாடச் செய்வதும் பொருள்வடிவாக்குவதுமான அதன் பங்குப்பணியைக் கண்டுகொள்ளாது விடுகிறது. மாந்த உழைப்பில் இத்திறன்கள் இலக்குப் பொருட்களில் பருமை பெற்று, அப்பொருட்கள் குறிப்பான மாந்தத் தேவைகளை நிறைவு செய்கின்றன. ஆகவே மாந்தக் பொருண்மை உடையனவாகின்றன. உருத்திட்டமான மாந்தப் பிறவிகளுக்கும் உருத்திட்டமான தேவைகளுக்கும் இடையே, தொழிலாளியின் தனித்துவத்துக்கும் இலக்குப் பொருளின் மாந்தப் பொருண்மைக்கும் இடையே ஓர் உறவுமுறையைத் தன்னகத்தே கொண்ட இவ்வுழைப்பு உருத்திட்டமானது, உயிரானது, பண்புவழிப்பட்டது. ஆனால் ஆக்கப் பொருளோ வணிகப் பண்டத்தின் வடிவில் வேறு பயன்-மதிப்புகள் கொண்ட பிற ஆக்கப் பொருட்களோடு உறவு கொள்ள வேண்டியுள்ளது. இந்த ஆக்கப் பொருட்களை ஒப்புநோக்க வேண்டுமானால், அவற்றின்

மதிப்பை உறுதி செய்யும் மனிதத் தேவைகளைக் கண்டுகொள்ளாமல், அவற்றிடையே ஓர் அளவுவழி உறவை, அல்லது மாற்று-மதிப்பை நிறுவ வேண்டும். ஆனால் உயிருள்ள, உருத்திட்ட உழைப்பை அடியோடு அசட்டை செய்து விடுவதன் வாயிலாக மட்டுமே இதனைச் செய்து முடிக்க இயலும். அதாவது இந்த உருத்திட்ட உழைப்பை நிகர்ப்படுத்தப்பட்ட, வேறுபடுத்தப்படாத, அல்லது உருவிலி உழைப்பின் துணுக்குகளில் ஒன்றாக்க வேண்டும்.

கலையுழைப்பு என்பது உருத்திட்ட உழைப்பாகும். அந்த வகையில் பயன்-மதிப்புகளை ஆக்குவதாகும். உருத்திட்டமான-புலனாசைக்குரிய இலக்குப் பொருட்களில் கச்சாப் பொருட்களுக்கு வடிவம் கொடுத்து (வெளிப்படல், உறுதிப்படல், தொடர்பாடல் ஆகிய) மாந்தத் தேவைகளை அது நிறைவு செய்கிறது.

கலை என்பது உருத்திட்ட உழைப்பாக இருத்தலால், மாந்தத் தேவைகளின், அதாவது உள்ளடக்கம்-வடிவத்தின் தனியியல்புகளுக்குக் கீழ்ப்படியும் ஒரு குறிப்பான தன்மை அதற்குள்ளது. இதன் விளைவான கலைப் படைப்பு தனக்கேயுரிய ஒப்பிலாத் தனித்தன்மையுடன் திகழ்கிறது.

ஒவ்வொரு கலைப்படைப்பும் தனித்துவமானது, மாற்றீடு செய்யவொண்ணாதது. உருவ உழைப்பு அனைத்திலும் போலவே கலையுழைப்பிலும் பண்பே முகாமையானது. கலையை மதிப்பிடும் போது, குறிப்பான படைப்புகளின் பண்பு அல்லது குறிப்பான சிறப்பியல்புகளைக் கண்டு கொள்ளாமலிருக்க முடியாது. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கலைப் படைப்புகளை, ஏதோ அவை பொதுவான, வேறுபடுத்தப்படாத, உருவிலியான உழைப்பின் துணுக்குகளே என்பது போல், ஒப்புநோக்க முடியாது. ஏனெனில் அப்படிச் செய்வது படைப்புச் செயற்பாடு, அதன் ஆக்கப்பொருட்கள் ஆகியவற்றின் தனித்தன்மையையும் தனித்துவத்தையும் அசட்டை செய்யும் நிலைக்கு நம்மைத் தள்ளி விடும். மேலும், ஒரு பண்டத்தின் ஆக்கத்தில் ஈடுபடுத்தப்படும் சமூக வழியில் தேவையான உழைப்பு-மணிகளின் தொகை என்பது போன்ற பொதுவான மதிப்பளவையைப் பயன்படுத்த முடியாது. ஏனெனில் அதே தேவையை நிறைவு செய்வதற்காக அதே பொதுவான பொருளாக்க நிலைமைகளில் ஆக்கம் செய்யப்படும் இன்னொரு பண்டமாக ஒரு புதிய பண்டத்தைப் படைக்க முடியும் போது மட்டுமே பொதுவான மதிப்பளவையைப் பயன்படுத்த முடியும்.

கலையின் ஆக்கப் பொருட்களை மதிப்பிடும் போது எண்ணளவு சார்ந்த அளவுகோல்

அல்லது அளவையை நாம் பயன்படுத்த முடியாதாகையால், கலைப்பணியை உருவிலிப் பணியாகச் சுருக்கி விட முடியாது; அதனை மறுவாக்கம் செய்ய முடியாது என்ற தன்மை இதைத் தடுத்து விடுகிறது. ஆகவே கலையுழைப்பைக் கூலியுழைப்பாக மாற்றுவது கலைப் படைப்பின் சாரத்துடனேயே முரண்படுவதாகும். ஏனென்றால் அதன் பண்புசார், ஒப்பிலாத் தனித்துவத் தன்மை அதனைப் பொதுவான உருவிலி உழைப்பின் துணுக்காகச் சுருக்குவதற்கு இடமளிப்பதில்லை. மேலும், கலைஞரானவர் படைப்பதற்கான தம் அகத் தேவையைப் புற அவசரங்களை மதித்துக் கட்டுப்பாட்டுக்கோ எல்லைக்கோ உட்படுத்திக் கொள்ளும் போது, வெளிப்படலுக்கும் தொடர்பாடலுக்குமான மாந்தத் தேவையை நிறைவு செய்யும் செயற்பாடென்ற முறையில் கலையின் படைப்புச் சாரம் எதிர்மறையாகப் பாதிப்புறுகிறது.

*கலை எனும் சாரமான மாந்த அக்கறை*

மார்க்சின் படைப்புகள் ஏறக்குறைய வெளிப்படையாக உருவரை செய்வனவும், மார்க்சிய அழகியலின் அடித்தளமாகப் பயன்படக் கூடியனவுமாகிய அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று: கலை என்பது மனிதனின் சாரமான ஒரு துறை.

*பொருளியல் மெய்யியல் சுவடிகளில்* மார்க்ஸ் கூறியது போல, மனிதன் இயற்கைக்கு மேல் உயர்ந்து *மாந்த* இயற்கைப் பிராணியாகக் கூடிய அளவுக்கு மாந்தனாகிறான் என்றால், கலை என்னும் செயற்பாட்டின் ஊடாகவே அவன் இந்தக் குறிப்பான திறனை உயர்த்தித் தான் தீண்டும் ஒவ்வொன்றையும் மாந்தத் தன்மை பெறச் செய்கிறான். அதாவது, உண்மையான மாந்தப் பிராணி என்ற முறையில் மனிதன் அனைத்துக்கும் மேலாகப் படைப்புத் திறனுள்ள பிராணி என்றால், கலை என்பது அவன் திரும்பத்திரும்பவும் எல்லையின்றியும் இந்தப் படைப்புத் திறனை மெய்ப்படச் செய்து கொள்ளும் துறைகளில் ஒன்று. கலையாக்கம் ஒரு படைப்பு என்பதால் எப்போதுமே தனித்துவமானது. கலை முயற்சிகள் எப்போதுமே ஒருவிதமான துணிகரச் செயல்கள் போன்றவை. கலை என்பது மெய்ந்நடப்பின் எதிரடிப்பு மட்டுமன்று, ஒரு புதிய மெய்ந்நடப்பின் படைப்புமாகும். கலையினால்தான் உழைப்பினால் படைக்கப்படும் மாந்த அல்லது மாந்தமயப் பொருட்களின் மெய்ந்நடப்பு ஓயாமல் விரிவுற்று செழுமைப்படுகிறது; அதே போது மெய்ந்நடப்புடன் நமது உறவும் செழுமையுற்று ஆழப்படுகிறது.

எனவேதான் பார்த்தொழுகும் கலை என்பதாக எதுவும் இருக்க முடியாது –– இந்தச் சொல்லால் மெய்ந்நடப்பின் படியெடுப்பு அல்லது மறுவாக்கத்தைக் குறிக்கிறோம் என்றால்.

உண்மைக் கலை ஒருபோதும் முன்கூட்டியே நிலவும் மெய்ந்நடப்பின் வெறும் எதிரடிப்பு அல்லது நிழலாக இருக்க முடியாது. கலைஞர் மெய்ந்நடப்பை எதிரிடுவது அதனைத் தனதாக்கி அதற்கு மாந்தப் பொருண்மை தருவதற்காகத்தானே தவிர, அதனைப் படியெடுப்பதற்காக அன்று. அது வடிவத்தைப் பயன்படுத்திக் கொள்வது மாற்று வடிவம் கொடுப்பதற்காக மட்டுமே என்பதால், மெய்ந்நடப்பைச் சுட்டுவது உண்மையான நடப்பியக் கலைஞருக்குத் தடையாக முடியாது. நான் சொல்ல வருவது: நடப்பியம் இந்தப் படைப்புத் திறன்சார் பொருளில் புரிந்து கொள்ளப்படாத வரை உருவிலிக் கலைக்கும் நடப்பியக் கலைக்கும் --இடையிலான வாக்குவாதம் பொய்யானதொரு முற்கோளை அடிப்படையாகக் கொண்டுள்ளது; அண்மைய ஆண்டுகளில் சில நேரம் நடப்பியம் என்று உலவி வருவதற்கு ஆதரவாக முடிவு சொல்ல முடியாது. ஆனால் உண்மையான அல்லது படைப்புத்திறனுள்ள நடப்பியமானது எவ்வித வடிவச் சார்பையும் அல்லது புறவய மெய்ந்நடப்புச் சுட்டுகளையும் தீவிரமாக அழித்து விடுகிற ஒரு கலை இருப்பதைக் கண்டு கொள்ளாமலிருக்க முடியாது. இந்தக் கலைக்கு மார்க்சிய விளக்கமும் மதிப்பீடும் தேவை. காட்டாக, பெர்னாண்டோ கிலாடின் அண்மையில் எழுதிய ஆய்வு நூல், "நம் காலத்திய ஓவியப் புரட்சி."

கலையின் படைப்புச் சாரம் தொடர்பான கொள்கை அறுதியானதன்று. சமூகக் கட்டுண்டமைக்கும் கலைப் படைப்புக்கும் இடையிலான இயங்கியல் ஊடாடலிலிருந்து அது விளைகிறது; நாம் இந்த உறவுமுறையைப் புரிந்து கொண்டால், கலையின் குறிப்பானதும் சார்புநிலைத் தன்னாட்சியுமான தன்மையைக் கண்டு கொள்ளாத சமூகவியல்வாதம், கலையை அறுதியாகவே கட்டுண்டிராத தன்னாட்சிச் செயற்பாடாகக் கருதும் அழகியல்வாதம் ஆகிய இரு ஆபத்தான கடைக்கோடிகளையும் தவிர்க்க இயலும்.

*மார்க்சிய அழகியல் என்னும் அறிவியல்*

மார்க்சிய அழகியலானது மெய்ந்நடப்போடு மனிதனின் அழகியல் உறவுமுறை மாந்த வாழ்வில் வகிக்கும் இடத்தையும், பகை வர்க்கங்களாகப் பிரிந்துள்ள சமூகத்தில் கருத்தியல் மேற்கட்டுமானத்தின் பகுதியாகக் கலை வகிக்கும் பங்கையும் பகுத்தாராய்வதிலிருந்து தொடங்குகிறது. அதே நேரத்தில் சமூகவியல்வாத அழகியல் கண்டுகொள்ளாத சில சிக்கல்களையும் அது அலசியாக வேண்டும்: ஒரு கலையாக்கத்தின் கட்டமைப்பு, அதன் பொதுத் தன்மைக்கும் குறிப்பான தன்மைக்குமான இயங்கியல், அதன் நீடித்து நிலைக்கும் திறன், கலைவழிப் பொருள்மயப்படல், வெளிப்படல், தொடர்பாடல் ஆகியவற்றின் குறிப்பான தன்மை,

கலைக்கும் மெய்ந்நடப்புக்குமான உறவு, கலைசார் மெய்ந்நடப்பின் தன்மை போன்ற சிக்கல்களைக் குறிப்பிடலாம். கலையின் சமூகக் கட்டுண்டமையை அறிந்தேற்பதன் அடிப்படையில் இந்தச் சிக்கல்களைத் தீர்க்க வேண்டும்; கலையாக்கம் என்பது ஒரு தனித்துவமான முழுமை; உருநீக்கங்கள் வாயிலாக மட்டுமே இந்த முழுமையை உள்ளடக்கம், வடிவம் என்று நாம் சொல்கிறவையாகப் பிரிக்க முடியும். ஆனால் கலை என்னும் செயலுக்கு விளக்கமளிக்கும் போது, அதனை அதன் சாரக் கூறுகளிலிருந்து உருநீக்கம் செய்வது தவிர வேறு வழியில்லை.

அழகியல் கோட்பாட்டின் பணியை கலைத் திறனாய்வின் பணியோடு இனங்காண முடியாது. திறனாய்வாளர் ஒரு குறிப்பிட்ட ஆக்கத்தை மதிப்பிடும் போது, தமது மதிப்பீட்டுக்குக் குறிப்பான அழகியல் கொள்கைகளை அடிப்படையாகக் கொள்ள முயல்கிறார். ஆனால் இப்படிச் செய்வதை அவர் எப்போதும் முழுமையாக உணராதிருக்கலாம். அழகியல் கோட்பாடு என்பது ஒரு தனித்துவமான கலையாக்கத்துக்குக் கணக்குச் சொல்வது தொடர்பானதன்று; அது நாம் கலையென்று அழைக்கும் குறிப்பான மாந்த நிகழ்வுக்கு விளக்கமளிப்பது தொடர்பானதே ஆகும். இந்நிகழ்வு ஒரு வரலாற்றுச் சூழலில் இடம்பெற்று, குறிப்பிட்ட படைப்புகளின் இருப்பறையில் உருத்திட்டமுடையதாகிறது.

அழகியல் கோட்பாடு என்பது கலையின் சாரம், அனைத்துக் கலையாக்கங்களின் கட்டமைப்பு, அதன் வகையினங்கள், ஏனைய மாந்தச் செயற்பாடுகள் தொடர்பில் அது வகிக்கும் இடம், அதன் சமூகப் பங்கு இன்னபிறவற்றை கருத்தாக்க வழி உள்வாங்க முயல்கிறது. ஆதித் தொடக்கங்களிலிருந்தே கலை வளர்ச்சியை ஒழுங்கியக்கும் விதிகளை அது கண்டறிய முயல்கிறது. ஆதிகாலக் கலையோ புதுமக்காலக் கலையோ, குறியீட்டுக் கலையோ நடப்பியக் கலையோ, மீப்புனைவுக் கலையோ உருவிலிக் கலையோ... எதுவானாலும் கலையனைத்தின் நியாயத்தைக் கண்டுபிடிக்க முயல்கிறது. ஆக, மார்க்சிய அழகியல் கோட்பாடு என்பது நடப்பியமாகத் தன்னைச் சுருக்கிக் கொள்ள முடியாது. அப்படிச் செய்தால் அது கலையின் வரலாற்று வளர்ச்சிக்கு முரணாகும். ஒரு குமுகியச் சமூகத்தில் கலை முன்னிறுத்தும் சிக்கல்களை ஆராய்வதோடு அது தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும் முடியாது. இது மாபெரும் முக்கியத்துவம் கொண்ட ஒரு சிக்கல் என்பது சரிதான், ஆனால் மார்க்சிய அழகியல் கோட்பாடு ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் கலை மீதே முழுமையாகக் கவனம் குவிக்க முடியாது.

அந்தக் கலையின் அழகியல் பணிகளும் சமூகப் பணிகளும் எவ்வளவுதான் உயர் வளர்ச்சி பெற்றிருந்தாலும் இப்படிச் செய்ய முடியாது. மார்க்சிய அழகியல் கலை வரலாறு முழுவதையும் ஒரு குறிப்பிட்ட கலை இயக்கத்தின் ஆளும் கொள்கைகள் மற்றும் கருத்தினங்களின் ஒளியில் கணிக்கவும் கூடாது.

மார்க்சிய அழகியல் கோட்பாடு என்பது ஓர் அறிவியலாக இருக்க வேண்டும்; அந்த முறையில் புறஞ்சார்ந்திருக்க வேண்டும், புறநோக்குவாதமாக இருக்கக் கூடாது. அதற்கு இயங்கியல், வரலாற்றுப் பருமைக் கொள்கை என்னும் மெய்யியல் அடிப்படை உள்ளது. அது கலைச் செயற்பாட்டை, மாந்த வாழ்வின் சாரமானதொரு துறை என்ற அளவில், படைப்புத்திறனுள்ள, வரலாற்று, சமூகப் பிறவியாக மனிதனைப் பார்க்கும் கண்ணோட்டத்துக்குப் புறம்பான ஒன்றாகக் கருத முடியாது. மார்க்சிய முழுமை போலவே மார்க்சிய அழகியல் கோட்பாடும் வரலாற்றுக்கோ நடைமுறை வாழ்க்கைக்கோ பட்டறிவுக்கோ முரணான ஆய்வுரைகளை வகுக்குமானால் தன் அறிவியல் தன்மையை இழந்து விடும்.

கலையின் குறிப்பான தன்மையைக் கரைத்து விடும் அகநோக்குவாதம் அல்லது வெற்றுப் பொதுமைப்படுத்தல்களை நாம் தவிர்க்க வேண்டும். காட்டாக, சமயம் பற்றிய நம் கருத்துருவாக்கத்தின் பொருள் நடுமக்காலக் கலைக்கு சமயத்தின் முகாமைத்துவத்தை நாம் கண்டுகொள்ளக் கூடாது என்பதில்லை. அறிதல் எனும் செயல்வழிக்குரிய எழுவாய் – செயப்படு பொருள் உறவுமுறையை கலைஞருக்கும் மெய்ந்நடப்புக்குமான உறவுமுறையுடன் எந்திரத்தனமாக நிகர்ப்படுத்தி விடக் கூடாது. முதலியச் சமூக உறவுகள் பற்றிய குற்றாய்வு அவ்வுறவுகளின் சட்டகத்திற்குள் படைக்கப்பட்டுள்ள உயர்பெரும் கலையை, அதாவது எந்த வர்க்க நலன்களுக்கு அது மறுமொழியாயிற்றோ அந்த நலன்களைக் கடந்து நிற்கும் கலையை மறுதலிக்கும் நிலைக்கு நம்மை இட்டுச்சென்று விடக் கூடாது.

*கலையியல் விதிமுறைவாதமும் கல்விமுறைவாதமும்*

மார்க்சிய அழகியல் கோட்பாடு என்ன இருகிறது என்பதற்கு விளக்கமளிக்க முயல்கிறதே தவிர, என்ன இருக்க வேண்டும் என்பதற்கன்று. அது படைப்பின் நெறிமுறைகள் அல்லது விதிமுறைகளின் உருவரை அன்று: ஆகவே அதற்கு விதிமுறைவாதம் ஒத்துவராது.

விதிமுறைவாதம் என்பது அகநிலைவாதத்தின் வெளிப்பாடு ஆகும். மெய்ந்நடப்பின்

வளர்ச்சிப்போக்கை -- வாழ்க்கையின் வளர்ச்சியையே — கெட்டியாக இறுகச் செய்வதில் அல்லது நெகிழ்வற்றதாக்குவதில் போய் முடியும் அகநிலைவாதத்தின் வெளிப்பாடும், அதேபோது கோட்பாட்டுக்கும் நடைமுறைக்குமான உறவுமுறை பற்றிய பொய்மைக் கருத்தாக்கத்தின் வெளிப்பாடும் ஆகும். ஏனென்றால் அது எப்போதுமே மெய்ந்நடப்போடு தொடர்பறுந்த நிலையைக் குறிக்கிறது, கலைஞர் தமக்கென வகுத்துக் கொள்ளும் மெய்யல்லாப் பாதைக்கும் கலைப் படைப்பு மறுவினையாற்ற வேண்டிய வாழ்க்கையின் மெய்ந்நடப்புக்கும் தீர்க்கவொண்ணா முரண்பாட்டைக் குறிக்கிறது. அது கோட்பாட்டுக்கும் நடைமுறைக்குமான மணமுறிவின் வெளிப்பாடு ஆகும்.

விதிமுறைவாதம் என்பது மனிதனின் சமூக வாழ்வில் ஓர் அடிப்படை மாற்றம் ஏற்பட்ட பிறகு, மெய்யான, உருத்திட்டமான மாந்தப் பிறவிகள் ஒரு புதிய கலைக்கான தேவையைப் பட்டுணரும் நேரத்தில் கலை இயக்கக் கொள்கைகளின் செல்லுபடித்தன்மையை நீட்டிப்பதற்கான முயற்சியிலும் வேர் கொண்டிருக்கக் கூடும். இவ்வாறான நேரங்களில் கலைஞர்கள் அந்தத் தேவையைப் பிரதிபலிக்க முயல்கிறார்கள். ஆனால் விதிமுறைவாதம் அவர்களை வழிமறிக்கிறது.

அந்த நேரம் வரை கலைஞருக்கு அவரது படைப்புப் பணியில் துணை செய்த கொள்கைகள் இப்போது விதிமுறைகள் அல்லது கட்டளைகள் ஆகி விடுகின்றன; ஆனால் கலைஞர் வெளிப்படலுக்கும் தொடர்பாடலுக்குமான தேவைக்கு மறுவினையாகத்தான் — தடையின்றி விடுபட்ட நிலையில் -- படைக்க முடியுமே தவிர, வழங்கல்-வேண்டல் விதியால் திணிக்கப்படும் புறக் கோரிக்கையால் அன்று. இது கலையின் பால் முதலியத்துக்குள்ள பகைமை குறித்துப் பேசுகையில் மார்க்ஸ் சுட்டிக் காட்டியதற்கு ஒப்பான ஒரு நிலைமையில் போய் முடிகிறது; அதாவது மேலிருந்து திணிக்கப்படும் கொள்கைகள், நெறிமுறைகள், அல்லது விதிகளுக்கிணங்கப் புறத் தேவைக்கு மறுவினையாக ஒரு கலைஞர் படைக்கிறார், இவ்விதம் கலையாக்கத்தைப் பொருளாக்கத்தின் விதிகளுக்கு உட்படுத்தி விடுகிறார்.

கலைஞர் ஒருவர் மேலிருந்து திணிக்கப்படும் கொள்கைகள், நெறிமுறைகள் அல்லது விதிகளுக்கிணங்க புறத் தேவையின் காரணத்தால் படைப்பாராயின், இயக்கமாகவும், உயிராற்றலாகவும், குறிப்பிட்ட சில படைப்புக் கொள்கைகள்பால் உணர்வும் உண்மையுமான உயர்மதிப்பாகவும் இருந்த ஒன்று வடிவ அளவிலும் புறத்தேயுமான, எனவே பொய்யான விசுவாசமாகிறது. உயிரோட்டமாய் இருந்த ஒன்று இறுகிப்போன நிலைமமாகி விடுகிறது. இந்த நிலைம நிலைதான் அல்ல கல்விமுறைவாத வடிவங்களிலும் ஆபத்தான நோய்க்கிருமியைப் போல் இருந்து வருகிறது.

கல்விமுறைவாதம் என்று நான் சொல்லும் போது, கல்விசார் உலகினால் வரலாற்றுவழியில் திணிக்கப்பட்ட கருத்துக்களின் அமைவை மட்டுமல்ல, ஒழுகல்வாதமாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் கல்விமுறைவாதத்தையும் சேர்த்தே சொல்கிறேன். கலை என்பது மீப்புனைவியக் காலம் தொட்டே கல்விமுறைவாதத்தின் அனைத்து வடிவங்களுக்கும் எதிரான கடும் போராக இருந்துள்ளது. இந்த ஒழுகாமைக் கொள்கை தெளிவாகவே நற்பயன் மிக்கதாக இருந்துள்ளது; ஆனால் விளைவளவில் பாரம்பரியத்தின் எடையை -- பழையதற்கும் பழக்க வழக்கத்திற்குமுரிய ஈர்ப்பு விசையை — குறிப்பதாகிய கல்விமுறைவாதப் போக்கு பலநேரம் சற்றும் ஐயத்திற்கிடமளிக்காத வடிவங்களில் தோன்றுகிறது. ஒழுக மறுப்பது எப்போதும் கல்விமுறைவாதத்திலிருந்து தப்பித்துக் கொள்ளும் உறுதியான வழியாவதில்லை. மறுப்பே தன்னளவில் ஒரு நோக்கமாகி ஒழுகாமை ஒரே விழுமியம் ஆகும் போது, ஒழுகாமையின் ஒழுகல்வாதம் எனப்படுவது, அதாவது நுட்பமானதொரு புதிய வடிவிலான கல்விமுறைவாதம் தலையெடுக்கக் காண்கிறோம்.

*விதிமுறைவாதத்தின் வேர்கள்*

மார்க்சிய அழகியலின் பெயரால் விதிமுறைவாதத்தில் விழுவது — விளக்கத்துக்குப் பதிலாக விதிமுறை வரிசையையும் கொள்கைக்குப் பதிலாக விதிமுறையையும் வைப்பது — வேறெந்தத் துறையிலும் போலவே கலையிலும் — கோட்பாட்டுக்கும் நடைமுறைக்குமான உறவு புரட்டிப்போடப்படும் போது — நேரிடுகிறது. இவ்விதம் புரட்டிப்போடப்படுதலுக்கு இரு தோற்றுவாய்கள் இருக்கக் கூடும்.

ஒரு தோற்றுவாய் — இதை நாம் அகத் தோற்றுவாய் எனலாம் —கோட்பாட்டின் தன்மையுடனேயே, அதாவது மெய்ந்நடப்பின் உருநீக்கமாக இருக்கும் தன்மையுடனேயே தொடர்புடையது. கலையியல் மெய்ந்நடப்பை எடுத்துக் கொண்டாலும் சரி, வேறு எவ்வகை மெய்ந்நடப்பை எடுத்துக் கொண்டாலும் சரி, சிக்கலான, செழுமையான முழுமொத்தத்தை குறைப்பதன் அல்லது எளிமைப்படுத்துவதன் வாயிலாகத்தான் உருத்திட்ட மெய்ந்நடப்பை நாம் உள்வாங்க முடியும். உருத்திட்ட மெய்ந்நடப்பு என்பதை ஓர் இலக்குப் பொருளினது தீர்வுக்கூறுகளின் ஒருமை என்று மார்க்ஸ் கருதினார்; ஆனால் உருத்திட்டமானதன் கருத்துருவாக்கம் எவ்வளவு செழுமையாக இருந்தாலும், மெய்ந்நடப்பின் தீர்வுக்கூறுகளின் முழுச் செழுமையையும் உள்வாங்குவதில் அது வெற்றி பெறுவதில்லை. இந்தத் தீர்வுக்கூறுகளில் சிலவற்றை ஒழித்து விட்டுக் கூடுதல் சாரமுள்ள மற்றவற்றை வைத்துக் கொள்ள வேண்டும்.

இவ்விதம் ஆழங்குறைந்த சாரத்திலிருந்து ஆழங்கூடிய சாரத்துக்கு நகர வேண்டும். இதன் விளைவாகப் பெறப்படும் கருத்தாக்கம் இலக்குப் பொருளின் ஆழத்தையும் செழுமையையுமே மென்மேலும் அதிகச் செழுமையோடும் ஆழத்தோடும் பிரதிபலிக்கிறது. ஆகவே அறிவு என்னும் செயல்வழி ஓர் உருநீக்கத்திலிருந்து இன்னோர் உருநீக்கத்துக்கு முடிவின்றி மேல்நோக்கி முன்னேறிச் செல்கிறது. ஆனால் மெய்ந்நடப்பே மாற்றச் செயல்வழியில் இருப்பதால் கோட்பாடும் மாறியாக வேண்டும். மாறுவதன் மூலமே, வளர்வதன் மூலமே, அது உருத்திட்ட மெய்ந்நடப்பைக் கூடுதல் விசுவாசத்துடன் உள்வாங்க முடியும்.

ஒரு கோட்பாடு மாறுவதை நிறுத்திக் கொண்டவுடனே, அல்லது ஒரு குறிப்பிட்ட உருநீக்கம் திட்டவட்டமானதாக மதிக்கப்பட்டவுடனே, அல்லது எல்லைக்குட்பட்ட ஒருசில தீர்வுக் காரணிகள் மட்டும் மெய்ந்நடப்பை வெளிப்படுத்தப் போதும் என்று கருதப்பட்டவுடனே, அப்போதே அக்கோட்பாடு மதிப்பிழந்து விடுகிறது; இதையும் மீறி, நாம் அந்தக் கோட்பாட்டை செயலுக்கு அல்லது நடைமுறைக்கு — கலையியல் நடைமுறை உட்பட — வழிகாட்டியாகக் கொண்டு ஒரு மதிப்பைச் சுமத்துவோமானால், மெய்ந்நடப்பின் இயக்கத்திலிருந்து அதன் சாரமான தீர்வுக் கூறுகளின் வெளிப்பாடாக ஊற்றெடுப்பதும், ஆகவே நடைமுறைக்கு வழிகாட்டத் துணை செய்யக் கூடியதுமான கோட்பாட்டையும், விதிமுறைக் கொள்கை அல்லது படைப்பூக்கத்திற்கு வழியடைப்பு என்பதற்கு மேல் எதுவுமல்லாத கோட்பாட்டையும் நாம் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும்.

கோட்பாட்டுக்கும் நடைமுறைக்கும் இடையிலான புரட்டிப்போடலின் மற்றொரு தோற்றுவாய் சமூகமாகும்; சில நேரம் காலாவதியான ஒரு கோட்பாட்டை அது நகர்ந்து சென்று புதியதற்கு இடம் விடாமல் வைத்துக் கொள்வதற்கு சமூகக் குழுக்கள் அல்லது வர்க்கங்களின் உருத்திட்ட மாந்த நலன்கள் காரணமாகின்றன. இப்படித்தான் பதினெட்டாம் நூற்றாண்டில் தொல்சீர் அழகியல் கல்விமுறைவாதமாகச் சீரழிந்தது; அப்போது, தொல்சீர்மையின் அழகியல் கொள்கைகள் மெய்ந்நடப்போடு தொடர்பிழந்த பிறகும், அரசியல் முற்றதிகாரத்தை வணங்கிய ஆதிக்க சமூக வர்க்கங்களுக்கு ஏற்புடைய ஒரு கலைக்கு வளமூட்டுவதற்காக நிலைத்துநிற்கச் செய்யப்பட்டன. கோட்பாடு உயிரற்றுப் போய், விதிகளும் குறித்துரைகளுமான தொகுப்பாகி விட்டது.

இப்படிப்பட்ட கலையியல் விதிமுறைவாதத்தைத் தோற்றுவிக்கும் படியான புறவய நிலைமைகள் ஏதும் குமுகியச் சமூகத்தில் நிலவுவதில்லை; அதற்கு அடிப்படையாகப் பயன்படும்

படியான குறிப்பான வர்க்க நலன்கள் ஏதும் இருப்பதில்லை. ஆயினும், குமுகிய நாடுகளில் அதிகார வர்க்கமும் வறட்டுச் சூத்திரவாதமும் கலையியல் விதிமுறைவாதம் தலையெடுக்க இடமளிக்கும் நிலைமைகளைத் தோற்றுவிக்கலாம் (தனிமனித வழிபாட்டுக் காலத்தில் தோற்றுவிக்கவும் செய்தன). இந்த விதிமுறைவாதம் நிர்வாக முறைகளையும் வலுவந்த முறைகளையும் கலைத் துறைக்குப் பயன்படுத்துவதில் வெளிப்படுகிறது.

ஒவ்வொரு கோட்பாட்டுக்கும் அச்சுறுத்தலாக அமையும் இந்த இருதலைக் கொள்ளி எறும்பு நிலையை மார்க்சிய அழகியல் கோட்பாடு தவிர்க்க வேண்டும். கடந்த காலத்தைக் கொண்டாடும் கலை அனுபவத்தோடும் புதுமக்கால கலையியல் நடைமுறையோடும் அது உயிர்த் தொடர்பு கொண்டிருக்க வேண்டும்.

விதிமுறைவாதப் பள்ளம் தவிர்த்து, மெய்யான மார்க்சிய அழகியலுக்கு வழிவகுப்பது எளிதன்று. ஆனால் மார்க்சிய மெய்யியலரின் இணைந்த முயற்சியும், கலைஞர்களும் எழுத்தாளர்களும் தமது படைப்புழைப்பு முன்னிறுத்தும் முகாமைச் சிக்கல்களை உணர்ந்து வழங்கும் பயன்மிகு ஆதரவும் கொண்டு இதைச் செய்ய முடியும்.

*குறிப்புகள்*

1.*Cuba Socialista* ,No. 30, 1964 பிப்ரவரி.

.

தோழர் தியாகுவின் அறிவுக்குரல் கேட்க
கீழுள்ள இணைப்பை சொடுக்கவும்

https:www.youtube.com/user/ajanthavalga?fbclid=IwAR0APppP9wjVctyVG1DShVLvQWRKtHOTuuR4g7zwwBeqLE-6zcuyiKZjxoQ

சமந்தா

## நக்வெய்ன் மார்க்சியப் பள்ளியில் (13)

### ஆசிரியர்: சுராஜித் மஸூம்தார்

[சுராஜித் மஸூம்தார் அவர்கள் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். அரசியல் பொருளாதாரம், இந்தியத் தொழில்மயமாக்கம், இந்திய கார்ப்பரேட் துறை, உலகமயமாக்கம் ஆகியவை இவரது ஆய்வுப் புலங்கள் ஆகும்.]

**தலைப்பு:**

## மூலதனம் குறித்த மார்க்சிய பகுப்பாய்வு

முதலாளித்துவத்திற்கு முன்பிலிருந்தே மூலதனம் இருந்து வருகிறது. வரலாற்று அடிப்படையில் வணிக மூலதனமும், வட்டி மூலதனமும் தொழில்துறை மூலதனத்துக்கு




முந்தையவை. மூலதனம் என்பது சமூக உறவாகவும் தன்னைத் தானே பெருக்கிக் கொள்ளும் மதிப்பாகவும் உள்ளது.

வர்த்தக மூலதனச் செயல்பாட்டின் சுற்றை ப-ச-ப' என்று குறிப்பிடலாம். ஒரே சரக்கை அதன் மதிப்பை விடக் குறைவாக விற்பதிலிருந்து தொடங்கும் இச்சுற்று அதன் மதிப்பைவிட அதிகமாக விற்பதில் முடிவடைகிறது.

எளிய சரக்குற்பத்தி என்பது முதலாளித்துவச் சரக்குற்பத்தியிலிருந்து வேறுபடுகிறது. எளிய சரக்குற்பத்தியானது நுகர்வையே முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது. முதலாளித்துவச் சரக்குற்பத்தியானது மதிப்பைப் பெருக்கி இலாபம் பெறுவதற்காகவே செய்யப்படுகிறது. முதலாளித்துவ உற்பத்தி முறையில் தொழில்துறை மூலதனம் முக்கியப் பங்கு வகிக்கிறது. தனிச் சொத்துடைமை, மூலதனம், சரக்குற்பத்தி இவை அனைத்துமே முதலாளித்துவத்திற்கு அடிப்படையாக அமைகின்றன. சொத்துடையோர் ஒரு புறமாகவும், உடைமையற்றோர் / உடைமை பறிக்கப்பட்டோர் மறு புறமாகவும் சமூகம் பிரிக்கப்பட்டு சொத்துடைமையின் மீது வர்க்க முற்றுரிமை உருவாக்கப்படுகிறது. முதலாளித்துவ உற்பத்திக்கு முதலாளியின் மூலதனம் தேவைப்படுகிறது. உழைப்புச் சக்தி சரக்காக்கப்படுகிறது. முதலாளித்துவச் சரக்குற்பத்திச் செயல்முறையானது வர்க்கங்களைத் தெளிவாகப் பிரிவினையடையச் செய்கிறது. முதலாளி மூலதனத்தின் முகவராகிறார். முதலாளி என்ன செய்ய வேண்டும் என்பதை மூலதனமே முடிவு செய்கிறது.

முதலாளித்துவ மூலதனத்தின் சுற்றை ப-ப' எனக் கொள்வோமானால் ப- அளவுள்ள பணம் இச்சுற்றின் மூலம் ப' அளவிற்கு அதிகரிக்கிறது. இதை விரிவாக ப-ச-ச'-ப' எனக் குறிப்பிடலாம். உற்பத்தியின் இயங்குமுறையின் விளைவாக மதிப்பு பெருக்கம் அடைகிறது.

சரக்குகளின் வர்த்தகம் சுற்றோட்டத் துறையைச் சார்ந்தது. ஆகவே உபரிமதிப்பானது வர்த்தகத்தின் மூலம் சுற்றோட்டத்திலிருந்து பெறப்படுவது போன்ற தோற்றம் ஏற்படுகிறது. ஒரு வணிக முதலாளி 120 ரூபாய் மதிப்புடைய பொருளை 115 ரூபாய்க்கு வாங்கி 120 ரூபாய்க்கு விற்றால் அவருக்கு 5 ரூபாய் இலாபம். ஆனால் சரக்குகள் அதன் உற்பத்தி மதிப்பில் விற்பனை செய்யப்பட்டால் வணிக மூலதனத்தால் உபரிமதிப்பைப் பெற முடியாது. வணிகருடைய செயல்பாடு எந்த உபரிமதிப்பையும் உருவாக்குவதில்லை.

உபரிமதிப்பானது உண்மையில் உற்பத்திச் செயல்முறையின் போதுதான் பெறப்படுகிறது. சுற்றோட்டத்தின் போது உபரிமதிப்பு உருவாக்கப்படுவதில்லை, உபரிமதிப்பு ஈடேற்றம் மட்டுமே பெறுகிறது. அதாவது சரக்கு வடிவில் இருந்த மதிப்பானது பண வடிவத்தில் ஈடேற்றம் பெறுகிறது. தொழில்துறை மூலதனம் மட்டுமே புதிய மதிப்பை உருவாக்கும் உற்பத்திச்

செயல்முறையில் நேரடியாக ஈடுபடுகிறது. வணிக மூலதனம் என்பது சரக்குகளின் சுற்றோட்டத்தில் பயன்படுத்தப்படும் மூலதனம். உற்பத்திச் செயல்பாட்டில் வணிக மூலதனம் எந்த நேரடியான பங்கையும் வகிக்காது. வர்த்தகத் துறையில் உபரிமதிப்பு எதுவும் உருவாக்கப்படுவதில்லை.

அப்படியானால், வணிகரின் இலாபம் எங்கிருந்து வருகிறது? தொழில்துறை முதலாளியே தனது சரக்குகளை ஈடேற்றம் பெறச் செய்ய வேண்டுமானால், அவர் தனது மூலதனத்தின் ஒரு பகுதியை வர்த்தகச் செயல்பாடுகளுக்குச் செலவிட வேண்டியிருக்கும். இதைச் செய்ய அவர் மூலதனத்தின் அளவை மேலும் அதிகரிக்க வேண்டும், அல்லது அதே அளவு மூலதனத்துடன் செயல்பட உற்பத்தியின் அளவைக் குறைக்க வேண்டும். இரண்டுமே அவரது இலாபத்தைக் குறைக்கும், நேரமும் விரயமாகும். அதற்கு பதில் தொழில்துறை முதலாளி, வர்த்தகத்தை மட்டுமே பிரத்யேகத் தொழிலாகக் கொண்ட வணிக முதலாளியிடம் சரக்குகளை விற்றுப் பணமாக ஈடேற்றம் செய்யும் பணியை ஒப்படைக்கிறார்.

இலாபம் என்பதே வர்த்தகத்தில் சரக்குகளின் விலையைக் கூட்டி அதிக விலைக்கு விற்பதன் மூலம் பெறப்படுவது போன்ற ஒரு தவறான தோற்றம் உருவாகிறது. இதற்கு நேர்மாறாக முதலாளி சரக்குகளை உற்பத்தி விலையை விட குறைந்த விலையில் விற்பதன் மூலம் தனது இலாபத்தின் ஒரு பகுதியை வணிகருக்கு அளிக்கிறார். வணிக மூலதனம் தொழில்துறை மூலதனத்தின் சுற்றோட்டத்திற்கு உதவுகிறது. முதலாளிகள் பெற்ற ஊதியமற்ற உபரிமதிப்பின் ஒரு பகுதி வணிக இலாபமாகிறது.

இவ்வாறு உற்பத்தியும், விற்பனையும் (சுற்றோட்டமும்) தனித் துறைகளாகப் பிரிகின்றன. சரக்குகளின் சுற்றோட்டச் செயல்பாட்டில் வணிக மூலதனம் அதன் தனித்திறனால் சுற்றோட்டத்திற்கு ஆகும் நேரத்தையும் செலவையும் குறைக்க உதவுகிறது. வணிக மூலதனம், பல தொழில்துறை முதலாளிகளின் சரக்குகளை ஈடேற்றம் செய்வதற்கு உதவுவதால், இதன் மூலம் உற்பத்தியில் இருந்து சுற்றோட்டத்திற்குத் திருப்பப்படும் சமூக மூலதனத்தின் ஒரு பகுதியைக் குறைக்க உதவுகிறது. தொழில்துறை முதலாளியின் மூலதனம் புரள்வதற்கு ஆகும் நேரமும் குறைவதால் அவரது இலாபத்தை அதிகரிக்கவும் வழிவகுக்கிறது. இதுவே

தொழில்துறை முதலாளி பெற்ற உபரி மதிப்பின் ஒரு பகுதியானது வணிகருக்கு செல்ல காரணமாகிறது. இது வணிக முதலாளியின் இலாபத்தை உருவாக்குகிறது. வணிகர்களின் இலாபம் என்பது உபரி மதிப்பின் ஒரு பகுதியே ஆகும்.

இவ்வாறு முதலாளித்துவ உற்பத்திமுறையில் வணிக மூலதனம் தனிப்பகுதியாகிறது. உபரிமதிப்பின் உற்பத்தியும், அது ஈடேற்றம் அடைவதும் தனித்தனித் துறைகளாகத் தெளிவாகப் பிரிகிறது. தொழில்துறை முதலாளி மதிப்பை விடக் குறைந்த விலைக்கு விற்கிறார். வணிக முதலாளி சரக்குகளை அவற்றின் மதிப்பை விடக் குறைந்த விலைக்கு வாங்குகிறார். வணிக மூலதனத்தின் மூலம் உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடையில் இடைத்தரகராக வணிகர் செயல்படுவதால் உழைப்புச் சுரண்டல் மறைக்கப்படுகிறது.

அடுத்த மட்டத்தில் தொழில்துறை முதலாளி வர்க்கம், மூலதனத்தை மேலாண்மை செய்யும் வேலையைக் கைவிட்டு அதைப் பிறரிடம் ஒப்படைக்கிறது. முதலாளித்துவத்தில் உழைப்பாளர் சரக்காக்கப்படுவதுடன் மூலதனமும் சரக்காக்கப்படுகிறது. மூலதனம் கடன் வாங்கிப் பெறப்பட்டால் அதில் ஒரு பகுதியானது வட்டியாகச் செலுத்தப்படுகிறது. இவ்வாறு மூலதனம் என்பதும் சரக்காகிறது. அதிலிருந்து வட்டி மூலதனம் உருவாகிறது.

மூலதனத்தை சொந்தமாகக் கொண்டுள்ள முதலாளி, தொழில்துறை முதலாளியிடமிருந்து வேறுபடுகிறார். ஒரு தொழில்துறை முதலாளியால் பலரிடமிருந்தும் மூலதனத்தைத் திரட்ட முடியும். 1,000 பேரிடமிருந்து 10 ரூபாய் கடனாகப் பெறப்படும் போது 10,000 ரூ திரட்டப்படுகிறது. தனித்து இருக்கும் போது மூலதனமாகச் செயல்பட முடியாத அளவிற்கு சிறு அளவாக இருக்கும் பணம், ஒன்றாகச் சேரும் போது மூலதனமாகச் செயல்பட முடிகிறது. இது மூலதனம் மையப்படுத்தப்படுவதற்கு உதவுகிறது. தொழில்துறை முதலாளி மூலதனத்தை மையப்படுத்துகிறார். வங்கிகளின் மூலம் மூலதனம் மையப்படுத்தப்படுகிறது. தொழில்துறை முதலாளியின் வருவாயில் ஒரு பகுதியை வட்டி மூலதனம் உரிமை கோருகிறது. ஒரு துண்டு காகிதத்தைக் கூட சரக்காக்க முடிகிறது. உபரிமதிப்புக்கு நேரடியாகத் தொடர்பில்லாத உரிமை கோரல்களும் சரக்காக்கப்படுகின்றன. பணத்தின் மூலம் மேலும் அதிகப் பணம் ஈட்டப்படுகிறது. உபரிமதிப்பு எங்கிருந்து வருகிறது என்பது ஒரு கட்டத்தில் புதிராகிப் போகிறது.

தொழில்துறை முதலாளிக்கு மூலதனத்துடனான நேரடித் தொடர்பு விலக்கப்படுகிறது. அதனால் அவர் தனது மூலதனத்தை அபாயத்திற்கு உட்படுத்துவதில்லை. நமது மூலதனத்தை அபாயத்திற்கு உட்படுத்துகிறார். மூலதனத்திற்குச் சொந்தமாக இருப்பவர் இப்பொழுது ஒரு முதலாளி அல்ல. சமூக சொத்து முதலாளித்துவக் கூட்டுடைமையாக உள்ளது. இவ்வாறு தனியுடைமை கூட்டுடைமையாகிறது. அதைச் சமூகமயமாக்க வேண்டியதே எஞ்சியுள்ளது.

சமூக மூலதனத்தின் சராசரி இலாபமானது முதலாளிகளுக்கு இடையேயான போட்டி வாயிலாக நிர்ணயிக்கப்படுகிறது. தொழில்துறை முதலாளிகள் தொழில்துறையில் உருவாக்கப்பட்ட இலாபம் முழுவதையும் பெறுவதில்லை. அவர்கள் முதலீடு செய்த மூலதன அளவுக்குப் பொருத்தமான விகிதத்தில் சராசரி இலாபம் பெறுகின்றனர். போட்டியின் மூலம் சராசரிப் பொது இலாப வீதம் நிர்ணயிக்கப்படுகிறது. சமூகத்தின் மொத்த உபரிமதிப்பில் / இலாபத்தில் ஒரு பகுதி வணிக மூலதனத்தின் இலாபமாக வணிகர்களிடமும், மற்றொரு பகுதி வட்டி பெறும் மூலதனத்தின் இலாபமாக நிதிமுதலாளிகளிடமும் சேருகிறது. அதன் இன்னொரு பகுதி நில வாடகையாகி நில முதலாளியைச் சேருகிறது. இவ்வாறு உபரிமதிப்பானது தொழிலக முதலாளி, வணிக முதலாளி, வட்டி பெறும் நிதி முதலாளி, நில முதலாளி ஆகிய நான்கு வகையான முதலாளிகளுக்கும் பிரித்தளிக்கப்படுகிறது.

முதலாளித்துவத்தில் வெளித்தோற்றத்தில் பார்த்தால் உழைப்பாளிக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் பெறுவது போல் தெரிகிறது. உபரிமதிப்பு மூலதனத்திலிருந்துதான் உருவாவது போன்ற ஒரு மாயத் தோற்றம் ஏற்படுகிறது. வணிக மூலதனமும், வட்டி மூலதனமும் இந்த மாயத் தோற்றத்தை மேலும் அதிகப்படுத்துகிறது. வட்டி மூலதனம் உபரிமதிப்பு உருவாக்கத்தை மாய்மாலமாக்குகிறது. மூலதனப் பெருக்கத்தின் உண்மையான தோற்றுவாய், தொழில்துறை முதலாளிகளின் இலாப வடிவத்தில் மறைக்கப்பட்டுள்ளதைக் காட்டிலும் வணிகர்களின் இலாப வடிவத்திலும், நிதி முதலாளி பெறும் வட்டி வடிவத்திலும் மேலும் அதிகமாக மர்மமாக்கப்பட்டுள்ளது.

(தொடரும்)

## அரசியல் வகுப்பு :பாடக்குறிப்புகள்:

தியாகு

# "தமிழ்நாடு இனி(1) "

குமுக) சமூக (வளர்ச்சிப் போக்கில் குடியாட்சியம் முன்னேறிச் செல்லும் போது மக்கள் மொழிவழித் தேசங்களாக அமைந்து ,தேசங்கள் இறைமை கொண்ட அரசுகளாக அமைவதே பொது நெறியாகும் .ஐரோப்பாவில் இந்தச் செயல்வழி தேச-அரச உருவாக்கம்) Nation-state formation) எனப்பட்டது .இந்தக் கட்டம் குமுக வளர்ச்சியில் தவிர்க்க முடியாத ஒன்று .இந்தியத் துணைக்கண்டத்தில் இந்தக் கட்டம் இன்னும் நிறைவு பெறவில்லை.

தொழிலாளர்களுக்கு) பாட்டாளிகளுக்கு (நாடு இல்லை என்பதன் பொருள் நாடு தேவை இல்லை என்பதன்று .பாட்டாளி வகுப்பு அந்தந்த நாட்டிலும் தலைமை வகுப்பாக உயர வேண்டும் .அந்த அளவுக்கு தேசியத் தன்மை பெற வேண்டும் .முதலியப் பொருளில்) முதலாளித்துவப் பொருளில் ( தேசியத் தன்மை பெறுவது வேறு ,பாட்டாளியப் பொருளில் அத்தன்மை பெறுவது வேறு . பாட்டாளித் தேசியம் வேறு ,முதலாளித் தேசியம் வேறு .

கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும் பொதுமைக் கட்சியின் கொள்கையறிக்கையின் இறுதியில்" Workers of All Countries Unite!" என்று கூறுவதை" உலகத் தொழிலாளர்களே

**விழிப்பே துணை!**

**சாத்தான்குளம் காவல்நிலைய இரட்டைப் படுகொலைக் குற்றவாளிகளைத் தப்ப அரசு தரப்பு சூழ்ச்சிகளை முறியடிப்போம்!**

**காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம்**
**JAACT - TN**

**தோழர் தியாகு, 8939154752.**

**செயலாளர்:**
**தோழர் மீ.த. பாண்டியன்,**
**9080427640.**

ஒன்றுசேருங்கள் "என்று தமிழாக்கம் செய்வது தவறான கருத்தை ஏற்படுத்துவதாக உள்ளது . "அனைத்து நாடுகளின் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் "!என்று தமிழாக்கம் செய்வதுதான் சரியானது .பாட்டாளிகள் நாடுகளாகப் பிரிந்திருக்கும் மெய்ந்நிலையை அறிந்தேற்று ,அவர்கள் அந்தந்த நாட்டிலும் நாடுகடந்தும் ஒன்றுபடும் தேவையை வலியுறுத்தும் முழக்கம் இஃதென்பதை விளங்கிக் கொள்ளவும் விளக்கப்படுத்தவும் வேண்டும்.

தேசியப் போராட்டமும் வகுப்புப் போராட்டமே) வர்க்கப் போராட்டமே .(என இலெனின் எடுத்துக் காட்டினார் .இரண்டிலுமே வகுப்பு நலன்கள் முட்டிமோதுகின்றன .இரண்டையும் ஒன்றுக்கொன்று போட்டியாகப் பார்க்காமல் துணையாகக் கொள்ள வேண்டும்.

சமூக வளர்ச்சி வரலாற்றில் மொழி, தேசிய இன உருவாக்கம், தேச உருவாக்கம் ஆகியவை வகித்த குறிப்பிடத்தக்க பாத்திரத்தை மார்க்சியம் உரியவாறு கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை என்பது பிழையான பார்வை .மொழிவழித் தேசங்களும் தேசிய இனங்களும் காலாவதியாகி விட்டன என்ற கருத்தை கார்ல் மார்க்ஸ் மறுதலித்தார் .மொழிதான் மாந்த உறவாடலின் மிக முதன்மையான கருவி என்று எடுத்துக்காட்டி மொழி வளர்ச்சிக்கும் சமூக வளர்ச்சிக்குமான புறஞ்சார் உறவை இலெனின் விளக்கினார் .

படிக்க வேண்டியவை :

கார்ல் மார்க்ஸ் ,பிரெடெரிக் எங்கெல்ஸ் ,பொதுமைக் கொள்கையறிக்கை) COMMUNIST MANIFESTO), அதிகாரம் .2 பாட்டளிகளும் பொதுமையரும் .

தியாகு :தேசியத்தின் உரையாடல் ,பகுதி ,4 ஆய்வின் பெயரால் அவதூறு.

---

## தமிழ்நாடு இனி(2)

நமக்கு அறிவியல் கண்ணோட்டம் முதல் தேவை .ஆளும் வகுப்புகளைக் கண்டு அஞ்சாமல் இருப்பது மட்டுமல்லாமல் .பொதுமக்களிடம் காணப்படும் விருப்பு வெறுப்புகளுக்கும் தப்பெண்ணங்களுக்கும் கூட அஞ்சாமல் சரியான அரசியல் வழியைக் காண வேண்டும் . அறிவியல் பார்வை ,கொள்கைப் பற்று .உழைப்பார்வம் ,ஈக நெஞ்சம் ,கட்டுப்பாடு ஆகிய ஐங்குணங்கள் நம் ஒவ்வொருவருக்கும் தேவை .

குமுக அறிவியல் கற்கும் போது தொடக்கத்தில் எதிர்ப்படும் இடர்ப்பாடுகளைக் கண்டு மிரளக்

கூடாது .கலைச் சொற்களை அவற்றுக்குரிய சரியான பொருளில் புரிந்து உள்வாங்கிக் கொள்ள வேண்டும் .அரசியல் என்பது ஒருங்கே அறிவியலும் கலையும் ஆகும் .அதாவது புறஞ்சார் குமுக நெறிகள் மட்டுமல்லாமல் அகஞ்சார் மாந்த முயற்சிகளும் சேர்ந்தே அரசியல் வழியைத் தீர்மானிக்கின்றன .

மாந்தக் குல வளர்ச்சி வரலாற்றில் ஆதிமனிதர்கள் முதலில் குலங்களாகக் குழுச் சேர்ந்தனர் . குலங்கள் சேர்ந்து பழங்குடிகளாயின .பழங்குடி மாந்தரை இணைத்த இழை குருதியுறவும் பொது மொழியும்தான் .வரலாற்றுப் போக்கில் குருதிக் கலப்பு நேரிட்டுப் பழங்குடிகள் கலைந்த போது பொது மொழியால் அவர்கள் இணைந்திருந்தார்கள் .இப்படிப் பொதுமொழியால் இணைந்த ஒவ்வொரு மாந்தக் கூட்டத்துக்கும் ஒரு மொழிவழிக் குமுகாயம் என்று பெயர் .மொழிவழிக் குமுகாயம் ஒரு தொடர்ச்சியான நிலப்பரப்பில் நிலைத்து வாழும் போது அவர்களுக்கான பொதுப் பண்பாடு மலர்கிறது .அது முதல் அவர்கள் தேசிய இனம் ஆகின்றனர் .வரலாற்றில் மொழி ,புலம் , பண்பாடு ஆகிய மூன்று பொதுத் தன்மைகளோடு மலர்ந்து நிலைத்து வாழும் மாந்தக் கூட்டம் தேசிய இனம் ஆகும் .பொருளாக்க முறையின் வளர்ச்சி காரணமாக சரக்காக்கம் பரவலாகும் போது இந்தக் கூட்டத்துக்கிடையே பொருளியல் பிணைப்பு வளர்ந்து தேசிய இனம் தேசமாக வளர்கிறது .தேசத்தின் வளர்ச்சி பெறாத வடிவம் தேசிய இனம் என்றும் தேசிய இனத்தின் வளர்ந்த வடிவம் தேசம் என்றும் கொள்ளலாம் .

குலம் ,பழங்குடி ,மொழிவழிக் குமுகாயம் ,தேசிய இனம் ,தேசம் இவற்றையே மக்கள் அல்லது மக்களினம் என்ற பொதுச் சொல்லால் அழைக்கிறோம் .மக்கள் என்ற சொல்லை இப்போதைய வளர்ச்சிக் கட்டத்தில் தேசிய இனம் அல்லது தேசத்தையே குறிக்கும் .இந்திய மக்கள் என்ற வரையறை குமுக அறிவிவியல் நோக்கில் பிழையானது .இந்தியாவின் மக்களினங்கள் பற்றிப் பேச முடியுமே தவிர இந்திய மக்கள் என்று வரையறுப்பது பிழை .

“தேசம் என்பது பொது மொழி, ஆட்சிப் புலம், பொருளியல் வாழ்வு, பொதுப் பண்பாட்டில் வெளிப்படும் உளத்தியல் அமைவு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த, வரலாற்று வழியில் உருப்பெற்ற நிலையான மக்கள் குமுகாயம் ஆகும்” என்று பொதுவாகத் தேசம் என்பதற்கு ஸ்டாலின் தரும் வரையறை சரியானது .ஒரு தேசத்தின் ஆக்கக்கூறுகளாக இருப்பவற்றைச்

சுருக்கமாகச் சொன்னால் மொழி பண்பாடு, நிலம், பொருள், வரலாறு .

படிக்க வேண்டியவை:

ஜே.வி .ஸ்டாலின் ,மார்க்சியமும் தேசிய இனச் சிக்கலும் .

தியாகு ,தேசியத்தின் உரையாடல் ,பகுதி :3 தேசிய இனச்சிக்கலில் ஸ்டாலின் செய்த கோட்பாட்டுப் பங்களிப்பு.

---

## தமிழ்நாடு இனி(3)

மொழி என்பது என்ன ?அது கருத்துப் பரிமாற்றத்துக்கான ஊடகம் மட்டுமன்று .அது சிந்தனையின் ஊடகமுமாகும் .சிந்தனையின் உறுப்பு மூளை ,சிந்தனையின் அடிப்படை இயற்கையும் குமுகமும் ஆகும் .சிந்தனையும் சிந்தனைப் பரிமாற்றமும் குமுக வாழ்வின் தேவையும் விளைவுமாகும் என்பதால் மொழியைக் குமுக வாழ்வின் ஊடகம் என்று வரையறுப்பதே சரி .மாந்தர் ஒரு குமுக விலங்கு ஆதலால் மாந்தர் மொழியைப் படைத்தார் ,மொழி மாந்தரைப் படைத்தது எனலாம் . மொழியே மாந்த உறவாடலின் முகன்மைக் கருவி என்றார் இலெனின் .

மார்க்சும் எங்கெல்சும் மொழியைச்" சிந்தனையின் உடனடி மெய்ந்நடப்பு "என்று வரையறுத்தனர் . "மொழியிலிருந்து விலகிக் கருத்துகளுக்கு வாழ்வில்லை "என்றார் மார்க்ஸ்.

மொழி என்பது போராட்டத்துக்கும் குமுக வளர்ச்சிக்குமான கருவி .அது ஒற்றுமைக்கான கருவி , விடுதலைக்கான கருவி ,புரட்சிக்கான கருவி !

தாய்மொழி என்பது முதலில் மிகப் பெரும்பாலும் தாயினூடாக வரப்பெறுவதே தவிர தாயினாலேயே படைக்கப்படுவதன்று .தாய் ,தந்தை ,சுற்றத்தார் அனைவரிடமிருந்தும் குழந்தைக்கு வரப்பெறும் மொழி குமுகச் சூழலால் வளர்ந்து முழுமையடைகிறது .ஒருசிலருக்கு வீட்டுத் தாய்மொழியும் குமுகத் தாய்மொழியும் வேறுபடும் சூழல் அமையலாம் .வீட்டுத் தாய்மொழியை விடவும் குமுகத் தாய்மொழி வாழ்வியல் ஊடகமாக முன்னுக்கு வருவதே இயல்பான போக்கு , மொழி என்பது ஓர் உடற்கூறு அன்று .அது குமுக விளைச்சல் என்பதை மறக்கலாகாது . குருதியில் கலந்த மொழி என்பதெல்லாம் வெறும் புனைவுதான் .தேசிய இனத்தைத் தீர்மானிப்பது பொது மொழிதான் .அது தாய்மொழியாகத்தான் இருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை .

மொழி என்பது குமுகத்தின் பொருளியல் அடித்தளத்தையோ கருத்தியல் மேற்கட்டுமானத்தையோ

சேர்ந்ததில்லை .குமுகத்தின் பொருளாக்க முறைதான் அடித்தளம் .அரசியல் ,சமயம் ,சட்டம் ,கலை இலக்கியம் போன்றவை மேற்கட்டுமானம் ஆகும் .மொழி இரண்டு தளங்களிலும் ஒரு கருவி போல் பயன்படுகிறது .மொழி எல்லா வகுப்புகளுக்கும் பொதுவானது .முதலாளர்க்கு ஒரு மொழி , தொழிலாளர்க்கு ஒரு மொழி என்பதில்லை .

மொழி என்பது இரு கூறுகளால் ஆனது .ஒன்று ,அடிப்படைச் சொல்வளம் ,இரண்டு கட்டுமானம் . சொல்வளம் மாந்த உடலின் தசை போன்றது .கட்டுமானம் அல்லது அடிப்படை இலக்கணம் எலும்புக் கூடு போன்றது .சொல்வளமும் கட்டுமானமும் நீண்ட வரலாற்றுப் போக்கில் வளர்ந்து நிலைபெறுகிறவை .புதிய சொற்களும் புதிய கட்டுமான முறைகளும் இடையில் வந்து சேரலாம் என்றாலும் அடிப்படைச் சொல்வளமும் கட்டுமானமும் மாறாது நீடிக்கிற அளவில் அதே மொழிதான் நீடிக்கிறது .

குலத்தின் மொழி பழங்குடி மொழி ஆவதும் பழங்குடி மொழி தேசிய இன மொழி ஆவதும் தேசிய இன மொழி தேசிய மொழி ஆவதும் என்ற பல்வேறு கட்டங்களினூடே மொழி மாந்தக் குமுகத்தை இடங்கடந்தும் காலங்கடந்தும் இணைக்கிறது .இந்த இணைப்பின் இழை கிடைக்கோடாக மட்டுமன்று ,குத்துக்கோடாகவும் நீண்டு செல்கிறது .இறந்த காலத்தையும் நிகழ் காலத்தையும் மட்டுமின்றி ,நிகழ் காலத்தையும் எதிர் காலத்தையும் கூட இணைக்கிறது.

படிக்க வேண்டியவை :

ஜே.வி .ஸ்டாலின் :மார்க்சியமும் மொழியியல் சிக்கல்களும் .

தியாகு :தேசியத்தின் உரையாடல்.

---

## தமிழ்நாடு இனி(4)

தமிழ் தமிழ்த் தேசத்தின் பொதுமொழியாகும் .அதாவது நம் தேசிய மொழியாகும் .ஆனால் இந்திய அரசோ இந்திய அரசமைப்போ தமிழை ஒரு தேசிய மொழியாக அறிந்தேற்கவில்லை , தமிழ் மக்களை ஒரு தேசம் அல்லது தேசிய இனமாக அறிந்தேற்கவும் இல்லை .இதிலிருந்தே மொழி ஒடுக்குமுறை தொடங்கி விடுகிறது .மொழி ஒடுக்குமுறை என்பது தேசிய ஒடுக்குமுறையின் ஒரு கூறு ஆகும் .இந்தியாவின் பார்வையில் தமிழர்கள்) தமிழ் மக்கள் (ஒரு தேசமாகவோ தேசிய இனமாகவோ அறிந்தேற்கப்படவில்லை ;இசுரேலின் பார்வையில்

பாலத்தீனர்கள் எப்படி ஒரு தேசிய இனமாக அறிந்தேற்கப்படவில்லையோ ,அதேபோலத்தான் இதுவும் !

இந்திய அரசமைப்பின் சிற்பியாகப் போற்றப்படும் அண்ணல் அம்பேத்கர் இந்தியாவை ஒரு தேசம் என்று ஏற்க மறுத்தார் .மாந்த நிகர்மைக்குப் பகையான சாதியம் இருக்கும் வரை இந்தியாவால் தேசமாக முடியாது என்று அறிவித்தார் .ஆனால் இந்தியாவைத் தேசமாகப் படம்பிடித்துக் காட்டும் முயற்சியில் இந்திய ஆளும் வகுப்பினர் தொடர்ந்து ஈடுபட்டிருக்கக் காண்கிறோம் .

இந்திய அரசமைப்பு இந்தியாவைத் தேசமாக ஏற்கவில்லை என்றாலும் ,தேசங்களின் கூட்டமைப்பு அல்லது ஒன்றியமாகவும் ஏற்கவில்லை .பாரதம் என்கிற இந்தியாவை) அரச (மாநிலங்களின் ஒன்றியமாக மட்டுமே வரையறுக்கிறது .இந்தியாவுக்கென்று ஒரு தேசிய மொழியை அரசமைப்புச் சட்டம் குறித்துரைக்கவில்லை .இந்திக்கு அலுவல் மொழி அல்லது ஆட்சிமொழி என்ற தகுநிலை மட்டுமே உள்ளது .ஆனால் இந்தியைத் தேசிய மொழியாக வலியுறுத்தும் முயற்சியில் ஆளும் வகுப்பினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர் .

இந்திய அரசமைப்பின் எட்டாம் அட்டவணை 22 மொழிகளின் பட்டியல் ஒன்றைத் தருகிறது .இந்த மொழிகளைத் தேசிய மொழிகள் என்றோ மாநில மொழிகள் என்றோ வட்டார மொழிகள் என்றோ வரையறுக்கவில்லை .இந்த மொழிகளின் பட்டியலில் இந்திக்கும் ஓர் இடம் தரப்பட்டுள்ளதே தவிர சிறப்பிடம் ஏதும் தரப்படவில்லை .ஆனால் அரசமைப்புச் சட்டத்தின்17 ஆம் பகுதி இந்தியை இந்திய ஒன்றியத்தின் ஆட்சிமொழி ஆக்கி விடுகிறது .

இந்திய அரசமைப்பின் எட்டாம் அட்டவணையில் ஆங்கிலத்துக்கு இடமளிக்கப்படவில்லை . ஆனால் 1965 வரை இந்திய ஒன்றியத்தின் ஆட்சிமொழியாகவும் அதன் பிறகு துணை ஆட்சிமொழியாகவும் ஆங்கிலம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது .ஆங்கிலமே இந்திய உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களின் மொழியாகக் குறித்துரைக்கப்படுகிறது .இந்தியாவின் தேசிய ஒடுக்குமுறையில் இந்திக்கும் ஆங்கிலத்துக்கும் இடமிருக்கிறது .

இந்தி ,ஆங்கிலம் ஆகியவற்றுடன் இந்தியத் தேசியத்தின் உள்ளடக்கமான இந்துத்துவம் என்கிற

பதிவு எண் :R.Dis. No. 1964/2014

பார்ப்பனியத்தின் மொழியாகிய வடமொழி எனப்படும் சமற்கிருதத்துக்கும் இந்திய அரசும் அரசமைப்பும் சிறப்பிடம் வழங்குகின்றன .இறுதி நோக்கில் இந்திய அரசமைப்பு மொழிகளின் நிகர்மையை மீறுகிறது .மக்களின் மொழிகளையும் உண்மையான தேசிய மொழிகளையும் புறக்கணித்து இந்தி ,ஆங்கிலம் ,வடமொழி ஆகியவை திணிக்கப்படுவது இந்தியத் தேசிய ஒடுக்குமுறையின் முகன்மைக் கூறாக உள்ளது.

இந்திய அரசமைப்பில் மொழிப் பாகுபாடும் ,மொழி ஒடுக்குமுறையும் ,எனவே தேசிய ஒடுக்குமுறையும் இடம் பெற்றதற்கான விளக்கம் அண்ணல் அம்பேத்கர் அரசமைப்புப் பேரவையில் ஆற்றிய இறுதியுரையிலேயே காணக் கிடைக்கிறது 1949 .நவம்பர்25 ஆம் நாள் ஆற்றிய அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க உரையில் அம்பேத்கர் சொல்கிறார் 1950" :சனவரி26 ஆம் நாள் முரண்பாடுகள் நிறைந்த வாழ்வினுள் நுழையப் போகிறோம் .நமக்கு அரசியலில் நிகர்மை இருக்கும் ,குமுகப் பொருளியல் வாழ்வில் நிகர்மை இருக்காது .அரசியலில் ஒருவருக்கு ஒரு வாக்கு ,ஒரு வாக்குக்கு ஒரு மதிப்பு என்ற கொள்கையை அறிந்தேற்பவர்களாக இருப்போம் .நம் குமுகப் பொருளியல் கட்டமைப்பு காரணமாய் குமுகப் பொருளியல் வாழ்வில் ஒருவருக்கு ஒரு மதிப்பு என்ற கொள்கையைத் தொடர்ந்து மறுத்து வருவோம் .இன்னும் எவ்வளவு காலம் முரண்பாடுகள் நிறைந்த இந்த வாழ்வைத் தொடரப் போகிறோம்"...?

அண்ணல் சொல்லும் குமுகப் பொருளியல் நிகரின்மை அல்லது ஏற்றத்தாழ்வு என்பது என்ன ? முதலாவதாக ஏழை-பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு ,இரண்டாவதாக சாதி ஏற்றத்தாழ்வு , மூன்றாவதாக ஆண்-பெண் ஏற்றத்தாழ்வு !இந்தப் பட்டியலில் மொழி ஏற்றத்தாழ்வு சேருமா ? சேருதா ?மொழிகளின் நிகரின்மையால் குமுகப் பொருளியல் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுவது கண்டு கொள்ளப்படவில்லை .மற்ற வகை ஏற்றத்தாழ்வுகள் நிலவுவதை ஓரளவு ஏற்றுக்கொள்ளும் இந்திய அரசமைப்பு மொழிவகை ஏற்றத்தாழ்வு என்ற ஒன்று இருப்பதை ஒப்புக்குக் கூட அறிந்தேற்கவில்லை என்பதே உண்மை !

படிக்க வேண்டியவை :

அண்ணல் அம்பேத்கர் அரசமைப்புப் பேர்வையில் 1949 நவம்பர்25 ஆம் நாள் ஆற்றிய இறுதியுரை;

இந்திய அரசமைப்புச் சட்டம் ,உறுப்பு ;2 ,1 பகுதி ,17 எட்டாம் அட்டவணை .

**சமந்தா**

## டாலருக்கு வந்த வாழ்வு (8):

# தேசங்கடந்த நாணயம்

டிரம்ப், அமெரிக்காவின் வர்த்தகப் பற்றாக்குறை அதிகரிப்பதற்கு சீனாதான் காரணம் என்று குற்றம் சாட்டி சீனப் பொருள்களுக்கான காப்பு வரியை அதிகரித்தார். ஆனால், இது அமெரிக்காவுக்கோ டாலருக்கோ மட்டுமே உள்ள பிரத்யேகப் பிரச்சினை இல்லை, அமெரிக்காவின் வர்த்தகப் பற்றாக்குறை அதிகரிப்பிற்கு காரணம், அமெரிக்க உற்பத்தியில் ஏற்பட்ட சரிவோ அல்லது சீனா நாணயத்தை மதிப்பிழக்க செய்வதோ மட்டும் அல்ல. ஒரே நேரத்தில் ஒரு நாட்டின் நாணயம் உலகப் பணமாகவும் இருக்கும் போது அந்நாணயத்திற்கான தேவை சர்வதேச அளவில் அதிகரிப்பதால் அந்நாட்டின் வர்த்தகப் பற்றாக்குறை நாளடைவில் அதிகமாகும் போக்கு ஏற்படுகிறது. ஆகவே, அது டாலராக இருந்தாலும், யூரோவாக இருந்தாலும், வர்த்தகப் பற்றாக்குறையை அதிகப்படுத்தவே செய்யும். வர்த்தகப் பற்றாக்குறையைக் குறைப்பதற்காக உலகப் பணத்துக்கான (டாலருக்கான) தேவையைப் பூர்த்தி செய்யா விடில் அது உலகப் பொருளாதாரத்தைப் பாதிக்கும், டாலருக்கான சர்வதேசத் தேவையைப் பூர்த்தி செய்யும் விதத்தில் டாலரின் வழங்கலை அதிகரித்துக் கொண்டே இருந்தால், டாலரின் மதிப்பும், அதன் மீதான நம்பகத் தன்மையும் குறைந்து தங்கம் மற்றும் பிற நாணயங்களுக்கு மாறும் போக்கு ஏற்படும். இவ்வாறு ஒரு நாணயம் ஒரே நேரத்தில் உள்நாட்டு நோக்கங்களுக்காகவும், சர்வதேச நோக்கங்களுக்காகவும் செயல்படும் போது பொருளாதார முரண்பாடுகள் ஏற்படுகின்றன என்று ராபர்ட் டிரிஃபின் என்ற பொருளாதார அறிஞர் இப்பிரச்சினையை விளக்கியுள்ளார். இது குறித்த அவரது கருத்துக்கள் டிரிஃபின் பிரச்சினை (Triffin's dilemma) என்றே அழைக்கப்படுகின்றன. இப்பிரச்சினையினால் அமெரிக்க டாலரை உலகப் பணமாக்கும் பிரட்டன்வுட்ஸ் ஒப்பந்தம் நீண்ட நாட்களுக்கு நீடிக்க முடியாது என்றும் டிரிஃபின் தெரிவித்ததுடன், நாடுகடந்த நாணய அமைப்பை ஏற்படுத்த வேண்டும் எனவும் முன்மொழிந்துள்ளார்.

இப்பொழுது உங்களுக்கு ஒரு கேள்வி எழலாம், பிரிட்டனின் ஸ்டெர்லிங் உலகப் பணமாக இருக்கும் போதும் வர்த்தகப் பற்றாக்குறை அதிகரித்திருக்குமல்லவா? அப்பொழுது பிரிட்டன் எப்படி அந்தப் பிரச்சினையைச் சமாளித்தது? பிரிட்டிஷ் நாணயம் உலகப் பணமாக இருந்த போது பிரிட்டனின் வர்த்தகப் பற்றாக்குறையால், நடப்புக் கணக்குப் பற்றாக்குறை அதிகரித்தது என்ற போதும் அதை மூலதனக் கணக்கு உபரி மூலம் சமன் செய்யப்பட்டது. இந்தியா போன்ற காலனி

நாடுகளிடம் சுரண்டப்பட்ட செல்வத்தை மற்ற நாடுகளுக்கு மூலதனமாக ஏற்றுமதி செய்து சரிசெய்யப்பட்டது. அப்பொழுது பகிரங்கமாக அடித்த கொள்ளைகளை இப்பொழுது அடிக்க முடியாது, பிரிட்டனைப் போல் அமெரிக்காவுக்கு நேரடியாகக் காலனிகள் இல்லை, மறைமுகமான காலனிகளே உள்ளன. எனவே உலகப் பணம் என்ற தகுநிலையில் நீடிக்கும் வரை அமெரிக்கா அதிக வர்த்தகப் பற்றாக்குறையுடனே இருக்கும். உள்நாட்டு உற்பத்தியைப் பழைய அளவிற்குப் பெருக்காத வரை, தற்போதைய நிலையில் உலகத் தகுநிலையை இழந்தாலும், அமெரிக்காவின் வர்த்தகப் பற்றாக்குறை மேலும் மேலும் அதிகரிக்கவே செய்யும். பெட்ரோ டாலர் மறுசுழற்சி என்பதும் வெளிநாடுகளிலிருந்து கடன் பெறுவதன் மூலம் வர்த்தகப் பற்றாக்குறையை சரிசெய்வதற்கான, மூலதனக் கணக்கு உபரியை பெறுவதற்கான ஒரு வழிமுறையேயாகும்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் புதிய பொருளாதார அமைப்பை ஏற்படுத்துவதற்கான பிரெட்டன்வுட்ஸ் மாநாட்டில் பிரிட்டன் தரப்பில் பொருளாதார அறிஞர் ஜான் மொனட் கீன்ஸ் சர்வதேசப் பரிவர்த்தனைகளுக்கு 'பேங்கர்' என்ற உலகளாவிய இருப்பு நாணயத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று முன்மொழிந்தார். பொருளாதார மேலாதிக்கத்தை பிரிட்டன் முற்றிலும் இழக்காதவாறும், அமெரிக்காவின் கை முற்றிலும் ஓங்காதவாறும் ஒரு சமநிலை ஏற்படுத்தும் விதத்தில் இருந்தது அவரது திட்டம். அமெரிக்கா சார்பிலான திட்டத்தை அமெரிக்கக் கருவூலச் செயலாளர் டெக்ஸ்டர் வொய்ட் முன்வைத்தார். சர்வதேச வர்த்தகத்தில் உபரியைக் கொண்டிருந்தது அமெரிக்கா. பேங்கர் திட்டம் எந்த நாடும் வர்த்தக உபரியுடன் தொடர்ந்து நீடிப்பதை மட்டுப்படுத்தும் வகையில் அமைந்ததாலும், அது செயல்படுத்தப்பட்டால் அமெரிக்கா பொருளாதார மேலாதிக்கத்தை அடைய இயலாது என்பதாலும் .அமெரிக்கா தரப்பில் பேங்கர் முன்மொழிவுக்குக் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு டாலரை உலகப் பணமாக்கி வெற்றியை தனதாக்கிக் கொண்டது அமெரிக்கா.

**<u>பேங்கர் திட்டம்</u>:** பேங்கர் திட்டத்தின் படி அனைத்து சர்வதேசப் பரிவர்த்தனைகளும் சர்வதேசத் தீர்வு ஒன்றியம் மூலம் நடத்த வேண்டும். தங்கத்தை அடிப்படையாகக் கொண்ட அலகான பேங்கரை மட்டுமே சர்வதேசப் பரிவர்த்தனைக்காக உபயோகிக்க வேண்டும். பேங்கர் ஒரு சர்வதேச நாணயம் அல்ல. சர்வதேசப் பரிவர்த்தனைகளின் சுற்றோட்டத்தைக் கண்காணிக்கப் பயன்படும் ஒரு கணக்கீட்டு அலகு. தங்கத்தைக் கொண்டு பேங்கரை வாங்க முடியும், ஆனால்

பேங்கரைக் கொண்டு தங்கத்தை வாங்க முடியாது. தனிநபர்கள் பேங்கரைச் சேமிக்கவோ அதில் வர்த்தகம் செய்யவோ கூடாது. ஒரு உறுப்பு நாடு ஏற்றுமதி செய்யும் போது அதன் சர்வதேசக் கணக்கில் பேங்கர் வரவு வைக்கப்படும், அந்நாடு இறக்குமதி செய்யும் போது அதன் கணக்கிலிருந்து பேங்கர் கழிக்கப்படும் அல்லது கடனாகப் பதிவு செய்யப்படும். அதற்கான வட்டியை அந்த நாடு கட்ட வேண்டும். இந்த அமைப்பில் ஒரு நாடு கூடுதலான வர்த்தக உபரியை நெடுங்காலம் வைத்திருக்க முடியாது, அதற்குக் கட்டணம் செலுத்த வேண்டும். ஒரு நாடு தன் கணக்கில் வைத்துக் கொள்ள வேண்டிய பேங்கரின் அளவிற்கும் வரம்புகள் விதிக்கப்படும், உலக வர்த்தகத்தில் ஒவ்வொரு நாடும் கொண்டுள்ள பங்கின் அடிப்படையில் அதன் வரம்புகள் நிர்ணயிக்கப்படும். ஏற்றுமதியை விட அதிகமான இறக்குமதியைக் கொண்டிருக்குமானால் அது கூடுதலாகப் பெற வேண்டிய பேங்கர் கடனுக்கு வட்டி செலுத்த வேண்டும், அது போல் இறக்குமதியை விட அதிகமான ஏற்றுமதியுடன் கணக்கில் உபரி பேங்கரை வைத்திருக்கும் நாடுகளும் அதற்கு வட்டி / கட்டணம் செலுத்த வேண்டும். அதிகப்படியான உபரி அல்லது பற்றாக்குறை உருவாவதைத் தடுத்து வர்த்தகச் சமநிலையை ஊக்குவிப்பதற்கான அமைப்பு முறையாக அது கருதப்பட்டது. வர்த்தக உபரி கொண்ட நாடுகளின் நாணயத்தின் மதிப்பு ஏற்றம் பெறும், அதனால் ஏற்றுமதிக்காகப் போட்டியிடும் திறன் குறையும், அதே போல் வர்த்தகப் பற்றாக்குறை கொண்ட நாடுகளின் நாணயம் மதிப்பிழப்பதால், ஏற்றுமதிக்கான போட்டித் திறனை அதிகரித்து ஏற்றுமதியை ஊக்குவிக்கும், இதனால் வர்த்தக சமநிலை நிலைநிறுத்தப்படும் என்ற அடிப்படையில் அமைந்தது. (இவ்வமைப்பின் குறைபாடுகள் குறித்து இந்தத் தொடரின் அடுத்த பகுதியில் காண்போம்).

எந்த ஒரு நாட்டின் நாணயமும் உலகப் பணமாகச் செயல்படுவதைத் தவிர்க்கும் விதமாகவும், மேலாதிக்கத்தைப் பெறாதவாறும் உருவாக்கப்பட்டதால் அமெரிக்காவின் திட்டத்தைக் காட்டிலும் பேங்கர் திட்டம் ஜனநாயகத் தன்மையுடையதாய் இருந்தது அதன் சிறப்பம்சமாகும். அதனால்தான் அது ஏற்றுக்கொள்ளப்படவும் இல்லை.

கீன்ஸின் பேங்கர் முன்மொழிவுக்கு அடிப்படையான சர்வதேசத் தீர்வு ஒன்றியம் என்ற கருத்தாக்கம் அவருடன் இருந்த ஷூமேக்கர் என்ற பொருளாதாரவியலாளரின் “பலதரப்புத் தீர்வு” என்ற ஆய்வுக் கட்டுரையின் அடிப்படையிலே அமைந்தது. ஆனால் கீன்ஸின் அறிக்கையில் ஷூமேக்கரின் பெயர் குறிப்பிடப்பட்டதாகத் தெரியவில்லை. 1943ஆம் ஆண்டு வசந்த காலத்தில் எகனாமிகா ஏட்டில் ஷூமேக்கரின் "பலதரப்புத் தீர்வு" என்ற ஆய்வுக் கட்டுரை வெளியிடப்பட்ட

போது, அது கீன்ஸுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியதாகவும் அதன் தனி வெளியீட்டிற்கு ஏற்பாடு செய்வதற்குப் பதிலாக, அதில் உள்ளதை அப்படியே கீன்ஸ் தனது சர்வதேசத் தீர்வு ஒன்றியத்திற்கான திட்டத்தில் இணைத்துள்ளதாகவும் ஷுமேக்கருக்கான இரங்கல் கூற்றில் அவரது நண்பர் லியோபோல்ட் கோர் குறிப்பிட்டுள்ளார். பிரிட்டனின் மேலாதிக்கம் நீடித்து ஸ்டெர்லிங் உலகப் பணமாக தொடர்ந்திருந்தால், கீன்ஸ் இப்படிப்பட்ட முன்னெடுப்பைச் செய்திருப்பாரா என்பது கேள்விக்குறிதான், கீனிசர்கள் கோபித்துக் கொள்ளக் கூடும். ஸ்டெர்லிங் உலகப் பணமாக இருக்கும் போது நடப்புக் கணக்குப் பற்றாக்குறை ஏற்படும் சூழல் இருந்ததுதானே, அப்பொழுது காலனிகளிடம் கொள்ளையடிக்க உடந்தையாக இருந்து விட்டு, தன் நாட்டு நாணயம் உலகப் பணம் என்ற தகுநிலையை இழந்த பின் இத்திட்டத்தை முன்வைப்பது, பாரபட்சமான அணுகுமுறையாகும். தனக்கென்றால் ஒரு நீதி, பிறருக்கென்றால் மற்றொரு நீதி என்பது போல்தான் உள்ளது.

**<u>சிறப்பு வரைவு உரிமைகள் (XDR):</u>**

சர்வதேச நாணய நிதியம் (ஐ.எம்.எஃப்) 1969ஆம் ஆண்டில் ஒரு கூடுதல் சர்வதேசச் செலவாணியாக சிறப்பு வரைவு உரிமைகளை (எஸ்.டி.ஆர்) வெளியிட்டது. சிறப்பு வரைவு உரிமைகள் பேங்கரைப் போன்ற ஒரு சர்வதேசக் கணக்கீட்டு அலகாகும்.

தங்கம், டாலருக்குக் கூடுதலாக சர்வதேசப் பணப் புழக்கத்தை அதிகரிப்பதற்காக உலகளாவிய ஒரு துணைச் சர்வதேசச் செலவாணியாக அது உருவாக்கப்பட்டது. முதலில் தங்கத்துடன் இணைக்கப்பட்ட சிறப்பு வரைவு உரிமையின் மதிப்பு தற்போது ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத்தில் அமைந்த அமெரிக்க டாலர், யூரோ, ஜப்பானிய யென், பிரிட்டிஷ் பவுண்டு மற்றும் சீன ரென்மின்பி ஆகிய ஐந்து நாணயங்களின் தொகுப்பால் தீர்மானிக்கப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்பினர்களாக உள்ள நாடுகளுக்குச் சிறப்பு வரைவு உரிமைகள் ஒதுக்கப்படுகின்றன. உறுப்பு நாடுகளுக்கான சிறப்பு வரைவு உரிமைகளின் ஒதுக்கீடுகள் உலகப் பொருளாதாரத்தில் அவை கொண்டுள்ள ஒப்பீட்டுப் பொருளாதார நிலையை அடிப்படையாகக் கொண்டவை. உறுப்பு நாடுகள் அதற்கான கட்டணத்தைச் செலுத்த வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் முடிவுகளைத் தீர்மானிப்பதில் உறுப்பு நாடுகள் சமமான வாக்குரிமைகளைக் கொண்டிருக்கவில்லை. உறுப்பு நாட்டின் வாக்குரிமையின் மதிப்பும் அவை செலுத்தும் கட்டணத்தின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை சிறப்பு வரைவு உரிமைகளின் ஒதுக்கீடுகளில் மாற்றம் தேவையா என்று மறுமதிப்பீடு

செய்யப்படும். அமெரிக்கா 17.46% வாக்குப் பங்கைப் பெற்று வீட்டோ உரிமையுடன் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் 32% வாக்குப் பங்குகளை கொண்டுள்ளன. அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் மொத்த வாக்கு மதிப்பு 58%. இந்தியாவின் வாக்குப் பங்கு 2.76%, ஜப்பானின் வாக்குப் பங்கு 6.48%, சீனாவின் வாக்குப் பங்கு 6.41%. ஜனநாயகமற்ற சர்வதேச நாணய நிதியத்தில் ஒரு சீர்திருத்தத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால் 85% அறுதிப் பெரும்பான்மை பெற வேண்டும் என்பதால் அது மேற்கத்திய நாடுகளின் ஆதிக்க அமைப்பாகவே செயல்பட்டு வருகிறது. வளரும் நாடுகளுக்கான பிரதிநிதித்துவம் இல்லை என்பதால் இவ்வமைப்பின் மூலம் ஜனநாயக ரீதியான முடிவுகளை எடுப்பது சாத்தியமில்லை.

ஒரு உறுப்பு நாடு தனக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவிற்குத் தன் கணக்கில் சிறப்பு வரைவு உரிமைகள் இருப்பில் வைத்திருக்குமானால் அந்நாடு வட்டி செலுத்த வேண்டியதில்லை. இருப்பின் அளவு ஒதுக்கீட்டை விடக் குறைந்தால் அந்நாடு வட்டி செலுத்த வேண்டும், மாறாக இருப்பின் அளவு ஒதுக்கீட்டை விட அதிகரித்தால் சர்வதேச நாணய நிதியம் வட்டி செலுத்தும். ஒரு உறுப்பு நாடு அதற்கு ஒதுக்கப்பட்டதை விட இரு மடங்கு மட்டுமே சிறப்பு வரைவு உரிமைகளைக் கடனாகப் பெற முடியும்.

சர்வதேச நாணய நிதியத்தின் சிறப்பு வரைவு உரிமைகளை டாலரின் இடத்தில் இருப்பு நாணயமாக்க வேண்டும் என்ற சீர்திருத்தமும் உருவாக்கப்பட்டது. சர்வதேச நாணய நிதியத்தில் 8ஆவது திருத்தப்பட்ட சட்டமானது சிறப்பு வரைவு உரிமைகளை சர்வதேச நாணய அமைப்பின் முதன்மை இருப்பு நாணயமாக உருவாக்க வேண்டும் என்கிறது. டாலரிலிருந்து சிறப்பு வரைவு உரிமைகளுக்கான மாற்றத்தை சுமுகமாக ஏற்படுத்த உறுப்பு நாடுகள் மாற்றீட்டுக் கணக்கை ஏற்படுத்த வேண்டும் என்ற திட்டமும் தலைமைப் பொருளாதார அறிஞர் ஜேக்கியுஸ் பொலக் அவர்களால் பரிந்துரைக்கப்பட்டது. சர்வதேச நாணய நிதியமே சர்வதேசப் பண உருவாக்கத்தையும் பரிவர்த்தனையையும் நிர்வகிக்கும் அமைப்பாக்க வேண்டும் என்றும் அவர் பரிந்துரைத்தார்.

அத்திட்டத்தின்படி மாற்றீட்டுக் கணக்கு சர்வதேச நாணய நிதியத்தால் நிர்வகிக்கப்படும். மாற்றீட்டுக் கணக்கில் உறுப்பு நாடுகளிடமிருந்து டாலரில் அல்லது பிற அந்நிய

செலவாணிகளில் வைப்புத் தொகை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்கு நிகரான சிறப்பு வரைவு உரிமைகள் வரவு வைக்கப்படும். நாடுகள் டாலரை விட்டுப் பெருமளவில் வெளியேறினால் டாலரின் மதிப்பு கடுமையாக பாதிக்கப்படும். டாலரிலிருந்து மாறும் போது நாணயப் பரிமாற்ற மதிப்பில் ஏற்படும் வீழ்ச்சியையும் அழுத்தங்களையும் தவிர்ப்பதற்காகவும், டாலரின் சமநிலையைக் காப்பதற்காகவுமே இத்தகைய திட்டம் உருவாக்கப்பட்டது. இதன் மூலம் திடீர் மாற்றத்தினால் ஏற்படும் நெருக்கடிகள் தவிர்க்கப்பட்டு சீராகச் செயல்படும் சர்வதேச நாணய அமைப்பு ஒழுங்குமுறை உருவாக்கப்படும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது.

பொலக்கின் மாற்றீட்டுக் கணக்குப் பரிந்துரை பரவலான ஆதரவு பெற்றிருந்த போதும், அமெரிக்கா தன் மேலாதிக்கத்தைக் கைவிட விரும்பாததாலும், இத்திட்டத்தின் நிதிச் சேவை, மாற்றீட்டுச் செலவினால் அமெரிக்காவுக்கு இழப்பு ஏற்படும் எனக் கருதி அந்நாடு கடுமையாக எதிர்ப்பு தெரிவித்ததாலும் இத்திட்டம் பின்னுக்கு தள்ளப்பட்டது.

நிதி நெருக்கடியை அடுத்து, 2009 மார்ச்சில் சர்வதேச நாணய நிதியத்தின் சீர்திருத்தம் என்ற தலைப்பில் ஆற்றிய உரையில், சீன மக்கள் வங்கியின் ஆளுநர் ஜோ சியாச்சுவான், அமெரிக்க டாலரின் இருப்பு நாணயத் தகுநிலையே உலகளாவிய சேமிப்புகளிலும், முதலீடுகளிலும் ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தி நெருக்கடிக்கு வழிவகுத்த காரணியாக இருந்தது என வெளிப்படையாகக் குறிப்பிட்டார். பேங்கர் திட்டத்தை அவர் பரிந்துரைத்தார். நிதி நெருக்கடிக்குத் தீர்வாக சர்வதேச நாணய நிதியம் சிறப்பு வரைவு உரிமைகளை உலகளாவிய இருப்பு நாணயமாக்க வேண்டும் என்று பரிந்துரைத்தார். ஜி-20 நாடுகளின் கூட்டு சந்திப்பிலும் இது குறித்து விவாதிக்கப்பட்டது. சர்வதேச நாணயச் சீர்திருத்தம் குறித்த ஒரு முன்வரைவை 2008இல் பொருளாதார நிபுணர்கள் கிரீன்வால்ட், புரூஸ், ஜோசப் ஸ்டிகிலிட்ஸ் ஆகியோர் வெளியிட்டுள்ளனர். 2009 மார்ச்சில், அமெரிக்கக் கருவூலத்தின் செயலாளர், திமோதி கீத்னர், சர்வதேச நாணய நிதியத்தின் உலகளாவிய நாணயத்தை நோக்கி நகர்வதற்கான யோசனையைத் திறந்த மனதுடன் ஏற்றுக் கொள்வதாகக் குறிப்பிட்டு அங்குள்ளவர்களை வியப்பில் ஆழ்த்தினார். 2010இல் பீட்டர் பி கென்னென் என்ற பொருளாதார அறிஞர் மாற்றீட்டுக் கணக்கு திட்டம் குறித்து மேற்கொண்ட ஆய்வில் டாலரிலிருந்து, படிப்படியாக மாறுவதற்கு 2, 3 மாற்றீட்டு சுற்றுகள் தேவைப்படலாம், பத்தாண்டுகளில் அதை செய்யமுடியும் என்று குறிப்பிட்டுள்ளார். இதற்கான செலவு ஒருவேளை அதிகமானாலும் கூட பகிர்வு முறையின் மூலமோ, இதற்கான ஆண்டுக்

கட்டணம் வசூலிப்பதன் மூலமோ செலவை பெரிதும் குறைக்க முடியும். டாலரிலிருந்து திடீரென மாறுவது அதனைக் கணிசமாக மதிப்பிழக்கச் செய்யும் என்பதால், ஜோ சியாச்சுவான் அவர்களின் ஆலோசனையைக் கருத்தில் கொண்டு மாற்றீட்டுக் கணக்குத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து மீண்டும் பரிசீலிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். 2010இல் சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை ஒன்றிலும் சிறப்பு வரைவு உரிமைகளை இருப்பு நாணயமாக்க வேண்டும் அல்லது பேங்கர் போன்ற தேசங்கடந்த நாணயத்தை உருவாக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது வளரும் நாடுகள் தம் நாணயப் பரிவர்த்தனை மதிப்பைப் பாதுகாக்க அதிகளவில் அந்நியச் செலவாணி இருப்புகளை, குறிப்பாக டாலர் இருப்புகளை வைத்திருக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளன. இது தேவையில்லாத கூடுதல் நிதிச் சுமையாக அந்நாடுகளை அழுத்துகிறது. டாலருக்கெதிரான நாணயங்களின் மதிப்பு இழப்பால் பெற்ற கடனிலிருந்து மீள முடியாதவாறு கடன் சுமையும் அதிகரிக்கிறது. பேங்கர் போன்ற ஒரு நாடுகடந்த நாணயத்தை உலகப் பணமாக்கினால் இப்பிரச்சினைகளைக் குறைக்க முடியும். டாலரை வெளியிடுவதால் பெறும் இலாபம் முழுவதும் அமெரிக்காவிற்கே செல்கிறது. நாடுகடந்த நாணயம் உருவானால் அதன் பலனை அனைத்து நாடுகளும் பகிர்ந்து கொள்ள முடியும். ஆனால் ஜனநாயகமற்ற சர்வதேச நாணய நிதிய அமைப்பின் மூலமே அப்படிப்பட்ட மாற்றத்தைக் கொண்டுவர முடியுமா? நாடுகளிடையே சமமான வாக்குரிமை இல்லாத போது எந்த மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்றாலும் 85% ஒப்புதல் பெற வேண்டும் என்ற விதிமுறை சமூகநீதி அடிப்படையிலான முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடுவதற்கான கருவியாகவே செயல்படுகிறது. .சர்வதேச நாணய நிதியம் உருவாகி 76 ஆண்டுகள் ஆகி விட்டன. நிதிப் பற்றாக்குறை ஏற்படும் நாடுகளுக்கு சர்வதேச நாணய நிதியம் டாலரில்தான் கடன் வழங்குகிறது. கடனுக்கான நிபந்தனைகளாக நவீன தாராளமய சிக்கன நடவடிக்கைகளை அந்நாடுகளின் மீது திணித்து மீளாக் கடனிலைக்குத் தள்ளுகிறது. நவீன தாராளமய ஒடுக்குமுறை அமைப்பாக உலக நாடுகளிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அதிகரித்ததிலும், வளரும் நாடுகளின் பொருளாதாரங்களை சீரழித்ததிலும் முதன்மைப் பங்காளராகச் செயல்பட்டு வரும் சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் நல்மாற்றம் ஏற்படும் என நம்பி ஏமாந்து போகலாகுமா?

2010இல் சிறப்பு வரைவு உரிமைகளின் ஒதுக்கீடுகளை அதிகரிப்பதற்கான ஒப்புதல் பெறப்பட்ட

போதும், அமெரிக்க காங்கிரஸில் 5 ஆண்டுகள் கழித்து 2015இலே தான் அதற்கான ஒப்புதல் கிடைத்தது. எனும் போது டாலருக்கு மாற்றாக வேறு நாணயத்தை உருவாக்குவதற்கு, அமெரிக்கா நல்லெண்ண அடிப்படையில் ஒப்புதல் அளிக்கும் என முட்டாள்தனமாகக் காத்திருக்க முடியுமா? 2020 ஏப்ரலில் கோவிட்-19 பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடுகளுக்கு நிவாரணங்கள் அளிக்கும் விதமாக வழக்கத்திற்கு மாறாக சர்வதேச நாணய நிதியமே 50,000 கோடி டாலர் மதிப்பிற்கு சிறப்பு வரைவு உரிமைகளை அதிகப்படுத்த வேண்டும் என்ற முன்மொழிவை ஏற்ற போதும், பரவலான ஆதரவு இருந்த போதும், அமெரிக்கா தன் வீட்டோ உரிமையால் அத்திட்டத்தைச் செயல்படுத்த விடாமல் தடுத்ததும் அதை இந்தியாவும் ஆதரித்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கோவிட்-19க்கு பின் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் மீண்டும் ஒரு பிரட்டன்வுட்ஸ் தருணத்தைச் சந்திப்பதாக சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இந்தப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான அமைப்பு மாற்றம் குறித்தோ, குறைந்தபட்சம் அமைப்பில் ஏற்படுத்த வேண்டிய சீர்திருத்தம் குறித்தோ அவர் எதுவும் கூறவில்லை. சீனா அமெரிக்காவைக் காட்டிலும் பொருளாதார வல்லமை பெற்றுள்ளதாக சர்வதேச நாணய நிதியமே குறிப்பிட்டுள்ளது. அதனால் சீனா தனக்கான வாக்குரிமையை அதிகப்படுத்தவும் தலைமையை பெய்ஜிங்கிற்கு மாற்றவும் கோருவதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஆனால் அதைச் செயல்படுத்தவும் 85% ஒப்புதல் பெற வேண்டும், அமெரிக்கக் காங்கிரஸிலும் ஒப்புதல் பெறவேண்டும். இந்த மாற்றத்தை உடனடியாக வர விடாமல் அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான் ஆகிய நாடுகள் தடுக்கலாம் அல்லது தள்ளிப் போடலாம். சீனா ஒரு மாற்றுத் திட்டத்தையும் முன்னெடுக்கலாம். 2018இல் வெளியான உலகப் பொருளாதாரம் குறித்த ஜெனிவா அறிக்கையில் இது குறித்த சாத்தியப்பாடு முன்னோக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஒருவேளை சீனாவே உலக அளவில் பொருளாதாரத் தலைமையை ஏற்றுக் கொண்டாலும் --- அது பிரிட்டன், அமெரிக்காவின் வழியில் செல்லாது என்றே வைத்துக் கொண்டாலும் கூட --- அதன் சர்வதேசப் பொறுப்பை எந்த அளவிற்கு ஜனநாயகப் பூர்வமாக செயல்படுத்தும் என்பதும் கேள்விக்குறியாகத்தான் உள்ளது. ஏனென்றால், உலகையே அரவணைக்க நீளும் நேயக் கரங்களுடைய சின்னஞ்சிறு கியூபாவின் அளவிற்கு, மாபெரும் சீனாவின் சர்வதேசியவாதம் பரந்து விரியக் காணவில்லையே!

(தொடரும்)

## சூழலியல் வகுப்பு - 1

**சமந்தா**

# கொள்ளை நோய்களின் காலத்தில்…

நம்மைச் சுற்றியுள்ள இயற்கைச் சூழலையும் அதிலுள்ள உயிரினங்களுக்கிடையிலான உறவுகளையும் பற்றி அறிந்து கொள்ளும் துறையாக சூழலியல் உள்ளது. சூழலியலின் முக்கியத்துவம் உணரப்படாமல் பெருமளவில் புறக்கணிக்கப்பட்ட துறையாகவே இருந்து வந்துள்ளது. சூழலியலை ஒற்றைத் துறையாகக் குறுகிய கண்ணோட்டத்திலும் பார்க்க முடியும். இல்லையெனில், மற்றத் துறைகளோடு அதற்குள்ள இடைத் தொடர்புகளையும் ஒருங்கிணைத்து விரிந்த கண்ணோட்டத்திலும் புரிந்து கொள்ள முடியும். மனிதர்கள் எளிதில் புரிந்து கொள்வதற்கு வசதியாகத் துறைகளை உயிரியல், சூழலியல், வேதியியல் எனப் பிரித்து வகைப்படுத்தியுள்ளோம், எதார்த்தத்தில் அவை அவ்வாறு பிரிந்திருப்பதில்லை. அவை ஒருங்கிணைந்தே செயல்பாட்டில் உள்ளன. நாம் துறைகளைப் பிரித்துத் தனித்து வைத்துப் புரிந்து கொள்ளும் போக்கே அவற்றில் ஏற்படும் பிரச்சினைகளுக்கான நீடித்த தீர்வுகளைப் பெறுவதற்குத் தடையாக அமைந்துள்ளது. இன்று கோவிட்-19 நெருக்கடியால் உலக மக்கள் யாவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இது ஒரு மருத்துவம் சார்ந்த சுகாதார பிரச்சினை மட்டுமல்ல, சூழலியல் பிரச்சினையாகவும் உள்ளது, பொருளாதாரப் பிரச்சினையாகவும் உள்ளது, சமூகப் பிரச்சினைகளால் ஏற்கெனவே பாதிக்கப்பட்டவர்களே இதனால் மேலும் அதிகமாகப் பாதிக்கப்படுவதால் இது ஒடுக்கப்பட்டவர்களின் பிரச்சினையாகவும், விளிம்புநிலை மக்களின் பிரச்சினையாகவும், சாதிப் பிரச்சினையாகவும் சமூக நீதிப் பிரச்சினையாகவும் உள்ளது. சூழலியல் பிரச்சினை ஒரு அரசியல் பிரச்சினையாகவும் உள்ளது, பிரச்சினைகளை அரசியலாக்க வேண்டாமே என்று பொதுவாகக் கூறப்படுகிறது, எல்லாப் பிரச்சினையிலும் அரசியல் உள்ளது என்பதைப் புரிந்து கொள்ளாமல் தீர்வுகளை நோக்கி நாம் முன்னேற முடியாது. ஒருங்கிணைந்த புரிதலின் மூலமே போராட்டங்களையும் ஒருங்கிணைத்து வளர்த்தெடுக்க முடியும். நாம் பல்வேறு கோரிக்கைகளுக்காகப் போராட்டங்களை முன்னெடுக்கிறோம், அவை சூழலியல் பிரச்சினைகளாக இருக்கலாம், ஊதிய உயர்வுப் பிரச்சினைகளாக இருக்கலாம், கருத்துரிமைகளுக்கான, பணி நிரந்தரம் செய்வதற்கான போராட்டங்களாக இருக்கலாம், ஆனால் அவற்றை ஒருங்கிணைத்து அரசியல் போராட்டங்களாக வளர்த்தெடுக்காமல், தற்காலிகத் தீர்வுகளுடன் நிறைவடைந்தால் அதுவே நிரந்தரத் தீர்வுகளுக்கான பாதையை நாம் ஒருபோதும்

அடைய முடியாத வண்ணம் தடை போடுகிறது. சூழலியல் குறித்த ஒருங்கிணைந்த புரிதலின் மூலமே சூழலியல் பிரச்சினைகளுக்கான நீடித்த தீர்வுகளை நாம் அடைய முடியும் என்பதால் விரிந்த கண்ணோட்டத்துடன் சூழலியலை முழுமையாகப் புரிந்து கொள்ளும் முயற்சியை தொடங்குவோம் வாருங்கள்.

இன்று சுற்றுச்சூழல் நிபுணர்கள் ”நாம் கொள்ளை நோய்களுக்கான காலக்கட்டத்திற்கு வந்துள்ளோம், கோவிட்-19 முடிவல்ல, தொடக்கம் மட்டுமே” என எச்சரித்துள்ளார்கள். காடுகளில் மரங்கள் பெருமளவில் வெட்டப்பட்டு வனச் சூழல் அழிக்கப்படுவதால் அங்கிருந்து சிந்திப் பரவும் (spill over) நோய்க் கிருமிகளின் மூலமாகவே மனிதர்களுக்குப் புதிய தொற்று நோய்கள் ஏற்படவும், அவை கொள்ளை நோய்களாகப் பரவவும் செய்கின்றன. இதைப் புரிந்து கொள்ள ஒரு வரலாற்று உதாரணத்தை எடுத்துக் கொள்ளலாம். தொற்று நோய்களுக்கும் முதலாளித்துவத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. முதலாளித்துவக் காலனியாதிக்கத்தில்தான் பிளேக், பெரியம்மை, காலரா, டைபாய்டு போன்ற தொற்று நோய்கள் பெரிதும் பரவின. காலனியாதிக்கத்தின் போது கொலம்பஸும் அவரது படையும் அமெரிக்காவில் உள்ள பூர்வக்குடி மக்களிடமிருந்து நிலங்களையும், அவர்களது அனைத்து உரிமைகளையும் பறித்தார்கள், இதே போல் தளபதி குக்கும் அவரது படைகளும் ஆஸ்திரேலியாவில் பூர்வக்குடி மக்களின் நிலங்களையும், உரிமைகளையும் பறித்தார்கள். இதனால் அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் இன அழிப்பால் 90% பூர்வக் குடிமக்கள் அழிந்து போனார்கள். ஆனால் கொலம்பஸூம், குக்கும் அவரது படையினரும் அவர்களை அறியாமலே பூர்வக் குடிமக்களுக்குப் பெரியம்மை, பிளேக், காலரா, டைஃபாய்டு போன்ற நோய்களைப் பரப்பினர். அங்கிருந்த பூர்வக்குடிகளுக்கு அதற்கு முன் பெரியம்மை, பிளேக், காலரா, டைஃபாய்டு போன்ற நோய்களின் தாக்கம் ஏற்பட்டிருக்கவில்லை என வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள். நகர்ப்புறத்திலிருந்து வனப் பகுதிகளுக்குள் நோய்க்கிருமிகள் சிந்திச் சிதறியதால் இந்நோய்த் தாக்கம் ஏற்பட்டது. இதை இன்னும் விரிவாக புரிந்து கொள்வோம்.

**<u>நுண்ணுயிரிகளின் உலகம்:</u>**

நுண்ணுயிரிகளின் உலகுக்குச் செல்லாமல் தொற்று நோய்களை நம்மால் சரியாகப் புரிந்து கொள்ள முடியாது. அங்கிங்கெனாத படி பூமியெங்கும் நிறைந்து வாழ்பவையாக

நுண்ணுயிரிகள் உள்ளன. நம் பூமிக்கு வயது 450 கோடி ஆண்டுகள் அதில் 360 கோடி ஆண்டுகளாக நுண்ணுயிரிகள் வெற்றிகரமாக வாழ்ந்து வருகின்றன. தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் என்பார்களே, அது நுண்ணுயிரிகளுக்கே மிகச் சரியாகப் பொருந்தும். எரிமலைக் குழம்பிலும், நிரந்தர உறைபனியிலும் கூட வாழக் கூடிய சர்வ வல்லமை படைத்தவையாக நுண்ணுயிரிகள் உள்ளன. பூமியில் மனிதனின் கால்தடம் படாத பகுதிகள் இருக்கலாம், ஆனால் நுண்ணுயிரிகள் இல்லாத இடமே இல்லை என்று சொல்ல முடியும்.

எல்லாம் அவன் செயல் என்பார்கள், பல்வேறு செயல்களுக்குக் கண்ணுக்குத் தெரியாத நூண்ணுயிரிகளே காரணமாகவும் உள்ளன. மழை வரும் போது வரும் மண் வாசனை பிடிக்காதவர் எவரும் உண்டா? அதற்கு ஆக்டினோமைசீட்ஸ் என்ற பாக்டீரியாக்களே காரணமாயுள்ளன. இட்லி மாவு புளிப்பதற்கு உங்கள் கைகளிலுள்ள லாக்டோ பேசிலஸ் வகை பாக்டீரியாக்கள்தான் காரணம். புரொபியனி பாக்டீரியம் அக்னெ உங்கள் கன்னங்களைக் கிள்ளுவதால்தான் பரு வருகிறது இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். இந்த உலகில் கிட்டத்தட்ட $10^{32}$ வைரஸ்கள் உள்ளன (10க்குப் பின் 32 பூஜ்ஜியங்களை சேர்க்கவும்( .அவற்றில் எல்லாமே மனிதனுக்குத் தீங்கு விளைவிப்பவை அல்ல. இது வரை 1000 முதல் 2000 வரையிலான வைரஸ் கிருமிகளை ஆய்வு செய்து விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இன்னும் கண்டறியப்பட வேண்டியவை பல உள்ளன. பாக்டீரியாக்களை விட வைரஸ்கள் மேலும் நுண்ணியவை என்பதால் அவற்றை ஆராய்வது கடினமான பணி.

நம் மனித உடலே பாக்டீரியாக்கள் வாழும் உயிர்ச் சூழலாக உள்ளது. மனித உடலில் உள்ள செல்களின் எண்ணிக்கை 37 இலட்சம் கோடி. அதை விடப் பத்து மடங்கு அதிக எண்ணிக்கையுள்ள பாக்டீரியாக்கள் மனித உடம்பில் குடியிருக்கின்றன. நீங்கள் அறியாமலே அவற்றிற்கு வாழ்விடம் அளித்து வருகிறீர்கள். மனித உடலில் உள்ள மொத்த மரபணுவில் (டி.என்.ஏ) மனித மரபணுவைக் காட்டிலும், பாக்டீரியாக்களின் மரபணுக்களின் அளவு 100 மடங்கு அதிகமாக உள்ளது. மனித உடலில் உள்ள மொத்த பாக்டீரியாக்களை எடை போட்டால் 1.5 கி.கி. எடை இருக்கும், கிட்டத்தட்ட நம் மூளையின் அளவிற்கு வரும். மனித உடலில் ஈஸ்ட் போன்ற பூஞ்சையினங்களும் இருக்கின்றன. மனித உடலில் உள்ள நுண்ணுயிரிகளை இயல் உயிர் என்ற பொருளில் 'நார்மல் ஃப்ளோரா' என அழைக்கப்படுகிறது. ஒருவர் உடலில் உள்ள

“நார்மல் ஃப்ளோரா” பிறருக்கு உள்ளதை போல் ஒத்த வகையுடையதாக இருந்த போதிலும் மாறுபாடுகளையும் கொண்டிருக்கும். இரட்டையர்களுக்குள் அது பெருமளவுக்கு ஒத்த தன்மையுடையதாக இருக்கலாம் என்ற போதும் 100 சதவீதம் முற்றிலும் ஒத்ததாக இருக்காது. நாம் எந்தச் சூழலில் வசிக்கிறோம், என்ன உணவு உண்கிறோம் என்பதைப் பொறுத்து நம் நார்மல் ஃப்ளோரா ஒருவருக்கொருவர் வேறுபடலாம். நுண்ணுயிரிகளின் தொகுப்பு, வெவ்வேறு பகுதியில் வாழ்பவர்களுக்கிடையே மாறுபாடுகளைக் கொண்டிருக்கலாம். மனித உடலில் பல நன்மை செய்யும் பாக்டீரியாக்கள் உள்ளன. இவை நோய்க் கிருமிகள் தாக்காத வண்ணம் உடலுக்கு ஒரு பாதுகாப்புக் கவசமாக அமைந்துள்ளன. இவை நோய் எதிர்ப்புச் சக்தியைத் தூண்டுவதால், இவற்றிற்கெதிரான எதிர்ப்புப் புரதங்கள் (‘ஆண்டிபாடி’) உடலில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவை நம் உடலிலிருந்து ஊட்டத்தைப் பெறுகின்றன. மனித உடலால் தயாரிக்க முடியாத நுண்ணூட்டங்களான விட்டமின் பி12, விட்டமின் கே ஆகியவற்றை பெருங்குடலில் உள்ள பாக்டீரியாக்கள் தயாரித்து அளிக்கின்றன. உடலிலே குடல் பகுதியில்தான் அதிக எண்ணிக்கையில் பாக்டீரியாக்கள் காணப்படுகின்றன. குடல்வாழ் பாக்டீரியாக்கள் என்ற பொருளில் ‘எண்டிரோ பாக்டீரியேசியே’ என்றொரு பாக்டீரியக் குடும்பமே உள்ளது. மனிதர்களின் சீரண மண்டலம் சீராக செயல்படுவதற்கு நுண்ணுயிர்த் தொகுப்பின் சமநிலையைக் காப்பது மிகவும் அவசியம். மனிதர்கள் பாக்டீரியாக்களைக் கொல்லும் எதிர்ப்பு மருந்துகளை (‘ஆண்டிபயாடிக்’) தொடர்ந்து உட்கொண்டால் நமது உடலிலுள்ள நுண்ணுயிர்களின் சமநிலை பாதிக்கப்படும், செரிமானக் கோளாறு ஏற்படும். அதனால் நோய் எதிர்ப்புச் சக்தி குறையும் போக்கும் ஏற்படுகிறது, அதனால் எளிதாக நோய்த் தாக்கம் ஏற்படலாம். ஒரு உதாரணத்திற்கு கூறுவோமானால், நல்ல உடல்நிலையில் 10,000 கிருமிகள் தாக்கும் போதுதான் நோய்த் தாக்கம் ஏற்படும் என்ற நிலையானது நோய் எதிர்ப்புச் சக்திக் குறைவினால் 100 நுண்ணுயிரிகள் தாக்கும் போதே நோய்த்தொற்று ஏற்படும் அபாயத்தை ஏற்படுத்துகிறது. தவிர்க்க இயலாத நேரங்களில் மட்டும் நோய் எதிர்ப்பு ‘ஆண்டிபயாடிக்’ மருந்துகளை தேவைக்கதிகமாக இல்லாமல் உட்கொள்வது நலம் பயக்கும்.

மனித உடலில் வாய், தோல், கால் என ஒவ்வொரு குறிப்பிட்ட பகுதியையும் வாழிடமாகக் கொண்ட பாக்டீரியாக்கள் அவை வாழுமிடத்தில் நோய்த் தாக்கம் ஏற்படுத்துவதில்லை. ஆனால் அவை இயல்பாக மனித உடலில் இருக்கும் இடங்களை விட்டு

வேறு பகுதிகளுக்குச் சென்றால் நோய்த் தாக்கும் ஏற்படுத்துகின்றன. மனித உடலில், கீழ் சுவாச மண்டலம், இரத்த ஓட்ட மண்டலம், மூளை, தண்டுவடம், தசை, கர்ப்பப் பை ஆகிய பகுதிகள் நுண்ணுயிரிகள் இல்லாத பகுதிகளாக உள்ளன. அதனால்தான் தாயின் கர்ப்பப் பையில் நோய்த் தொற்று ஏற்படாமல் குழந்தை பாதுகாப்பாக வளர முடிகிறது. குழந்தை தாயின் வயிற்றிலிருந்து பிரசவமான பிறகே நுண்ணுயிரிகளின் அறிமுகம் ஏற்படுகிறது. சுகப் பிரசவத்தில் பிறந்த குழந்தைகள் நோய் எதிர்ப்புச் சக்தியை அளிக்கும் விதமான 'நார்மல் ஃப்ளோரா'வை, நுண்ணுயிர்த் தொகுப்பைத் தாயிடமிருந்து பெறுகிறது. சிசேரியன் மூலம் பிறந்த குழந்தைகளுக்கு அந்த வாய்ப்புகள் இல்லாததால் தாயிடமிருந்து அதைப் பெறும் விதமான மருத்துவ முறைகள் சில இடங்களில் கடைப்பிடிக்கப்படுகின்றன.

ஒரு மனிதர் என்பவர் வெறும் மனிதர் மட்டுமல்ல, நுண்ணுயிர்கள் வாழும் உயிர்ச் சூழலாகவும் உள்ளார். அவரிடமிருந்து நுண்ணுயிரிகள் அனைத்தும் முழுமையாகப் பிரித்தெடுக்கப்படுமானால் அவரால் இயல்பாக, அவராக வாழ முடியாது. இது பல இலட்சம் ஆண்டுகளாகத் தொடரும் இணை பரிணாமத்தின் விளைவாக மனிதர்களுக்கு ஏற்றவாறு நுண்ணுயிர்களும், நுண்ணுயிரிகளும் தங்களைத் தகவமைத்துக் கொண்டு பரிணமித்துள்ளன. இவ்வாறு ஒற்றை மனிதரே கோடிக்கணக்கான பல்லுயிரிகளின் வாழிடமாக உள்ளார் என்றால், காடுகள் எத்தனை விதமான பல்லுயிர்களுக்கான வாழிடமாக இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள், அதனால்தான் காடுகள் அழிக்கப்படும் போது பல்லுயிரிகள் அழிந்து போகின்றன, பன்மைத்துவம் குறைந்து போகிறது.

இப்பொழுது நாம் கொலம்பஸ் படையும், குக் படையும் அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் ஏற்படுத்திய தாக்கம் குறித்து முன்சொன்ன கருத்திற்கு திரும்பிச் செல்வோம். நகரமயமான சூழலிருந்து வந்த கொலம்பஸ், குக் ஆகியோரின் உடலிலுள்ள நுண்ணுயிர்த் தொகுப்பு, அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் பூர்வக்குடிகளின் உடலில் காணப்படும் நுண்ணுயிர்த் தொகுப்பைக் காட்டிலும் வேறுபட்டு இருந்ததாலும், பூர்வக்குடிகளுக்குப் பரிச்சயம் இல்லாத புதிய நுண்ணுயிர்களை அங்கு அறிமுகமப்படுத்தியதாலும், அதற்கெதிரான நோய் எதிர்ப்புச் சக்தி பூர்வக்குடியினருக்கு இல்லாததாலும் அவர்கள் பெரியம்மை, டைஃபாய்டு ஆகிய நோய்களின் தாக்கம் ஏற்பட்டுக் கொத்து கொத்தாய்ச் செத்து மடிந்தனர். இவ்வாறு ஒரு

சூழலில் உள்ள நோய்க் கிருமிகள் இன்னோரு சூழலுக்குச் சிந்திப் பரவுவதால் நோய்த் தாக்கம் ஏற்படுகிறது. நகர்ப்புறத்தின் கிருமிகள் வனப் பகுதிகளுக்குள் அறிமுகப்படுத்தப்பட்டதால் நோய்த் தாக்கம் ஏற்பட்டதல்லவா, அதே போல் வனப் பகுதியிலுள்ள நோய்க்கிருமிகள் மனித வாழிடங்களில் சிந்திப் பரவுவதால் தொற்று நோய்கள் ஏற்படும். இவ்வாறுதான் புதிய கொரோனா வைரஸ் கொள்ளை நோயாகப் பரிணமித்துள்ளது. வனச் சூழலை அழிக்கும் போது வன விலங்குகளின் உடலிலிருந்து நோய்க் கிருமிகள் மனித சமூகத்தை தாக்குவதற்கான வாய்ப்புகள் அதிகமாகின்றன, அதுவே புதிய புதிய தொற்று நோய்கள் ஏற்படக் காரணமாகிறது. விலங்குகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவும் நோய்கள் ஸுனோடிக் நோய்கள் என அழைக்கப்படுகின்றன (zoonotic, zoo-விலங்கு). பன்றிக் காய்ச்சல் ஏற்படுத்தும் எச்1என்1 வைரஸ், எபோலா வைரஸ், சிகா வைரஸ் ஆகியவை விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவிய கொள்ளை நோய்களாகும். பனை எண்ணெய் தயாரிப்பிற்காக வனங்கள் அழிக்கப்பட்ட போது பழந்திண்ணி வெளவால்களின் மூலமாகவே எபோலா வைரஸ் பரவியுள்ளது. நி்ஃபா வைரஸும் வெளவாலின் மூலமாகவே பரவியது.

புதிய வகைக் கொள்ளை நோய்கள் வருவதற்குக் காடுகளை அழிப்பதே முக்கியக் காரணமாக உள்ளது. அங்குள்ள வன விலங்குகளின் வாழிடங்கள் அழிக்கப்படுவதால் அவற்றில் வன விலங்குகளை ஓம்புயிரிகளாகக் கொண்ட நோய்க் கிருமிகள் தகவமைப்பின் மூலம் மனிதர்களைத் தம் ஓம்புயிரிகளாக மாற்றிக் கொள்கின்றன. பூமியை மனித ஆதிக்கம் கொண்ட பகுதியாக மாற்றியதால் நோய்க் கிருமிகள் மனிதர்களிடமிருந்து உணவூட்டம் பெறுமாறு தங்களைத் தகவமைத்துக் கொண்டு நோய்த் தாக்கம் ஏற்படுத்துகின்றன. நுண்ணுயிரிகளால் மற்ற உயிரிகளைக் காட்டிலும் மிக வேகமாகத் தகவமைத்துக் கொள்ள முடியும். இப்பொழுது உலகமயமாக்கப்பட்ட விமானப் போக்குவரத்தின் மூலமும் ஒரே நாளிலே கொள்ளை நோய்கள் உலகெங்கும் எளிதில் பரவுவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது. இயல்பாக வனங்களுக்கு உள்ள புவியியல் எல்லைகளைத் தாண்டி அவ்விலங்கினங்கள் வருவதில்லை, ஆனால் காடுகள் அழிக்கப்படும் போது, இந்தப் புவியியல் எல்லைகள் தகர்க்கப்படுகின்றன. அதுவே மனிதர்களுக்கும் வன விலங்குகளுக்கும் இடையிலான இடைவெளி குறைந்து தொடர்புகளை அதிகப்படுத்தி நோய் பரவக் காரணமாகிறது.

மக்களடர்த்தி அதிகமான, சுகாதாரமற்ற சூழலில் வசிக்கும் போது அதுவே நோய்த் தொற்று

ஏற்படுவதற்கும் பரவுவதற்கும் முக்கியக் காரணமாக உள்ளது. இவ்வுலகில் நிலம் ஒப்பளவில் குறைவாகத்தான் உள்ளது. இயற்கைச் சூழல்களை அழித்து நகர மயமாக்கமும் தொழில் மயமாக்கமும் தொடர்ந்து விரிவாக்கம் செய்யப்படுவதால் நிலப் பற்றாக்குறை ஏற்படுகிறது. இலாப வெறி கொண்ட பெருநிறுவனங்களும், பெருஞ்செல்வந்தர்களும் பெரும்பாலான நிலங்களை ஆக்கிரமித்து சூழலை அழித்து வருகிறார்கள். இதனால் பெரும்பாலான ஏழை எளிய மக்கள் சுகாதாரமற்ற நெருக்கடியான சூழலில் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். மக்கள் அனைவருக்கும் சரிவிகிதமான உணவும், சுகாதாரமான சுற்றுச் சூழலும் வசிப்பிடமும் இருந்திருக்குமானால், கொரோனா வைரஸால் மக்கள் இந்தளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்க மாட்டார்கள். ஆனால் சுகாதாரத் துறையிலிருந்து மக்களின் அடிப்படை உரிமைகளை நிறைவேற்ற வேண்டிய எல்லா சமூகத் துறைகளுக்கும் அரசின் நிதி ஒதுக்கீடுகள் நாளுக்கு நாள் குறைக்கப்பட்டு வருகின்றன. இன்று காற்று மாசுபாட்டினால் உலகளவில் அதிகம் பாதிக்கப்பட்ட நாடாக இந்தியா உள்ளது, ஒரு மாதம் கூட ஆகாத ஒரு இலட்சம் குழந்தைகள் காற்று மாசுபாட்டால் இறந்துள்ளனர். இன்று ஆட்சியிலுள்ள முதலாளித்துவ அமைப்பு மக்களின் சுகாதாரமான நல்வாழ்வுக்கான அனைத்து வாய்ப்புகளையும் தட்டிப் பறித்து சமூகத்தைத் தொற்று நோய்களின் அடைகாப்பகமாக மாற்றியுள்ளது.

பெரும் தொழிற்பண்ணைகளில் சுகாதாரமற்ற சூழலில் வளர்க்கப்படும் கால்நடைகளும் பறவைகளும் தொற்று நோய்களின் அடைகாப்பகங்களாக செயல்படுகின்றன. சீனாவின் வூஹான் பகுதியில் இருந்த உயிர்ச் சந்தையின் மூலமாகவே தொற்று நோய் பரவியதால், உயிர்ச் சந்தைகள் அபாயகரமானவை அவற்றைத் தடை செய்ய வேண்டும் என்ற கருத்து பரவலாகக் காணப்படுகிறது. வளரும் நாடுகளில் இப்படிப்பட்ட திறந்த வெளி இறைச்சிக் கடைகளும் உயிர்ச் சந்தைகளும் அதிகம் காணப்படுகின்றன. அவை பாதுகாப்பற்றவை என்பதும் அவற்றின் மூலம் நோய் எளிதில் பரவுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்பதும் உண்மைதான். வளர்ந்த நகரங்களில் இறைச்சியானது புட்டிகளில் அடைக்கப்பட்டு 'டின் ஃபுட்', 'கேண்டு ஃபுட்' என்று விற்கப்படுகிறது. பெரும் தொழிற்பண்ணைகளிலிருந்து கிடைக்கும் அவை முற்றிலும் பாதுகாப்பானவையா, சுகாதாரமானவையா என்றும் கேட்க வேண்டும். ஏனென்றால் பெரும்பண்ணைகளில் பெரும் எண்ணிக்கையில் ஆடு மாடுகள், கோழிகள் ஒரு சிறிய இடத்திற்குள் சுகாதாரமற்ற விதமாக அடைக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன. அவ்விலங்குகளுக்கு ஏற்படும் நோய்த் தாக்கத்தைத் தடுக்கவும், அவற்றின் உடல் எடையை அதிகரிப்பதன் மூலம்

இலாபத்தைப் பெருக்கவும் அதிக அளவில் ஆண்டிபயாடிக் அளிக்கப்படுகிறது. இதனால் அவற்றை உணவாக எடுத்துக் கொள்பவர்களுக்கும் ஒவ்வாமை, ஆஸ்துமா உடல் எடை கூடுதல் போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. தற்போது டென்மார்க்கில் கம்பளிக்காகப் பெரும் பண்ணைகளில் வளர்க்கப்படும் ஒருவகைக் கீரிகளின் (Minks) மூலம் வேறொரு புதிய வகை கொரோனா வைரஸ் மனிதர்களுக்குப் பரவி வருகிறது.

இயற்கையாக வளரும் தாவர, விலங்குகள் பலவகையில் பன்மைத்துவத்துடன் உள்ளன. அவ்வாறு இருக்கும் போது நோய்த் தொற்று எங்கும் பரவாதவாறு தடுக்கப்படுகிறது. ஆனால் பண்ணைகளில் ஒரேவகையான விலங்குகளையே வளர்க்கிறோம், இதுவே ஒரு விலங்கிற்கு ஏற்படும் தொற்று மற்றவைகளுக்கும் எளிதில் பரவக் காரணமாக உள்ளது. பெரும் எண்ணிக்கையில் பறவைகளையும், விலங்குகளையும் சுகாதாரமற்ற சூழலில் வளர்க்கும் போது அதுவே தொற்று நோய்களுக்கான அடைகாப்பமாக மாறுகிறது. ஒரே வகைப் பயிர்களையும், விலங்குகளையும் பெரும் எண்ணிக்கையில் வளர்க்கும் ஒற்றைப் பயிர்முறை / வளர்ப்புமுறை தொற்று நோய்கள் எளிதாகப் பரவுவதற்குக் காரணமாகிறது. தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்கும் விதமாகப் பல்வகையான தாவரங்களையும், பயிர்களையும் வளர்க்கும் பன்மைத்துவ விவசாய முறைகளையும், வளர்ப்பு முறைகளையையும் நடைமுறைப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும்.

வனவிலங்குகளை வேட்டையாடுவதும், சட்டத்திற்கு புறம்பாக அவற்றைக் கடத்தி விற்பனை செய்வதும், வனவிலங்குகளின் இறைச்சியை உணவாகக் கொள்வதும் தொற்றுநோய்கள் பரவக் காரணமாகிறது. எய்ட்ஸ் நோயை ஏற்படுத்தும் எச்.ஐ.வி வைரஸ், குரங்கு மாமிசம் சாப்பிட்டதால் குரங்கிடமிருந்த சிமியன் வைரஸ் மூலமாக உருவானது. புதிய கொள்ளை நோய்கள் உருவாவதைத் தடுப்பதற்கு வனவிலங்குகள் வேட்டையாடப்படுவதைத் தடுக்க வேண்டும். சூழலியாளர்கள் அழியும் வனங்களை உடனடியாக மறுவனப்படுத்த வேண்டும் என்கிறார்கள், அதன் மூலமே விலங்குகளின் வாழ்விடமும் காக்கப்பட்டு புதிய தொற்று நோய்கள் பரவுவதைத் தடுக்க முடியும் என்கிறார்கள் காடுகளுக்கு இடங்களை ஒதுக்குவதும், காடுகள் வளர்வதற்கான சூழலை ஏற்படுத்துவதும் நாம் சந்திக்கும் எண்ணற்ற சூழலியல் பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும்.

(தொடரும்)

## தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

பொதுச்செயலாளர்: தோழர் ***தியாகு***

அன்பிற்குரியீர்! வணக்கம்.

தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் அரசியல்-கருத்தியல் நிலைப்பாடுகளையும் நடைமுறைச் செயல்பாடுகளையும் தொடர்ந்து கவனித்து வருவீர்கள் என நம்புகிறேன். தமிழ்த் தேசிய விடுதலைக்கும் சமூக நீதிக்குமான கொள்கைவழியைத் தொடர்ந்து பற்றி நிற்கிறோம். பதவி அரசியலைப் புறந்தள்ளிப் போராட்ட அரசியலை உறுதியாகக் கடைப்பிடிக்கிறோம். மக்கள் நலன் கருதி ஒன்றுபட்ட இயக்கங்களில் தொடர்ந்து எங்களால் இயன்ற பங்களிப்பைச் செய்து வருகிறோம். உணர்வு அரசியலில் மயங்காமல் அறிவார்ந்த அரசியல் களத்தில் ஊன்றி நிற்கிறோம். தமிழீழம் உள்ளிட்ட தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட அரசியலில் எமது இடம் சிறிதென்றாலும் இன்றியமையாத ஒன்றென்னும் அறிந்தேற்புப் பெற்றுள்ளோம்.

எம் கொள்கை நிலைப்பாடுகளையும் கருத்துகளையும் திங்கள்தோறும் வெளிவரும் ***உரிமைத் தமிழ்த்தேசம்*** மின்னிதழில் உங்கள் பார்வைக்குப் படைத்து வருகிறோம். ***அறிவுக்குரல்*** வாயிலாகவும் புரட்சியச் சிந்தனைகளை விரிய விதைத்து வருகிறோம். எம் விடாமுயற்சியின் பயனாக இயக்கம் சீராகவும் உறுதியாகவும் வளர்ந்து வருகிறது. அறிவியல் நோக்கும் ஈகவுணர்வும் உழைப்பார்வமும் கொண்ட புதிய ஆற்றல்களை இயக்கத்தின் பால் ஈர்த்துள்ளோம்.

ஆனால், இன்றைய அரசியல் சூழலின் தேவைகளை நிறைவு செய்ய எமது வலிமையும் வளர்ச்சியும் போத மாட்டா என்பதை உணர்ந்துள்ளோம். இயக்கத்தின் பரவலான வளர்ச்சிக்கும் மக்கள்-பணிக்கும் மேலும் முழுநேர, பகுதிநேர ஊழியர்களைக் களமிறக்க வேண்டும். சமூக ஊடகங்களை இன்னும் விரிவாகப் பயன்படுத்தவும், மெய்ந்நிகர் அரசியல் செயல்நிரலைக் கடைப்பிடிக்கவும் தொடர்ச்சியான பொருள்வளம் தேவைப்படுகிறது. இதற்கென எம் தலைமைக் குழுவில் பேசி முடிவெடுத்து இந்தத் திங்கள் பங்களிப்புத் திட்டத்தை அறிவிக்கிறோம்:

எம் இயக்கப் பணிகளில் உங்களுக்கு நம்பிக்கையும் அக்கறையும் இருக்குமானால் தொடர்ந்து ரூ.100/- முதல் 2000/-க்குள் திங்கள் பங்களிப்பாகத் தாருங்கள். இது ஓராண்டுக்கான திட்டமாகும். இதற்கான படிவம் நிரப்பித் தந்து இத்திட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டுகிறேன். சிறுதுளி பெருவெள்ளம்!

தமிழர் விடுதலைப் போர்முழக்கம்! சமூகநீதித் தமிழ்த்தேசம்!

நன்றி!

தோழமையுடன்

தியாகு / சென்னை /04/05/2020

**தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்**

பொதுச்செயலாளர்: ***தியாகு***

**திங்கள் பங்களிப்புப் படிவம்**

| | |
|---|---|
| **பெயர்:** | |
| **ஊர் / முகவரி:** | |
| **தொலைபேசி / புலனம் எண்:** | |
| **மின்னஞ்சல் முகவரி:** | |
| **திங்கள் பங்களிப்பு:** | **ரூ.** |
| **திங்கள்தோறும் பங்களிப்பு நாள்:** | |
| **பங்களிப்பு வழி (நேரில்/ வைப்பகக் கணக்கு/ ஏனைய வழி)** | |
| **இயக்கத்திடம் உங்கள் எதிர்பார்ப்பு:** | |